[illegible]

# கள்வர் கோமகன்

1930


JL
Y59 211.Km 211, N30 KL
N30.
212720.

செப்பனிடுபவர் பெயர் S. விமலா
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் 3/97
செப்பனிட்டு முடிந்த நாள் 3/97
சரிபார்த்தும் ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம் 25/3/97
கையொப்பம் 27/3/97



[illegible]
S. சோமசுந்தரசக்கரைப்பிள்ளை [illegible]
A. R. S. சுந்தரம்பிள்ளை [illegible] (பர்மா)

பைங்காநாட்டு

லோகாமிருத ஔஷதம்

வம்ச பரம்பரையானது.


கனவான்களே! (என் குடும்பத்தில்) வெகுகாலங்களாக [illegible] சோகை [illegible], மஞ்சள்காமாலை, [illegible] கால் இவைகளில் வீக்கம், வலி, எரிச்சல், பலஹீனம், அஜீர்ணம், அன்னத்துவேஷம், அக்கினிமந்தம், புளித்த ஏப்பம், வயிறுப்பொருமல், வயிற்றுவலி, [illegible], [illegible] சத்திருண்மம், நெஞ்செரிவு, [illegible], இரைப்பை [illegible] பெருச் [illegible] இவைகளின் [illegible], [illegible] இருமல், [illegible] இவைகளின் புண் [illegible], [illegible], [illegible] வயிற்றுவலி, மாதவிடாயி [illegible] பிரசவமானபின் ஏற்படும் வாயு, வலி, [illegible], [illegible], மலபந்தம், நித்திரை இல்லாமை, [illegible] பித்தவாயு, பித்தசீதபேதி, உஷ்ணவாயு, வெட்டைச்சூடு, மதுமேகம், கர்ப்பப்பையில் கெட்ட நீர் [illegible] கர்ப்பத்தை அழித்தல், படிப்பு வேலை இவைகளினால் ஏற்படும் மயக்கம் [illegible], [illegible], இம்மருந்தின் அஷ்ட குணங்கள், முதலியவைகளை [illegible], குழந்தைகளின் சகல [illegible], பாம்பரையாக நீண்ட காலமாக பைங்காநாட்டு மருந்து என்று பெயர் பெற்ற பொது நன்மைக் [illegible] குறைந்த விலையாக கொடுத்து வருகிறோம்.

[illegible] 28 நாள் [illegible] மருந்தின் விலை ரூ. 2-0-0
[illegible]

V. [illegible]

பைங்காநாடு போஸ்டு, தஞ்சை ஜில்லா.



12 MAR 1930

உ

கணபதி துணை.

# "கள்வர் கோமான்"

[தமிழ் மாதப் பத்திரிகை]


பத்திராசிரியர்:—தி. மு. சுவாமிநாதமாதவராயர்.

| | | |
|---|---|---|
| உயிர்-உ. | சுக்கில ஆண்டு ஐப்பசித்திங்கள் | மெய்-ரு. |


## திருச்செங்காட்டங்குடி கள்ளர் மடாலயம்.

சகோதரர்களே!

நம்முடைய முன்னோருள் ஒருவராகிய தொண்டைமானிளந்திரையன் காஞ்சிபுரியில் தோன்றி, செஞ்சிக்கோட்டையை இராசதானியாகக் கொண்டு, உலகினையாண்ட "செங்காடவன்" என்னும் காடவர் கோன் உண்டுபண்ணியகாரணத்தினால் "செங்காட்டங்குடி" என்னும் பெயரெய்தியதும்; மேற்கூறிய காடவர்கோனிடத்தில் அநுக்கராயிருந்து "வாதாவி" என்னும் நகரத்தில் போரில் வெற்றிபெற்ற பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டநாயனார் சித்திரைப்பணியில் சிவனடியார் திருவேடங்கொண்டு வந்த பைரவராகிய சிவபெருமானுக்கு பிள்ளைக்கறியமுதளித்துச் சிவபதம் பெற்றதும்; மேற்படி காடவர்கோன் செண்பகப்பூந்திருவிழா நடாத்திச் சிவ சொரூப மெய்தியதும்; மூவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களையுடையதும் ஆகிய

"திருச்செங்காட்டங்குடி" என்னும் சிவதலத்தில் மேல வீதியில் இற்றைக்கு 596 வருடங்களுக்கு முன் நம்முன்னோர்கள் "அன்னதானம்" நடைபெறும் பொருட்டு மடாலயம் அமைத்து பின்வரும் செப்புப்பட்டயம் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

செப்புப் பட்டயத்தின் நகல்—சுவஸ்தி ஸ்ரீ மஹா மண்டலேசுவரன். அரியராயவிபாடன். பாஷைக்குத்தப்புவாராயிர் கண்டன். கண்ட நாடுகொண்டு, கொண்ட நாடு கொடாதான். முத்தமிழாகர கண்டன். சோழ மண்டலத்துபோஜனசாரியன். பாண்டிமண்டல பாபஞசாரியன். - தொண்டைமண்டல பிரதிட்டாசாரியன். மனுநீதி சக்கரப்பிரத்து, பிருதிவிராச்சியம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்து, கலியாப்தம் நாலாயிரத்து நானூற்று முப்பத்தி நாலு இதின் மேல் செல்லா நின்ற விக்கிரமஹூ தையீ ௰௫-உயும் சோமவாரப் பூசநட்சத்திரமும் பஞ்சமியும் கூடிய சுபதினத்தில் ஐம்பத்தாறு தேசத்துக்குத்திலகமாகிய சோழமண்டலத்தில் காவேரி தீரம் சூழ்ந்த தலத்தில் அறுபத்தாறு யோங்கோடி தீர்த்தத்திலுமா விசேடமான மூவர்பாடலும் பெற்ற சிவதலம் நூற்றுத்தொண்ணூறும் முன்னுடையதாயிருக்கிற சிவதலங்களிலே அன்னதானத்துக்கு விசேடமான திருச்செங்காட்டங்குடியில் பதினெட்டு சாதிக்கும் மடமும் பணிவிடையும் நடத்திவருகிற முறையினாலே நம்முடைய மரபு காணப்பட்டதால் அனைவர்களும் கூடி, திருவாத்தி மகாமண்டபத்தில் பரிகல பரிச்சின்னமுங்கூடி, ஆதிசண்டேசுர நாயனார் திருவாய் மலர்ந்தருளிய மடதருமசாசனப்பட்டயம் ஞானபூரியான திருச்செங்காட்டங்குடியில் மேலவீதியில் கீழ்சாரின் வீதிக்கு கிழக்கு சூரியதீர்த்தத்திற்கு மேற்கு வெள்ளாழர் மடத்துக்கு வடக்கு வாணியர் மடத்துக்குத் தெற்கு இதற்குட்பட்ட கீழ்மேல் அடி (245) தென்வடல் அடி (52) இந்த பரமேசுவர கம்பியார் கையால் எழுதிய அருதப்பாய் விலைக்கிரய சாசனம் வரத்தி காஞ்சிபுரத்திலிருக்கும் செப்பேட்டுப் பிரமாணம் தாம்பிரசாதனம் எழுதிக்கொடுத்த அபிஷேகக் கட்டளை பரமேசுவர தம்பிரான் கம்பியார், தடுத்தாட்கொண்ட பண்டாரமும் இவர்கள் அறிய மடமும் கட்டி, மடத்துக்கு சம்பந்த தெகிசுவரத் தாபிதஞ்செய்து, புத்திர பவுத்திர பாரம்பரையாய் ஆண்டு அநுபவித்துக் கொள்ளக்கடவதென்று வைத்து, தருமபரிபாலனம் நடக்கவேண்டியதற்கு நம்முடைய மரபினுள்ளோர் "அஞ்சவிலாநாடு, அஞ்சமூலநாடு, அஞ்சவனம்பற்று நாடு அடைக்கலங்காத்த நாடு, அண்டக்குளநாடு, அம்புக்கோயில் நாடு, அன்னவாயிற்பற்று நாடு, ஆமையூர் நாடு, ஆலங்குடி நாடு, இராசவள நாடு, இருப்புதல் நாடு, உறத்தூர் நாடு, ஊமத்தநாடு, ஊரிவான் கோட்டைநாடு, எப்பாப்பாநாடு, எரிமங்கல நாடு, ஒபதூர் நாடு, ஒலூர் நாடு, ஒக்கூர் நாடு, கீழை ஒக்கூர் நாடு, கண்டி



வளநாடு, கத்திரிமேழை நாடு, கம்பனூர் நாடு, கற்பிங்கநாடு, கல்லாகோட்டை நாடு, கள்ளந்தகுடி நாடு, காசா நாடு, காசாங்கோட்டை நாடு, காரியோகநாடு, காவனூர், காவிக்கோவலநாடு, கானம் பூண்டி நாடு, காஞ்சி, கிளியூர் நாடு, குண்டசகோயில் நாடு, குன்னுவாரங்கி நாடு, குளநின்றநாடு, குளமங்கலநாடு, குறுக்கைநாடு, [பெரிய] கூத்தப்பநாடு, கோட்டைப்பற்று நாடு, கோயிற்பற்றுநாடு, கோனூர், கோனூர் நாடு, சித்திரகுடி நாடு, சித்தப்பற்று நாடு, சிலப்பு நாடு, சிறுவாயில் நாடு, சுந்தர நாடு, செங்கணி நாடு, செங்காட்டு நாடு; செங்குள நாடு, கீழ் செங்குள நாடு, மேல் செங்குள நாடு, கீழ்செங்கைநாடு, சோழப்பாலை நாடு, தந்தி நாடு, மேலைத்துவாகுடி நாடு, கீழைத்துவாகுடி நாடு; தென்பற்று நாடு, தென்மலைநாடு, தென்னவநாடு, பிரமி நாடு, நீர்வதி நாடு, கீழ்செல்லி நாடு, நெடுவூர் நாடு, பட்டுக்கோட்டை வளநாடு, திருப்பத்தூர் நாடு, பெலிப்பத்தூர் நாடு, பனையக்கோட்டை நாடு, பாகையூர் நாடு, பாப்ப நாடு, பிங்களகோட்டைநாடு, பிரம்பூர்நாடு, புன்னையூர் நாடு, பூதியூர் நாடு, பெருங்களூர் நாடு, மையங்க நாடு, திருமங்கலக்கோட்டை நாடு, மதகர்பிறகுடி நாடு, மருங்காபுரி நாடு, மழநாடு, மனைப்பள்ளிநாடு, மாலைநாடு, மின்னாத்தூர் நாடு, மிசெங்கிளி நாடு, முகரி நாடு, வடமலை நாடு, வடிகூர் நாடு, வத்தனுக்கோட்டை நாடு, வல்லநாடு, வன்னாடு (வெண்ணுவல் நாடு), வாகனாநாடு, வாராப்பூர் நாடு, வித்தி நாடு, விற்குடி நாடு, வீரக்குடி நாடு, கீழ்வேங்கை நாடு, அஞ்சூர் நாடு, ஆவூர்வட்டைநாடு, கண்டர் மாணிக்க நாடு, கன்யப்பட்டி நாடு, கறம்பநாடு, கொரநாடு, கீழைக்கோட்டை நாடு, (கீழக்குடி நாடு), கொட்டைக்குடி நாடு, சிறுகுடி, தமரக்கி நாடு, பட்டமங்கல நாடு, பாப்ப நாடு, பத்துக்கட்டு நாடு, மாகளி நாடு, மல்லாகோட்டை நாடு, மேலைமகாநாடு, மேலூர் நாடு (கடநாடு), வெள்ளனூர் நாடு, ஆற்றங்கரைநாடு, இம்பல்நாடு, இரும்பாநாடு, இறைவசேரிநாடு, உஞ்சேனை நாடு, எழுகோட்டை நாடு, கப்பலூர் நாடு, குன்னங்கோட்டைநாடு, சனமேகவள நாடு, செம்பொன்மாரி நாடு, தென்னவி நாடு, தேர்போகி நாடு, மூத்தநாடு, வடபோகி நாடு, வாதலூர் நாடு" இந்நாடுகளிலும் ஐம்பத்தாறு தேசத்திலும் உண்டான உறவின் முறையார் இருந்து திருநாமமிட்டபேர்கள் தருமம் வேறுமென்று தேடினார்கள். தருமத்துக்கு "குடிக்கு ஒரு பணமும்; அம்பலத்துக்கு இரண்டு பணமும்; குதிரை குடைபெற்றவர்கள் அஞ்சுபணமும்; தண்டிகை பெற்றவர்கள் பத்துப்பணமும்; கலியாணத்துக்கு இரண்டு பணமும்" வருடா வருடம்கொடுத்து நாங்கள் நடத்திவருகிறோம். இந்த தருமத்துக்கு "வாக்குச் சகாயம், சரீரசகாயம், அர்த்தசகாயம்" பண்ணின பேர்கள் குபேரசெல்வம் உண்டாகியும் "சிறுத்தொண்டநாயனார், வெண்காட்டு நங்கை, சந்தன நங்கை, சீராளதேவர்" இவர்கள்

அடைந்த பதவி பெறுவார்கள். இந்த தருமத்துக்கு விக்கினம் பண்ணினவர்கள் "கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலேயும், மாதாவைப் புணர்ந்த பாவத்திலேயும், குருவைக்கொன்ற தோஷத்திலேயும், சன்னியாசியைக்கொன்ற பாதகத்திலேயும்" போவார்கள்.

1910-ஆம் அக்டோபர்-மீ 7-உயில் மேற்படி மடாலயத்தில் குடியிருந்து வந்த வைத்தியநாதபண்டாரத்தின் குமாரர் புருஷோத்தமபண்டாரம் என்பவர் மேற்படியூர் சுவேதாரண்யபிள்ளை அவர்கள் புத்திரர் கந்தசாமி பிள்ளை என்பவரிடம் ரூபாய் 200 பெற்றுக்கொண்டு கீழ் நிலம் உள்பட சுத்தக்கிரயசாசனஞ்செய்து கொடுத்துவிட்டார்.

1926-ஆம் மார்ச்சு-மீ 30-உயில் நெடுஞ்சேரி அறம்பிகு திருவாளர் சீநிவாசநாய்க்கர் அவர்களால் பூண்டி பெருநிலமன்னர் திருவாளர் திருவாளர் அ. வீரையவாண்டையார் அவர்கள் பேருக்கு மேற்கண்ட கந்தசாமி பிள்ளையிடம் ரூபாய் 300 கொடுத்து சுத்தக்கிரயசாசனம் வாங்கப்பட்டு மூப்பயத்தங்குடி அருள்மிகு திருவாளர் சா. முருகையவாண்டையார் அவர்களால் ரூபாய் 1500 செலவிட்டு முற்பகுதியில் சிறுபாகம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு அடியிற்கண்டவர்கள் ரூபாய் 456 உதவிசெய்திருக்கிறார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| திருவாளர் | சீநிவாசநாய்க்கர் | அவர்கள் | நெடுஞ்சேரி ரூ. | 40 |
| ,, | முத்தையாசேர்வை | ,, | பாமனல்லூர் | 25 |
| ,, | அ. நாராயணசாமிசேர்வை | ,, | குத்தாலம் | 10 |
| ,, | மு. நாராயணசாமிசேர்வை | ,, | ,, | 10 |
| ,, | கோவிந்தசாமிபோக்காட்டியார் | ,, | ,, | 10 |
| ,, | வீராசாமி முதலியார் | ,, | ,, | 5 |
| ,, | சுப்பையா சேர்வை | ,, | ,, | 5 |
| ,, | பழனிவேலுதெய்வகொண்டார் | ,, | செய்க்குப்பை | 25 |
| ,, | கோவிந்தசாமி தேவர் | ,, | தஞ்சாவூர் | 20 |
| ,, | வேதவாண்டையார் | ,, | மடப்புரம் | 200 |
| ,, | சா. சாமிநாதவாண்டையார் | ,, | காசிங்கப்பேட்டை | 25 |
| ,, | சுந்தரப்பா வாண்டையார் | ,, | ,, | 2 |
| ,, | அப்பாவு வேளாண்டையார் | ,, | ,, | 1 |
| ,, | கந்தசாமி வாண்டையார் | ,, | ,, | 2 |
| ,, | கோபாலசாமி வாண்டையார் | ,, | ,, | 3 |
| ,, | வைத்திலிங்கவேளாண்டையார் | ,, | ,, | 5 |
| ,, | சபாபதி வாண்டையார் | ,, | ,, | 2 |



| | | | | |
|---|---|---|---|---|
| திருவாளர் | சுப்பிரமணிய தஞ்சைராயர் | ,, | அலங்குடி | 10 |
| ,, | பக்கிரி பொன்னங்கொண்டார் | ,, | மரூர் | 5 |
| ,, | சாமிநாதஉடையார் | ,, | முகந்தனூர் | 25 |
| ,, | சு. அருணாசலதென்கொண்டார் | ,, | ஏறுவாடி | 25 |

மேற்படி கட்டடம் முழுமையும் கட்டிமுடிப்பதற்கு ரூ. 5000 செலவாகக் கூடியதாயிருக்கிறது. நம் முன்னோர்கள் ஏற்படுத்திய அன்னதானத்தை மறைய விடுவது தகுதியல்ல. அன்னதானமானது போட்டவருக்கும், உண்டவருக்கும் பெருமகிழ்வளிக்கக்கூடியது. அன்னதானத்தை விட உயர்ந்த தானம் இவ்வுலகில் இல்லை. சாதி பேதமின்றி அன்னம் போடுவதற்கு மேற்படி மடாலயமே ஏற்ற தாகும். அன்றியும் சிறுத்தொண்ட நாயனாருடைய குருபூசையு மாகும். பற்பல இடங்களில் நம் சமூகத்தவர்கள் நடத்தும் சிறுத்தொண்ட நாயனாருடையகுருபூசை அமுதுபடையல் மகோத்சவத்தை மேற்படி மடாலயத்திலேயே நடத்துவது பெரும்பேறாகும். புனர் மேற்படி மடாலயத்தைக் கட்டிமுடிப்பதுபோல பொருள் வழங்கிப்பதாக கேள்விப் படுகிறோம். அங்ஙனம் பொருள் வழங்கிய புவர்கள் இன்னாரென்று நமக்குப்புலப் படவில்லை.

திருவாளர் சா. முருகையவாண்டையார் அவர்கள்,
மூப்பயத்தங்குடி, சேந்தூர் P. O.,
போளம்வழி.

என்ற விலாசத்துக்கு அனுப்பும் ரூபாய்கள் மேற்படி மடாலய தருமத்துக்கு உபயோகப்படக் கூடியதாயிருந்ததினால் நம் சமூகத்தவர்கள் யாவரும் தங்கள் தங்களாலியன்றவரையில் மேற்படி சா. முருகையவாண்டையார் அவர்களுக்குப் பொருளுதவி செய்வார்களாக.

(ப-ர்.)

---

# அரசங்குடி

## கள்ளர் வாலிபர் சங்கம்.

1929-ஆம் செப்டம்பர்-மீ 29-ம் தேதியன்று மாலை 6·30 மணிக்கு திருச்சி தாலூகா அரசங்குடி கிராமத்திய பொதுமன்றத்தில் கள்ளர் வாலிபர் சங்கம் ஒன்று திருவாளர் A. K. சாமியையர் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் சுமார் இருநூறு கள்ளர் வாலிபர்களும், மற்றும் அநேக பெரியார்களும், விஜயஞ் செய்திருந்தார்கள்.

தலைவரவர்கள் குழுமியிருந்த கள்வர் வாலிபர்களுக்கு கல்வியறிவு கூறியபின், "தமிழ்ச்சங்கமும்" என்னும் ஓர் விரிவுரை நிகழ்த்தியதில் பண்டைய கள்வர்களிற் சிலர் புலவர்பெருமக்களாய்த் தமிழ்ச்சங்கத்தினங்கத்தினராய் நின்று நிகழ்த்திய அரும்பெரும் செயல்களை விளக்கியும், மற்றும் பெரும்பான்மையோர் அரசர்களாயும், குறுநிலமன்னர்களாகவும், சேனைத்தலைவர்களாகவும் நின்று புகழ் பெற்றுவாழ்ந்த வரலாறுகளையும்; அவ்விதமே தற்போது கள்வர் வகுப்பினரில் மன்னரும் சமீன்தார்களும், தலைவர்களும், மற்றும் கல்வியிலும் அறிவிலும் மிக்கபெரியோர்களும் வாழ்ந்து வருகின்றனர் என்றும் கூறி, தற்கால கள்வர் வாலிபர்கள் தாங்களும், தங்கள் நாட்டின் தங்கள் தாய் மொழியாகிய தமிழும் தழைத்து ஓங்க இடையறாது பணியாற்றவேண்டுமென்று அன்போடு சொல்லிமுடித்தனர்.

## உபந்நியாசத்தின் சுருக்கம்.

தமிழ்நாடு மூன்றனுள் ஒன்றாய சோழநாட்டின், சமஸ்தானத் தமிழ்மக்களாய்ப் பிறந்த நாம் தமிழையும், தமிழ்மக்களின் ஒழுக்கங்களையும், தமிழ்நூல்களையும், அவர்களுள் ஒருவகுப்பினராம் நம் கள்ளர்களையும் பண்டைக்காலமுதல் வந்தவாறே வளர்த்தற்பொருட்டு, அவைத்தலைவர், அங்கத்தினர், அவைத்தொண்டர்கள், கண்காணிப்பாளர் முதலியவர்களால் இக்கள்ளர் வாலிபர் சங்கம் இன்று விளக்கம்பெற்றுள்ளது. எத்தனை இடுக்கண்கள் வரினும் இத்துணைத் தடையின்றி வளர்ந்து வரும் நம் தமிழ்மொழியைப்போல மாண்பு பெற்று இச்சங்கமும் எல்லாம்வல்ல இறைவனருளால் நன்னிலை அடைந்து வாழ்க என்று வாழ்த்துக்கூறி; பின், தமிழ்நாட்டில் இப்பூகோளத்தில் முதன்முதல் தோன்றியபாகம் தென்பாகமென்றும், அதற்கு அங்குள்ள கற்பாறைகளும், அப்பாறைகளின் கண் காணப்பெறும் மனிதஎலும்புக்கூடுகளும், மேற்சொல்லப்பட்டதற்குச் சிறந்த சான்றாயிருக்கின்றன வென்றும் எடுத்துக்காட்டி, அக்காலந்தொட்டு தென்பாகமாகிய நம் நாட்டில், மக்கள் தமிழ்மொழியே வழங்கிவந்தனர் என்பதற்கு, தொல்காப்பியம் முதலிய பழைய நூல்களும், அடியும், கல்வெட்டு முதலியவைகளிலும் காணப்படுகின்ற அரசர்பெருமான்கள் தமிழரசர்கள் என்பதும், தமிழ்ச்சங்கங்கள் பல இருந்தமையும், தமிழின் பழமைக்குச்சான்றாகும் என்றும் கூறி, அதுபோல் இக்காலத்தும் தமிழும், தமிழ்ச்சங்கங்களும், எங்கும் நின்று நிலவவேண்டுமென்றும், அவ்வாறு செய்வதற்கு அவர்களே மிக்கத்தகுதியும், பொருத்தமுமுடையவர்களென்றும், அதன் சார்பாக கீழ்க்கண்டசபையின் நோக்கங்கள் நாளுக்குநாள் வளர்ந்தோங்கி நலன் அளிக்கவேண்டுமென்றும், இங்கு கூடியுள்ள கள்வர் வாலிபர்கள் அதன் பொருட்டு இடையறாது உழைத்து வரவேண்டுமென்றும் கூறிமுடித்தனர்.



## சங்கத்தின் தீர்மானங்கள்

1. இவ்வூரில் கள்வர் வாலிபர் சங்கம் ஒன்று நிறுவவேண்டுமென்றும், அதன் அங்கத்தினராய் இவ்வூரில் எல்லாவாலிபர்களையும் சேர்க்கவேண்டுமென்றும், இச்சங்கம் மாதமொருமுறை கூடவேண்டுமெனவும் தீர்மானித்தது.

2. கள்வர் வாலிபர்கள் இவ்வூரிலும், மற்றையவூர்களிலும் ஆரம்பக்கல்வி, உயர்தரக்கல்வியில் இடையறாதிருப்பதுமாயும், முன்னேற்றி கல்வியின் தேர்ச்சியடைவதற்கு வேண்டிய பல நன்மைகள் செய்யத்தீர்மானித்தது.

3. கள்வர் வாலிபர்கள் தங்கள் கடமைகளை தங்கள் முன்னோர்பெருமைக்கு ஏற்ப சீர்செய்து நடத்தவேண்டிய முயற்சிகள் செய்யத்தீர்மானித்தது.

4. சுகாதாரவிடயங்களின் முக்கியத்தை ஒவ்வொரு கள்வர் வாலிபரும் அறிந்து தன்னிடத்தும், பிறரிடத்தும் சுகாதாரவழி கையாளுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யத்தீர்மானித்தது.

5. ஒவ்வொரு கள்வர் வாலிபரும் தான் மேற்கொண்ட தொழிலில் மிக்க ஊக்கமாய் மற்றவகுப்பினர் போன்று நடாத்தி முன்னேற்றமடையவேண்டிய முயற்சி செய்யத்தீர்மானித்தது.

6. கள்வரேயன்றி மற்ற வகுப்பினரையும் உறுப்பினர்களாக அங்கீகரிக்கத்தீர்மானித்தது.

7. கடவுள் உண்டு என்பதையும் பண்டைய தமிழர் கொள்கைக்கும், தமிழர் சமயத்திற்கும் மாறுதலில்லாத புதிய பழைய ஏற்பாடுகளையும் இச்சங்கம் ஏற்றுக்கொள்ளுகின்றது.

8. கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவைகள் தக்க இடங்களிலும் பரவிடத்திலும் நாளுக்குநாள் செழித்துவளர இச்சபை விரைந்து முயலத் தீர்மானித்தது.

9. வாலிபர்களுள் ஒற்றுமையைப் பெருக்கி ஒருவரோடொருவர் அன்பாய் அன்பை வளர்ச்செய்து, அவர்களுக்குள் கட்டுப்பாட்டையுண்டாக்கவும், பொறுமையைக் கருதும் எண்ணத்தைப் பண்படுத்தவும், சீலத்தினை ஒழுக்கமுண்டாக்கவும், கல்விஞானம், ஒத்துழைப்பு, சகிப்பு, இன்னும் இவைபோன்ற நற்குணங்களையமையவும், சமயத்தொண்டு, தேசத்தொண்டுபுரியவும் இச்சபை தீர்மானித்தது.

## முடிவு.

இத்தீர்மானங்கள் முடிந்தவுடன் இப்பொதுக்கூட்டத்தில், இச்சங்கத்தை நடாத்துவதற்கு கீழ்க்கண்டவர்கள், கீழே குறிப்பிட்டிருக்கும் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

திருவாளர் A. K. சாமிபையா அவர்கள் — கௌரவத்தலைவர்

| | | |
|---|---|---|
| ,, | M. அன்னையப்ப பாண்டுராயரவர்கள் | தலைவர்கள் |
| ,, | துரைராச நாட்டாரவர்கள் | |
| ,, | காமாட்சி நாட்டாரவர்கள் | |
| ,, | A. தியாகராசன், | காரியதரிசி. |

சங்கம் முடியு முன்னரே 56 வாலிபர்கள் சங்கத்து அங்கத்தினர்களாகக் கையொப்பமிட்டார்கள். முடிவாய் கடவுள்வாழ்த்து நிகழ்த்தி, தலைவருக்கும், மற்றுமுள்ள கனதனவான்களுக்கும் வந்தனோபசாரம் கூறியும், கள்வர் முன்னேற்றத்திற்காக இடைவிடாது தன்னலம் கருதாது உழைத்து வரும் கள்வர்கோமானுக்கும் அதன் ஆசிரியருக்கும் நீண்டவாயுளுண்டாக இறைவனைப் போற்றிக்கூட்டம் இனிதுகலைந்தது.

இப்படிக்கு,
தங்கள் ஊழியன்,
A. தியாகராசன்,
காரியதரிசி.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

---

That man is not poor whose means are small, but whose desires are controlled. —Smiles.

இச்சைகளை யடக்குந்திறவனுடைய வரும்படி அற்பமாயிருந்தாலும் அவன் ஏழையல்ல. —ஸ்மைல்ஸ்.

Beauty, Good, and Knowledge are three sisters— —Tennyson.

அழகு, நன்மை, அறிவு, இவை மூன்றும் சகோதரிகள்— —டென்னிசன்.



Of all the wonders that I have yet heard, It seems to me most strange that men should fear. -Shakespeare.

நான் கேள்விப்பட்டிருக்கிற ஆச்சரியங்களெல்லாவற்றிலும் மிகவும் புதுமையானது மனிதர்கள் பயப்படுவதே. —ஷேக்ஸ்பியர்.

The ways to enrich are many, and most of them foul. -Bacon.

பணக்காரனாகப் பலவழிகளுண்டு; அவைகளிலநேகம் அக்கிரமமானவை. —பேக்கன்.

Silence is sometimes more significant and sublime than the most noble and expressive eloquence, and is on many occasions the indication of a great mind. -Addison.

அதிககம்பீரமும் வெளிப்படையுமான வாக்குசாதுர்யத்தைவிட மௌனமே சில சமயங்களில் மிகவும் விசேடமும் மேன்மையுமானது. மௌனமே அநேக சமயங்களில் புத்திசாலியின் அறிகுறியுமாயிருக்கிறது. —அடிசன்.

The most manifest sign of wisdom is a continual cheerfulness. -Montaigue.

ஞானத்தின் வெளிப்படையான அடையாளம் ஓயாத மகிழ்ச்சியே. —மாண்டேக்.

To strive with difficulties, and to conquer them, is the highest human felicity. -Johnson.

துன்பங்களோடு போர்புரிந்து அவைகளின்மேல் வெற்றிகொள்வதே மனிதனுக்குரிய மேலான இன்பம். —ஜான்சன்.

Of all the passions the strongest, cruellest, and most stubborn, is the sex-passion. -Tolstoy.

எல்லா மனோவிகாரங்களிலும் காமமே மிகவும் பலமும் குரூரமும் பிடிவாதமுமுள்ளது. —டால்ஸ்டாய்.

It is virtue alone that can give birth, strength, and permanency to friendship. -Cicero.

நட்புக்குப் பிறப்பும் பலமும் நீடிப்பும் கொடுக்கக்கூடியது நேர்மையே. —சிசேரோ.

V. S. மாசிலாமணி நாடார்.

## மக்களின் கடமை—தொண்டு.

( ரா. ஆ. செ. ஆதிமைமூகன், கோற்றன், பர்மா. )

அன்புகெழுமிய சகோதரர்களே!

இக்கட்டுரைக்கு தொண்டெனும் விழுமியதலைப்பீந்து தீட்டற்கு முயல்கிறேன். இப்பரந்த உலகின் பாகுபாடங்களிலும், நமது பாரதகண்டத்திலெனும் பூமியிலும் தொண்டு, தொண்டு, என்ற பிரசங்கமானது மிக்க கொந்தளிப்போடு பனி பரந்த கோட்பாடுகள் குறித்து வினையாற்றப்பட்டுவருகிறது. இதற்கு தனித்தகட்டுரையும் வேண்டற்பாற்றோ என்றியம்பத்தக்க அத்தனையுட் கொள்கைகள் உண்டாயிருக்கின்றன. ஆயினும் உண்மையிற் பொதுசன நன்மருதி தொண்டாற்றுநர் மிகச்சிலராகவே இருக்கின்றனர். ஆகலின், அறிஞர்களொவ்வொருவர்களும் உண்மைத்தொண்டர்களாய் பொதுநல வேண்டுமென்ற பேரவாவே என்னை இக்கட்டுரைவரையத் தூண்டிற்று.

தொண்டு எனும் பொதுவிதிச்சொல்லானது பல திறப்பகுதிகளை யேற்றுவரும். எப்பகுதியேற்றுவரினும் பொது நலம் பொதிந்ததொன்றே. தொண்டெனும் விழுமிய செம்பொருட்பயத்து மிளிர்வதாகும். அத்தொண்டு யாவருக்குமப்புமிடைத்து விளங்குகிறதோவெனின், இல்லவே இல்லை. சிலரிடத்து தான் பிறர் நலம் பேணலெனும் பெருமை காணப்படுகிறது. அங்ஙனம் பிறர் நலம் நாடுவோர் சிறுபான்மையாகவும் தன்னலம் நாடுவோர் பெரும்பான்மையாகவுமிருக்கிறார்கள். அத்துவித நலத்திலும், பொது நலம் நாடுவதே மிக்க பெற்றிவாய்ந்ததென்பது யான் வலியுறுத்தவேண்டுவதில்லை.

சில சுயநலப்புலிகள் பகற்றோல் போர்த்தி பூதர்கள் முன்னர் பெயரோ பொருளோ ஏதோவொன்றைப்பெறுவா னுவல்லியவர்களாய் எங்கள் உடல் பொருளாவியாவையும் அர்ப்பணஞ்செய்துவிட்டோம், எவ்விடுக்கண் நேருவதாயினும் அஞ்சோம் பின்னிடோம் என இன்னும்பற்பலவிதமாய அழகுபெறபலவார்த்தைகளைத்திரட்டி விசாலமாக கேட்பார் பிரேமைகொள்ளும்படி அத்துணை சாமர்த்தியமாக பொதுநலம் பேசுவதென்ற பல்லவியை பேசுடபோற்று நடிக்கிறார்கள். அவ்வேடதாரிகளின் உண்மையுணராத பல பேர்களுங் கூட அவர்களுக்கு ஆதரவளிக்க முன்வருகிறார்கள். அவ்வளவுதான். அவர்கள் நாமம் யாண்டும் பரவைப் பரப்பித்துவிடுகிறது. பாவனும் தாங்கள் முன்னர் அறைகூவியதை மறந்து தன்னலவுருவை புறத்தே காட்டி



எதிர்மறைவினையிற் நிகழ்கின்றனர். அப்போதுதான் இவர்கள் உருவெளித்தோற்றப் பொதுமக்கள் களியுணர்கிறார்கள். இத்தகைய அந்நாணமற்றவினையாளர்களின் வஞ்சகங்களும், சூழ்ச்சிகளும் சில ஏழைமதியாளரை அக்கனமாக்கியும் இங்ஙனமாக்குவேம் என ஆசைகாட்டி வளர்த்து ஏமாற்றி விகடமாக்குவதும் இன்னும் என்னென்னவோ கலவொழுக்கங் பலவினையுணர்த்த தாக்கி ஓட்டிவிடுப்பதென்னெனி இயற்றும் மாயசாலமும், பேதமும் வரைய வியலாவென். இத்தகையோர்களால் எத்தனை சமூகசபைவாசியலாதியான பன்னெறிகளும் சிதைந்தழிந்து தேய்ந்துவிடுகின்றன. இவ்விதத் தொண்டர்கள் அறிஞர்களின் ஆராய்ச்சிச்சாலையில் நுட்டுக்கு நாலு காசுக்கிரண்டாய் மலிந்துவிட்டார்கள். இவர்களின் தொண்டும் தொண்டென்பாற்பட்டதாமோ. உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசும் இவர்கள் என் தாய்மார்கள் குலவைத் திருவிப்பித்தார்களென்பதோடமையவாம்.

பொதுநலத்தொண்டர்களின் மாண்புபற்றி அதிகம் விபவரிக்க வேண்டியதில்லை. ஆண்டவன் இம் மனித உருவங்களை தோற்றுவித்த அவ்வூழியின் மனிதரின் வாழ்க்கையின் போக்கிருந்தமையும் தற்காலவாழ்க்கையின் போக்கிருப்பமையும் என்ன என்ற கேள்வி பெறுமாயின் பொதுநலத்தொண்டின் மாண்பு விளங்காமற் போகா. மக்களின் பண்டைய நிலையும் இன்றைய நிலையும் இடை நிகழ்வும் எவரால் என் நிகழ்ச்சியால் ஏமது ஏற்றம் என்பதை சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வுலகத்தையுற்று நோக்குமி இறைவன் திருவருட்டிறம் செவ்விதிற்புலனாகல்கூடும். ஆ! ஆ! மன்பதைதகட்குமட்டும் தனி சிறப்பாக ஒப்புயர்வற்ற சிந்தனாசக்தியால் உய்த்துணரும் பெரும்பேறுண்டாக்கியிருக்கிறான். எவ்வுயிர்க்கு மேலாமுயர்பதவியீந்த அவனை மறந்து தம்போன்ற மனிதர் நலன்கூட நாடாது அவர்கள் துன்பங்களொடும் அதற்கேதுவாகவும் இறைவன் நோக்கத்துக்கு மாறுபட்டுவாழ்தல் எங்ஙனம் மக்களின் பகுத்தறிவுக் கேற்பனவாகும்.

இப்பரந்த பூமியில் சடப்பொருள் உயிர்ப்பொருளென இரண்டு வகையுடைத்து. உயிரற்ற சடப்பொருளைப்பற்றி ஈண்டு ஆராயவேண்டியதில்லை. கற்றறப்பலரதிகமா யனித்தலோடு எமக்கு பற்பலவிதத்தில் இன்றியமையாத பேறுதவியாற்றி எம்மை வாழ்விப்பின் பூட்டுமைவாயில்லாதும் தரு செடி கொடிமுதலான இயக்காற்றினை பொருபுறமிருக்கட்டும். இயங்குதிணையிலும் கண்டாரு காட்சியாய் இனிமைபயப்ப அஞ்சிறை விரித்து ஆடல் பாடல் பறந்தலாதியன செய்யும் பறவை இனங்களையும் விட்டுவிடுவோம். நல்லைவையோனி எழுவகைத்

தோற்றம் எனும்புகடை என்பதுநான்குலட்ச சிலபேதங்களென்ற வற்றிலே மற்ற மூவகையோனி அறுவகைத்தோற்றத்தை அடியோடு விட்டுவிடுவோம். கருப்பையினின் றுயிர்ப்பனவும் நடப்பனவுமாகிய வகுப்பில், யாம் ஓர் பிரிவே. இக்காலத்தில் மனித சமூகத்துக்குள் ளேயே மேல் சாதி கீழ் சாதி யெனும் சாதிப்பேய் தலைவிரித்தாடுகிற போழ்து, மிருகங்களுக்கும் எமக்கும் (மானுடர்க்கும்) பொருத்தம் கற்பிப்பதெவ்வாறுமென்றெண்ணமாட்டீர்களென்றே நம்புகிறேன். மக்களினத்தோற்றுவாயின் அம்மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வாழ்க்கை முறையில் பேதமில்லை யென்பதே அறிஞர்களின் துணிபு. அதன்றியும் தொண்டா உயர்ந்தோமெனும் கோளரிஞவர்க்கும் எடுத் துக்காட்டாமென்பதை மீண்டும் விளக்க வேண்டுவதில்லை யென்றே கருதுகிறேன்.

முற்கால மக்கள் வாழ்க்கையின் போக்கும் தற்கால மக்கள் வாழ்க்கையின் போக்கும் சிறிதாராய்வோமாகின் தொண்டின் பெரு மையும் வாழ்க்கையின் முற்போக்கும் வெள்ளிடைமலை யெனவிளங் கும். கிறிஸ்தவ சமூக சம்பிரதாயப்படிப்பார்ப்பதானாலும் ஆதியிற் கர்த்தர் ஆதாம் ஏவாளென்ற, ஆண் பெண்ணிருவரையும் படைத் தாரெனவும்; ஆராய்ச்சிக்காரர்கள் ஒரு வகைக்குரங்கினின்றே மனி தத்தோற்றமுண்டானதென்றும் கூறுவர். எப்படியாயினும் யாம் கூறும் வாழ்க்கை முறையின் மாற்றம் வழுத்துவாரின்று. ஆதலின் ஆதாம் ஏவாளென்ற கூற்றையே கொள்வோம். அவர்களினின்று மக்களினம் பெருகிற்று. அப்பண்டைய நிலைக்கும் இன்றைய நிலைக் கும் உள்ள தாரதம்மியத்தை விளக்கி மேற்செல்வாம்.

பண்டு பல்பதைகள் ஆடை முதலியனவின்றி மான உணர்ச்சி யற்று மாக்களோடு மாக்களாய் அடர்ந்து செறிந்த மலைவனங்களில் கண்டதையுண்டு காலம் கழித்ததாக கூறப்படுகிறது. இப்போழ்தோ ("மயிர் நீப்பின் வாழாக்கவரிமாவன்னார் உயிர்நீப்பர் மானம்வரின்") என்ற செந்நாப்போதார் செம்மொழிக்கிலக்காக தனிமிகு மானவுணர் ச்சியுடையவர்களாய் நவநவமான பட்டாடை முதலியவாடைக ளாலும் சட்டை கோட்டுமுதலிய சொக்காய்களாலும் பல்வகை காலணிகளாலும் பசும்பொற்றங்கத்தின் நவமணிகுயிற்றிய பூட ணங்களாலும் சோபனஞ்செய்து அழகவையுணவின்று ஏழ்நிலை மாடத்து வாழ்கிறார்கள். ஏழ்நிலை மாடங்கூட வல்ல; எழுபதுநிலை மாடமென்றுகூட வியம்பலாம். தற்காப்பானிமித்தம் மாக்கொம்புகளை கையாண்ட மக்கள் பல்வகை உலோகங்களாய கொலைக்கருவிகளும் விடப்புகைகளும் இன்னும் பல்வகை நூதனங்களும் ஒரு தேசத் தையே நொடிப்போழ்தில் அழித்துவிடத்தக்கதாக கண்டுபிடித் திருக்கிறார்கள். கால்நடையிற் றிரிந்தலைந்த மக்கள் ககனமார்க்கத்தில்



விமானத்திற்பறக்கும் காட்சிதானென்னே! ஒரு முக்கியச் செய் தியை (ம) மைலிலுள்ள ஊர்களுக்கனுப்ப விழித்த மனிதர் ஆருயிர மைலுக்கப்பாலுள்ள ஒருவரோடு உடனுக்குடனே பேசிக்கொள்கி றார்கள். சக்திமுக்கி கல்லென்ற ஒருவகை சாதனத்தால் நெருப்புண் டாக்கத்தினடாட்டப்பட்ட எம்மனோர் மின்சாரசக்தியின் பிரயோகம் விளம்பற்பாற்றே. இன்னும் நீராவிக்கப்பலாதியன ட்ரெயின் மோட் டார் தந்திக்கம்பி முதலியவைகளை விளம்பல் வேண்டுங்கொல். விகார ஒலிவடிவிலிருந்த பாடைகள் இப்போழ்து வரிவடிவாய் இனிய ஒலிவடிவாய் இலக்கியமாய் இலக்கணம்பெற்று வேதமாய் ஆகமமாய் சாத்திரமாய் விஞ்ஞானமாய் காவியமாய்புராணமாய் பல கலைஞானங்களாய் யாரும் எளிதிலுணரத்தக்க பல தத்துவங்களாய் பிரிந்து பரந்து அவ்வத்தத்துவப் பெயர்களாய்ப் விரிந்து பொருட் பாடையாய் வந்துவிட்டன; வந்துகொண்டிருக்கின்றன. கட்டுண்டு கிடந்த காசினியார். சமூகக்கட்டு சமயக்கட்டு அரசியற்கட்டு என்ற பல கட்டுத்திட்டங்களேற்படுத்தி வாழும் மாட்சிமை எத்தகை ஆச் சரியம் பயப்பதாகவிருக்கிறது. இம்மட்டோ இன்னும், என்னென் னவோ நூதன நூதனமாக காணப்பட்டிருக்கிறது; காணப்பட்டு வருகிறது. இத்தகைய முன்னேற்றம்மனித சமூகம் அடைந்ததற் கும் அடைவதற்கும் காரணமென்னை. அறிஞர்களின் அதி தீவிரமுயற்சியும் தொண்டுமேயன்றோ. அத்தகைமுயற்சியும் தொண் டும் எவற்றாலுண்டாமென்ற வினாவுக்கு யாரும் வெகு எளி தாக அறிவு வளர்ச்சியென்று விடை கூறிவிடுவர். அவ்வறிவு எவற்றாலென்ற மற்றொரு கேள்வி எழுமேல் கல்வியாலென்ற பதிற் சுலபமாகவரும். அக்கல்விமுகத்தானே கேள்வியனுபவம் முதலிய யாவும் உணர்தற்கேதுவாமென்பது யாரும் அறிந்த தொன்று. "அறிவு வளர்ச்சி கல்வியாலென்றே யானும் கூறு வென், கூறுகிறேன். இவ்விடத்திற்றான் நுணுகி ஆராயற்பாலது. கல்வி நிறைவும் நுண்ணுணர்வும் யாவர்க்கும் ஒரேபடித்தாய் அமைந்தன அன்றாலென்பதே. அங்ஙனம் நோக்கின் இல்லை இல்லை யென்றே அடுக்கடுக்காய்ச் சொல்லலாம். ஒப்பற்ற பெருந்தொகையான பெரிய தேயத்திற்கூட அறிவாளிகள் சிலரேயாகின்றனர். படித்தவர்களெனப் படுவோரில் நமது பரதகண்டத்தில் சிலர் மனித சமூகத்துக்கு ஆகாத வர்களாய் போய்விடுகின்றனர். தங்களறிவை பொதுசனப்பிரயோ சனத்துக்கு பயன்படுத்துகிறதில்லை. பெண் மக்களுக்கும் பயந்தே துறவியாகிறார்களாம். அவர்கள் மாயையாம்; மோட்சவழியடைக்கும் கபாடமாம்! ஆதலின் துறந்துவிடுகிறார்களாம். அதன்றியும் இவ் விக வாழ்க்கை துச்சமாம். அப்படித்தான் துறந்தபோதிலும் அவர் கள் செம்மை நெறியில் நிற்கிறார்களாவென்றால் சில உண்மை ஞானி களைத்தவிர பலர் வழுக்குடையாராகவே காணப்படுகின்றனர். உண்மை

ஞானிகளை என் மனமொழி மெய்களால் வணங்குகிறேன். அறிவு வழிகாட்டிய முனிவர்களும் மனோவிமைக்தருடன் அரசர்களின் குருவாயிருந்து உலகாட்சியை நன்னெறியில் நடாத்த அரும்பாடுபட்டு ஆணைபுரிந்தார்களெனும்போழ்து இவர்கள் பொதுசன சேவையென்றால் செவியை பொத்திக்கொள்ளுகிறார்கள். மக்கட்கு பணியாற்றுவதே, இறைபணியாற்றுவதென்றுன்னி அன்பர்க்குதாது தொண்டாற்றும் கள்வர்கோமான் ஆசிரியரவர்களின் ஒப்பற்ற பெருந்தகைமை கண்டாவதேர்வார்களாக. நிற்க, இத்தாலிய வீரர் மாஜினியைப்பற்றி ஆங்கிலம் படியாதாராயினும் தமிழ்ப் பத்திரிகைகளை வாசிப்பார் அறியாதிருக்கமாட்டார்கள். அவர் கூற்றாக "தமிழ்நாடு"வில் வெளியாகிவரும் மொழிபெயர்ப்பில் சிலவற்றை ஈண்டெடுத்துத்தருகிறேன். கவனிப்பார்களாக.

## பூமி கனவல்ல.

"சுவர்க்கத்தையும் சகத்தையும் தனியாகப்பிரித்து பேசுபவர்களுக்கு வழியைப்போலும் வழியின் முடிவைப்போலும் இரண்டும் ஒன்றென்றே உரைக்கவேண்டும். பூமியைக் கனவென்று எங்களிடம் சொல்லவேண்டாம்; பூமியும் பரமனைச்சார்ந்தது; அதன்மூலமாய் ஏறி அவனைப்பற்றுதற்கே அதை சிருட்டித்துள்ளார். பிராயச்சித்தம் செய்துகொள்ளவோ அல்லது பாபஞ்செய்வதற்காகவோ தனிமையாய் ஏற்படுத்தப்பட்டதே இத்தரணி என எண்ணவேண்டாம். நாமே உழைத்து முன்வருவதற்கும் பெரிய நிலையிற் பெருமையடைவதற்குமே ஏற்படுத்தப்பட்ட நிலயம் எனவே இதை அறிய வேண்டும். உட்கார்ந்து தியானம் செய்வதற்காக இதை ஏற்படுத்தவில்லை; செயலுக்காகவே இது சிறந்தது. நம்மையும் அவர்போலவே சிருட்டித்தார். அவரும் வினையும் செயலுமாவர். இன்னம் சொல்லப்போகில் அவனிடம் வினையும் செயலும் ஒரே விநாடியில் நடைபெறும். புவியின் பொருள்களையெலாமிகழ்ந்து இவ்வாழ்க்கையை துச்சமாக எண்ணவேண்டுமென நீங்கள் உரைக்கிறீர்கள். ஏனெனில் அப்பொழுதுதான் அவருக்கு சிந்தனையிலே கூடிட முடியுமென்பது உங்கள் அபிப்பிராயம். புவியின் வாழ்க்கை பரவாழ்க்கைக்கு முகவுரை போலன்னியிலும் அதை அடைவதற்கு இது ஒரு படியே எனவும் என்பதைவிட வேறுயாது. நாம் கட்டாயமாக ஏறியாகவேண்டிய கடைசி ஏணிப்படிக்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக விருக்கும், அதைப்பாவமெனப்புகல்வதால் நம்முன்னுள்ள பாதையைப்பாரிப்பதுபோலாகவில்லையா என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா".

---

புவியே நாம் உழைப்பதற்கான நிலமாகும். அதை சபிப்பதிற் பயனில்லை. அதை நாம் புனிதமாக்கவேண்டும். நம்மைச்சுற்றியுள்ள



புவியின்வன்மைகளெல்லாம் நாம் உழைப்பதற்கேற்ற கருவிகளாகும். அதை நாம் வெறுக்கக்கூடாது. நன்மைக்காக நாம் அதை பயன் செய்யவேண்டும்,

என்ற பொன்னுரைகளையும் பொய்யா மொழியார்,

"அறத்தாற்றினில்வாழ்க்கையாற்றின்
புறத்தாற்றிற்போஒய்ப்பெறுவதெவன்".

என்ற திருமொழியையும் கூர்ந்து நோக்குங்கள். கடவுளையடையும் மார்க்கம் தொண்டு, அத்தொண்டு மக்கட்டொண்டு என்பதை ஞானிகள் உணரும் நாளே நன்னாள். இத்தகையோரொழிந்த இன்னொருசாரார் இருக்கிறார்கள். அவர்கள் மொட்டைஅறிவு படைத்தவர்கள். அவர்கள்தான் தாம்கண்ட துன்மை பிறரறிந்தால் தமக்கு கௌரவமில்லையென்று கருதுபவர்கள். இங்ஙனம் கழித்தார்போக எஞ்சிய சிலரே திரிகரணசுத்தியோடு தங்கள் உடல் பொருளாவியாவையும் மதியாது பொதுசன நன்மைக்கென,

"இடனிற்பருவத்து மொப்புரவுக்கொல்கார்
கடனறிகாட்சியவர்".

என்னுமாப்போல அவரவரறிவு வளர்ச்சிக்கேற்ற, சமயச்சார்பாய் உழைத்தோரும், சமூகச்சார்பாய் உழைத்தோரும், அரசியற்சார்பாய் உழைத்தோரும், கலைஞானச்சார்பாய் உழைத்தோரும், விஞ்ஞானச்சார்பாய் உழைத்தோரும், இன்னும் பலதுறைச்சார்பாய் உழைத்தோரும் பல்லோரென்பது கரதலாமலகம். அதனாலேயே யாம் இவ்விது முன்னேற்றமடைந்தோமென்பது தேற்றம். இங்ஙனமாக அதிதீவிர முயற்சியாளரும் பொதுசனசேவை செய்யுநரும் இல்லாதிருந்திருப்பாராகின் யாம் எத்தகைய மனித மிருகங்களாகவிருப்போமென்பதிலையமுண்டோ. இதுவரை யாம் நவின்றவையிற் காணப்பெறுவதென்னே. மக்கள் முன்னேற்றத்திற்கு அறிஞர்களின் தொண்டு முக்கியமென்பதே. தொண்டு பலதிறத்தனவென்பது முன்னரே கூறப்பட்டிருக்கிறது. அவை, மனமொழி மெய்களானும், பொருளானும் ஆற்றப்படுபவை. மனத்தாலாற்றும் தொண்டுகளின் முக்கியம் நூல்பார்த்துமொன்றுகும். தற்கால அறிஞர்கள் தங்களின் ஆராய்ச்சியாற் காணப்படுபவைகளை மக்கட்கு பயன்படுமுறையில் திரட்டி புத்தகரூபமாய் வெளியிட்டு வருகிறார்களென்பது யாருமறிந்ததே. ஒரு தேசத்தின் நாகரிக வளர்ச்சிக்கும் அநாகரீக வளர்ச்சிக்கும் அத்தேய கல்விவளர்ச்சியே காரணமென்பது யான் கூறவேண்டுவதில்லை. பொதுமக்களின் கல்வியறிவைப் பல்குக்கும் அத

நூல்கள் பொருள் நூல்கள் அறிவு நூல்கள் முதலியன வந்நாட்டில் மலிந்திருந்தது. அதில் முக்கியமாக இரண்டொன்றை குறிப்பிட்டுச் சொல்வோம். அதி முக்கியமாக குறிப்பிடத்தக்கது பொய்யாமொழியாரியற்றிய திருக்குறளாகும். அந்நூல் உலகத்துள்ள எப்பாஷைகளினும் மொழிபெயர்த்து யாவரும் போற்றிப்புகழ மக்கள் புலத்திருட்பிரத்து பொதுமறையென சிறப்புப்பெயர் தாங்கித் திகழும் பெற்றியொன்றே அதன்பெருமை காட்டப்போதும். சுருங்கக்கூறின் திருவள்ளுவனுறரால் எம் தமிழ்நாட்டுக்கேற்பட்ட பெருமை வேறு எவராலும் ஏற்படவில்லையென்றே இசைக்கலாம். நீதிபெருத்தியம்பில் பேர்வாய்ந்த தமிழ்ணர்களாம் ஔவையார் அருளிய தெள்ளிய தமிழ் பாக்களை மறந்துசெல்ல விடதுரங்கொல், ஆத்திசூடிக்குளிதுள்ள எழுத்தறிவற்ற பாமர மக்களும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு அரும்பொருட்செறிந்தவையென்பது யார்தானறியார். இன்னும் நாலடியார் முதலிய பல சங்க நூல்களின் பெருமை விடற்பாலதோ. இத்தமிழ்த் தென்வழிக்கொழுக அறத்துறைப்பொருட்டுறைகளை விரித்து அக்காலத்தமிழ்மக்களின் மேன்மைவிளக்கும் இளங்கோவடிகள்யாத்த சிலப்பதிகாரத்தின் சீர்த்தி செப்பவும் வேண்டுங்கொல். அழகிய காவியமாய் கற்பதற்குக்கலமாய் விற்பன்னர்கள் வியந்து வியந்து இனியதாய் பாராட்ட தமிழ்ச் சொல்லாக்கத்தின் சீர்த்தியை உலகுக்கெடுத்துரைத்தவன் கவியிற் கம்பனென இசைபெரும்புகழ்படைத்த கம்பன் செய்த இராமசரித்திரத்தின் இசை எடுத்துரைப்பற்பாற்றோ. நந்தவம் போடிக்கும் உணர்ச்சிமிக்கெழுந்து சுதந்திர தாகமெழுப்பும் வண்ணம் பாரதியார் பாடிய தேசியகீதங்களின் பெருமை தெவிட்டும் தகையதோ. இன்னும் எத்தனையோ கணக்கற்ற நூல்களுள, அவைகளினுள் எமக்குள்ள பிரயோசனங்களை மேலும் விளம்பல் மிகையென்பாற்படும். ஆதலின் பலதுறைகளினும் பல நூல்கள் வெளிவரல்வேண்டும். அதற்கு நாட்டில் உயர்தரக் கல்விவளர்ச்சியடைந்திருத்தல்வேண்டும். நம் நாடு மற்றநாடுகளோடு ஒப்பிடின் நிரம்ப பிற்போக்கில் நிற்கின்றதென்பது தெற்றென வெளியாகும். அரசாங்கத்தார் முயல்வதோடு பொதுசனங்களும் பெரு முயற்சி எடுத்தல்வேண்டும். பொருளால் தொண்டு செய்யுநர், இத்துறைக்கு தங்களாலியன்றவரையுதவி கல்விவளர்ச்சிக்கு ஆதரவுண்டாக்கல் வேண்டும். கல்விவளர்ச்சியடையாவிடின் அன்னுடு பாழாமேயென்பதை தெரிவித்தலும் வேண்டுமோ. நமது நாடு முன்னர் உலகத்திலே நாகரீக வளர்ச்சியில் முன்னணியில் நின்றதென்பதை யார்தான் ஒப்புக்கொள்ளவில்லை. அத்தகைய நாகரீக வளர்ச்சிக்கு காரணம், கல்விவளர்ச்சியே. எமது தமிழரசன் பல்லாயிர வருடங்கட்குமுன்பு சங்கங்கண்டு தமிழை வளர்த்தனன். மற்றவரசர்களும் செல்வர்களும் கல்வியறிவாளர்களாய தமிழ்ப்புலவர்களை நன்கு ஆதரித்தார்கள். அதனாலேயே அத்தகைய



கல்விவளர்ச்சியடைந்திருந்ததென்பது மலை விளக்கு. இக்காலத்தில் தமிழ்ப்புலமையோரை ஆதரிப்பாரைக்காணோம். அவர்கள் வாழ்க்கை மிக்க இரக்கத்தக்க நிலையிலிருக்கிறது. அன்பர்களே! தமிழ்ப்புலவர்களை ஆதரியுங்கள். கல்விவளர்ச்சிக்குழைக்க முன் வாருங்கள். மற்ற தேயங்களை நோக்குங்கள். சமயத்துக்கும் அன்பச்சூழல் தோன்றியிருக்கிறது. சைவசமயத்துக்கு புத்துயிரளித்து வளர்வித்த எம்மை வாழ்வித்த பாண்டிமாதேவியாம் மங்கையர்க்கரசியாரை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். ஆதலின் சமயம் வளர்ந்தோங்கச்செய்ய பல அறிஞர்கள் முன் வந்துழைத்தல் வேண்டும். தற்போழ்து மற்ற நாடுகள் எம்மை எள்ளி நகையாடத்தக்க நிலையிலிருக்கிறேமென்பது யாம் ஒப்புக்கொள்ளாமல் முடியாது. அன்பர்களே! நமது நாடு ஒருவழியிலா சீர்குலைந்து நிற்கிறது; பலவழியினும் பலவழியினும். ஆனதால் அறிஞர்கள் பலரும் பலதுறை தன்னில் புழைப்பான் எழுவீர்களாக. பாரதமாதா தங்களை நோக்கி அழைக்கிறாள். செவிமடுங்கள். குறை போக்குங்கள். இன்றேல் சாபத்துக்குள்ளாவீர்கள். பொதுநலம்கருதி வாழ்தலையே தலை சிறந்ததாய் கொள்வீர்களாக. மக்களின் முக்கிய கடமை தொண்டு. தொண்டு என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

(தொடரும்)

---

## சாரதா மசோதா என்னும்

## பாலிய விவாகத் தடைச் சட்டம்.

1930 ஏப்ரல் 1ம்தேதி முதல் அமுலுக்குவரும்.

சமீபத்தில் இந்தியா சட்ட சபையிலும் ராசாங்க சபையிலும் நிறைவேறி வைசிராய் அனுமதியும் பெற்றுவிட்ட பாலிய விவாகத் தடைச்சட்டத்தின் முழுவிவரம்:—

பாலிய விவாகம் நடைபெறாமல் தடை செய்யவேண்டியது அவசியமாயிருப்பதால் கீழ்வருமாறு ஒரு சட்டம்இயற்றப்பட்டிருக்கிறது.

1. (1) இந்தச் சட்டத்திற்கு 1929-வது வருடத்திய பாலிய விவாகத் தடைச் சட்டம் என்று பெயர்.

(2) பிரிட்டிஷ் பலுசிஸ்தானம், சந்தால் பர்காஸ் முதலிய பிரதேசங்கள் உட்பட பிரிட்டிஷ் இந்தியா முழுதும் இந்தச் சட்டம் பிரயோகம் செய்யப்படும்.

(3) 1930 ஏப்ரல் 1-ந்தேதி முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

2. (1) 18 வயதுக்குட்பட்ட ஆண்களும் 14 வயதுக்குட்பட்ட பெண்களும் "பாலியர்" எனப்படுவார்கள்.

(2) கலியாணம் செய்யும் தம்பதிகளின் மணமகளோ அல்லது மணமகனோ பாலியராயிருந்தால் அந்த விவாகம் பாலிய விவாகம் எனப்படும்.

(3) விவாகம் செய்யும் ஆணும் பெண்ணும் "விவாகம் செய்பவர்"கள் ஆவார்கள்.

(4) 18 வயதுக்குட்பட்ட ஆண்களும் 14 வயதுக்குட்பட்ட பெண்களும் "பருவமடையாதவர்கள்" (மைனர்கள்) ஆவார்கள்.

3. 18-வயதுக்குமேல் 21-வயதுக்குட்பட்ட ஒரு புருடன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்

4. 21-வயதுக்கு மேற்பட்ட புருடன் பாலிய விவாகம் செய்தால் அவனுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறை தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

5. பாலிய விவாகம் நடத்தி வைக்கிறவர்களுக்கும் அல்லது நடத்த காரணமாயிருப்பவர்களுக்கும் ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

6. (1) 'பருவ மடையாதார்' பாலிய விவாகம் செய்தால் அவர்களின் பெற்றோர் அல்லது கார்டியன்கள் அல்லது அவர்கள் பாதுகாப்புக்குச் சட்டப்படியோ மற்றப்படியோ கடமைப்பட்டவர்கள், அக்கலியாணத்தை நடத்திவைக்கவோ அல்லது நடப்பதை தடுக்காமல் அசிரத்தையாக இருக்கவோ செய்தால், அவர்களுக்கு ஒரு மாதத்துக்குட்பட்ட சிறைத் தண்டனையோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். ஆனால் பெண்களுக்கு சிறைவாசத் தண்டனை கிடையாது.

7. 1897-வது வருடத்திய பொது விதிச் சட்டம் 25-வது செக்சனிலும் இ. பி. கோ. 64-வது செக்சனிலும் என்ன சொல்லப்பட்டிருந்தாலும் சரி, இச்சட்டத்தின் 3-வது செக்சன்படி குற்றஞ்

-11-



செய்பவர் அபராதம் கொடுக்கத்தவறினால், அதற்குப் பதிலாக சிறைவாசத் தண்டனை விதிக்க எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை.

8. 1898-வது வருடத்திய கி. பி. கோ. 190-வது செக்சன் எவ்வாறு கூறினும் சரி, இந்தச் சட்டப்படியுள்ள குற்றவாளிகளை விசாரணை செய்யவும், நடவடிக்கை நடத்தவும் பிரிசிடென்சி மாசிஸ்டிரேட் அல்லது ஜில்லா மாசிஸ்டிரேட்டுகளைத் தவிர வேறெந்தக் கோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை.

9. பாலிய விவாகம் நடைபெற்றது முதல் ஒரு மாத காலத்துக்குள் அதைப்பற்றி கோர்ட்டில் வழக்குத் தொடர வேண்டும். அதற்கு மேல் கொண்டுவரும் வழக்குகள் செல்லுபடியாகமாட்டா.

10. இச்சட்டப்படி வழக்குகளை ஒப்புக்கொள்ளும் கோர்ட்டார் 1898-வது வருடத்திய கி. பி. கோ. 203-வது செக்சன்படி வழக்கைத் தள்ளுபடி செய்யவில்லையானால், கி. பி. கோ. 20, 21-வது செக்சன்படி விசாரணை செய்யவேண்டும், அல்லது தம் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு முதல் வகுப்பு மாசிஸ்டிரேட்டு, அவ்வழக்கை விசாரணை செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

11. (1) வழக்கை ஒப்புக்கொண்டு எதிரி கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் அனுப்புமுன் பிராதுக்காரர் வழக்குத் தோல்வியுற்றால், 1898-வது வருடத்திய கி. பி. கோ. 250-வது செக்சன்படி எதிரிக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டியதாகவருமாகையால், 100 ரூபா தொகை சாமீனாவது அல்லது 100 ரூபாய்க்கு ஒரு முச்சலிக்காவோ கொடுக்கும்படி கோர்ட்டார் வாதிக்கு உத்தரவளிக்க வேண்டும். கோர்ட்டார் குறிப்பிட்ட காலத்துக்குள் வாதி அவ்வாறு செய்யாவிட்டால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

(2) இவ்வண்ணம் வாங்கும் சாமீன் அல்லது முச்சலிக்கா 1898-வது வருடத்திய கி. பி. கோ. படி வாங்கப்படுவதாகக் கருதப்படும். எனவே, அந்தக் கோடின் 42-வது செக்சன்படி அந்த சாமீன் அல்லது முச்சலிக்கா வாங்கப்படும். [குடி அரசு]

## கோமான் அச்சுக்கூடத் தீர்மானம்.

நமது குலமக்கட்கு தமது உன்னதமான பழைய நிலைமையும் தன்மையையும் கருதி அப்போதைக்கப்போது நமது பெருங்குலத்தில் தோன்றிய அரச பரம்பரையினர்களும் மற்றும் பெருங்குண சீலர்களும் செய்துகாட்டிய வீர தீரச்செயல்களையும் நமக்குத்

தெரிவித்து பூர்வ நிலைமைக்கு நாம் வரவேண்டுமென பெரு நோக்கத்துடன் தொண்டு செய்துவரும் "கள்வர்கோமான்" என்னும் மாதாந்தரப் பத்திரிகையை நமது மரபினர்கள் ஒவ்வொருவரும் சந்தாத்தொகை கொடுத்து பத்திரிகையை ஆதரித்து வரவும் நமது பெருஞ்செல்வர்கள் பத்திராதிபருடைய கேட்டுக்கொள்ளுதலுக்கு இணங்கி அச்சியந்திரசாலை ஒன்று நமது பத்திரிகைக்கென பிரத்தியேகமாயமைப்பதற்கு வேண்டிய நன்கொடை தந்து உதவி செய்யும்படிக்கும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்தீர்மானமானது தஞ்சை கள்வர் மகாசங்கம் 9-வது வருடத்திய விழாக் கொண்டாட்டத்தில் தஞ்சை, கூனம்பட்டி ஆம்பலவர் திருவாளர் S. குமாரசாமி மேற்கொண்டார் அவர்களால் கொண்டுவரப்பெற்று தஞ்சை பூக்காரத்தெரு திருவாளர் G. ரெங்கசாமி காருண்டார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று மகாசனங்களால் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

---

## ஒற்றுமை.

(வரியூர் N. V. ராச்சியப்பனம்பலம் எழுதுகிறார்.)

நமது இந்தியாவின் கடவுளருளால் நமது முன்னவர் சுகம் அடைவதற்கேற்ற பல மார்க்கங்களைப்பெற்றிருந்தும் நாம் அச்சுகம் இல்லாதவர்களாய் ஏக்கமுற்றிருப்பது ஒற்றுமை என்பது அணுவேனும் இல்லாமையினாலே என்பது எல்லோருக்கும் நன்கு விளங்குமென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில் தன் கையே தனக்கு உதவி என்பதை மறந்து நமக்கு முக்கியமாகிய அநேகம் பொருள்களை நாம் கைப்பற்றுதலே யாகும். நமது சுவாதீனத்திற்குட்பட்ட தலதாபனம் முதலிய சில்லாபோர்டு தாலுகா போர்டு பலவுங் கைக்கொண்டாலொழிய அவைகள் பிறவும் பிறர் கை சேர்ந்திற் பயன்படுவதில்லையென்பது உறுதி. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை முதலியவிடங்களிலுள்ள நம் சகோதரர்கள் பலரும் ஒன்று கூடுதல் உயர்வேயாகும்; எக்காரியமும் ஒற்றுமை இன்றி இயங்காதென்பது உங்களுக்கே தெரியும்; தனியே கிராமமோ நாடோ நகரமோ முயற்சி செய்திடில் அக்காரியம் பயன்படாதென்பது அறையத் தேவையில்லை. பல தேசத்தாரின் கூட்டத்தாலும் நிறைவேற்றப்படாத ஒரு காரியத்தை ஒற்றுமையுள்ள நமது கள்ளர்களால் நிறைவேற்ற முடியுமென்பது உறுதி. ஆகையால் நமது சகோதரர் ஒவ்வொருவரும் நமது நன்மைக்காக நாடோறும் வேண்டும் பிரசங்கமாயினும் அறிவிக்கும்படி உங்களிருதய

-12-



பத்தனை யான் உரைப்பதை ஒத்துக்கொள்வீர்களாக. மேலும் ஒற்றுமை என்பது நமது சமூகத்தில் இல்லாததால் பல இடங்களிலும் எவ்வித சுகங்களுங்கெடுவதுடன் பலவித துன்பங்களும் வற்புறுத்திக் கொண்டிருப்பது இலேசாய் உங்களுக்கே தெரியுமே. ஐயோ! பாவம்! பாவம்! மனிதருக்குள் மனிதர் பெருமையாகவாவது விரோதமாகவாவது நடத்திக்கொண்டு வருவோரேயானால் ஒருவரும் லட்சியம் செய்யமாட்டார்களென்பதை நனிவாய் காட்டுவேன். அவ்வாறு பலரும் ஒரே சுகத்தினர்போலும் ஒரே தாய் பிள்ளைபோலும் ஒற்றுமையாடினால் வாழ்வினையும் அறுவகாதென்று உரைப்பேன்.

தொலை தூரத்துள்ள ஒருவனுடைய சுகாசுகங்களை மற்றோர் வழியுள்ளவன் தெரிந்தும் அவைகளின் சந்தோடமும் விசனமும் அடையாதிருத்தல் கூடும்; அதனால் மற்றோர் தேசத்தானுக்கு ஒரு தீங்கும் நேரிடாதென்பது எனதுள்ள நிகழ்வு. ஆகவே நமது சமூகத்திலிருக்கும் ஒருவருக்கு சுகா சுகம் பல நேரிடுங்கால் நாம் அவைகளைக் கவனியாதிருக்க முடியாது. செவ்வையாய் ஒற்றுமைப்படுவோமானால் முன்னவர் கண்ட சுகத்திற் பாதி நாம் அடைவது நிச்சயம். அடுத்த வீடு தீப்பிடித்தெரியும்போது அயலானைப்போல் அவலமாய் இருக்கமுடியுமா? அப்படி அவலமாயிருந்துவிடுவோமாகில் நமக்கும் அந்த ஆபத்துத்தானென்பது அறியத்தக்கதே. பலத்த விரோதமுண்டாகிறது; பக்கத்து வீட்டுப் பாண்டியன் சிநேகமுண்டாகிறது. ஆகையால் பகையில்லாதிருக்கிறேனென்று பகர்வீராயில் ( பாவையாகினும் பூவிலாமாமனை பாழ் ) என்பதும் பகரத்தக்கதே. பகையில்லாவிடில் நேசமும் நேசமில்லாவிடில் பகையும் தானே உண்டாவது சகசமே. ஒவ்வொரு சமூகமும் முன்னேறு முன்னேறென்று ஓலமிட்டுக்கொண்டிருப்பதும் ஊக்கமே. நமது சமூகம் தவழ்ந்து தவழ்ந்தாகிலும் ஒற்றுமை என்னும் பயிரை வளர்த்து தலை தூக்குமாகில் ஆக்கமென்பது கீழ் சாயுமென்பதை சாற்றவும் வேண்டுமோ? வேண்டாம்.

நமது ஞானேந்திரிய கன்மேந்திரிய அந்தக்கரண முதலியன தங்களுக்கேற்ற தொழிலையும் குணத்தையும் கொள்ளாமல் ஒன்றுக்கொன்று முறண்படுமானால் ஒவ்வொருவர் சரீரமும் எவ்வாறு அழியுமோ அவ்வாறே நமது சமூகமும் ஒற்றுமை இல்லா வாழ்க்கையால் அழியுமென்பதற்கையமுண்டோ?

நமது சகோதரர் ஒவ்வொருவரும் தம் தம் சொந்த நலத்தைக் கருதாது நமது சமூக நன்மையைக் கைக்கொண்டு ஒற்றுமைப்படுவோமானால் மேற்கூறிய இந்திரியங்கள் முறண்படாதிருப்பின் எவ்

வாறு உடல்நலம் அடைவதற்கு வழியுண்டோ அவ்வாறே நாம் இன்பம் அடைவோமென்பது உண்மையேயாகும்.

நன்மைக்கு ஆதாரமான ஒற்றுமையானது நமது சமூகத்தில் பரிதாப நிலையில் சிற்றிறுகின்றதை பலரும் பார்க்கவே. எங்கே பார்த்தாலும் நமது சமூகத்தில் ஒற்றுமை இல்லாததினாலேயே சகல குறைவடைகிறோம். ஆதலால் நாம் ஒற்றுமையை கைப்பற்றுவோமானால் நன்மையடைவது நிச்சயமேயாகும்.

கள்ளர் வகுப்பிலுள்ள சகோதர சகோதரிகள் யாவரும் சுகமடையவேண்டின் ஒற்றுமையென்னும் ஒப்பற்ற பெரும்பேற்றைக் கைக்கொண்டு நமது ஆங்கில காருண்ய கவர்மெண்டின் வாயிலாக பொதுநலம்பெற்று வாழுமாறு கடவுள் அருள்புரிவாராக.

## ஒரு சமூகத் தொண்டரின் மரணம்.

தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூகா விளத்தூர் மிராஸ் எஸ். வெங்கட்டராம நத்தியர் அவர்கள் சென்னையில் சிகிச்சை செய்து கொள்ளப்போன இடத்தில் திடீரென மரணமடைந்ததைக் கேட்டு திடுக்குற்றோம். அன்னார் பொதுஜன சேவையே பெரிதென மதித்தவர்; தேசிய விடுதலைக்கு முட்டுக்கட்டை போடாத வழியில் சமூகத்துக்கு தொண்டு செய்து வந்தவர்; பாபநாசம் தாலூகாபோர்டுக்கு பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்பெற்று அவ்வுத்தியத்தை வெகு திறமையுடன் நடத்திவந்தவர்; தஞ்சை கள்ளர் மகாசங்க நிர்வாகசபை மெம்பர் பதவி வகித்து தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து வந்தவர். தேச ஊழியத்திலும் சமூக ஊழியத்திலும், கதர் ஊழியத்திலும் அவர் புரிந்துவந்த தொண்டு அளவிடற்பாலதன்று. அவருடைய மரணத்தினால் கள்ளர் சமூகம் ஒரு ஊழியனை இழந்துவிட்டது; பாபநாசம் தாலூகா ஒரு கதர்த் தொண்டனை இழந்துவிட்டது; பாரதமாதா தன்னுடைய முக்ய புதல்வர்களில் ஒரு புதல்வனை இழந்துவிட்டாள். அன்னார் பிரிவாற்றாமையால் வருத்தத்தில் மூழ்கி இருக்கும் அவரது பால்ய மனைவிக்கும் அவர்தம் குழந்தைகளுக்கும் சகோதரர் எஸ். சின்னையா நத்தியர் அவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்னார் ஆன்ம சாந்தி அடையுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறோம் என, புளிச்சக்காடு பு. கோ. இரத்தினசாமி காளிங்கராயர் எழுதுகிறார்.

212 720





☞ குறிப்பு:—நமது குலச் சிகாமணியாகிய திருவாளர் L. வெங்கட்டராம நத்தியர் பல வேறு துறைகளிலும் பக்த நோக்கத்துடன் சிறந்த தொண்டாற்றியதோடும் மிகுந்த திரவியத்தை விரைந்து கொடுத்துதவியதோடும் நில்லாது நம்மினக்குழவியாகிய கோமானுக்கும் ஓர் சந்தாதாராக சேர்ந்து பொருளுதவி புரிந்தும் அநேக சந்தாதாரர்களையும் வெகு சிரமப்பட்டு சேர்த்துதவினார். கோமானுக்கு அச்சுக்கூடம் ஏற்படுத்துவதற்கு பெரும்பொருளுதவி புரிவதாகவும் வாக்களித்தார். என்னே! இவர் தம் குலாபிமானப் பெருமை! அன்னார் இவ்வுலக வாழ்வை நீத்தது நமக்கு ஆற்றொணாத் துயரத்தை விளைவிக்கிறது. அன்னவர் ஆன்மா பேரின்பப் பெருவாழ்வில் சாந்தியடையுமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

நத்தியர் அவர்கள் குடும்பத்திற்கும், உறவினருக்கும், நண்பருக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தை பரிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். —பா.

## Written by D. U. Thanjairayar Avl,

A bill to remove certain doubts regarding the dissolution of marriages of persons professing the Hindu Religion.

Hereas it is expedie. t to remove certain doubts regarding the dissolution of marriage of persons professing the Hindu Religion in certain cases, it is hereby enacted as follows:—

Short title, application & extent.

1. (i) This Act may be called the Hindu marriages Dissolution Act, 192

(ii) It applies to all Hindus, and extends to the whole of British India.

Grounds for dissolution of marriage.

2. Notwithstanding any law or custom to the contrary, a Hindu wife shall be entitled to obtain a declaration of the invalidity of her marriage or its dissolution for any of the following reasons, namely

(a) impotency of the husband,

(b) his imbecility,

(c) the fact that he was suffering form sanies or ulcerous leprosy.

Saving of other rights.

3. Nothing herein contained shall be deemed to restrict the rights of dissolution of marriages otherwise existing.

Statement of objects and reasons.

Under the Hindu Law, the main object of marriages is the procreation of a male off-spring. It was necessary that the result was obtained by the practice of Niyog, which provided the wife with a companion, when the husband himself was imbecile or impotent. As that practice has fallen into disuse, it is necessary, that wives married to such persons should obtain relief; since if they can no longer practice Niyog they should be free to adopt the only honourable course open to them of securing their release form the bondage of such marriages. This is all the more necessary since under Hindu Law both the husband suffering from any of these disabilities and his wife are excluded from all rights in property.

It is therefore hoped that this measure will give the Hindu wife some relief to which she is so clearly entitled. The bill is not intended to introduce any innovation in the Hindu Law of marriages. If passed, it will have the effect of merely restoring the old law laid down by Narad and Vashiath whose smritis are of the most revered authorities on Hindu Law;



" Narad; XII-8. The man must undergo an examination with regard to his virility; when the fact of his virility has been placed beyond doubt, he shall obtain the maiden (but not otherwise.)

Ib. 18. For the wife of one who spill his semen, or whose semen is devoid of strength they may have discharged their marital duties, another husband must be procured after she has waited for half a year.

Ib. 19. Women have been created for the sake of propagation, the wife being the field and the husband the giver of the seed. He who has no seed is unworthy to possess the filed.

Ib. 24. When a bridegroom goes abroad after having espoused a maiden, let the maiden wait till her menses have passed three times and then choose another bridegroom.

Ib. 37. Madness, loss of caste, impotency, misery to have forsaken his relatives [affliction with a chronis or hateful diseases, and deformity.] These are the faults of a suitor.

Ib. 27 When her husband is lost or dead when he has become a religious ascetic, when he is impotent and when he has been expelled from caste, these are the five cases of legal necessity, in which a woman may be justified in taking another husband.

Paras XII-8, 16, 19, 24, 37, 97, 9-8, B. E., page 166 wt. seq.,

Veshicth—20. And she is called re-married who leaving an impotent, outcast, or mad husband takes another lord [Ceshicth] XVII—20; 14—S. B. E. 867.

## D. U, தஞ்சைராயர் அவர்கள் எழுதுகிறார்.

இந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களின் விவாக விலக்கைப் பற்றிய சில சந்தேகங்களை நிவர்த்திக்க ஒரு சட்டம்.

இந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களின் விவாக விலக்கைப் பற்றிச் சிலவிடயங்களிலிருக்கும் சந்தேகங்களை நிவர்த்திப்பது மிகவும் தகுதியானமையால் பின் வரும் சட்டம் ஏற்படுத்தப்படுகிறது:—

### பெயர், பிரயோகம், வியாபகம்.

1. (i) இது இந்து விவாக விலக்குச் சட்டம் 192, என்றழைக்கப்படும்.

(ii) இது எல்லா இந்துக்களுக்கும் கைபாளப்பட்டு பிரிட்டிஷ இந்தியா முழுவதிலும் வியாபிக்கும்.

### விவாக விலக்குக் காரணங்கள்.

2. சட்டமும் வழக்கமும் எப்படியிருந்தாலும், பின் வரும் காரணங்களிலொன்றுக்காக ஓர் இந்து மனைவி தன் விவாகத்தைப் பயனற்றதாக்கியாவது விலக்கியாவது பிரமாணப் பத்திரம் பெற்றுக் கொள்ள சுதந்தரமுடையவள்.

(i) கணவன் அசக்தனாயிருத்தல்.

(ii) அவன் நிர் வீரியனாயிருத்தல்.

(iii) அவன் ரண நீர் அல்லது புன்குட்டம் முதலான வியாதியுள்ளவனாயிருத்தல்.

### இதர சுதந்தரங்களைக் காப்பாற்றுதல்.

3. இங்கே காணப்பட்ட எதுவும் விவாக விலக்குச் சுதந்தரங்களை எக்காலம் பற்றியும் தடுக்கிறதாக எண்ணப்படமாட்டாது.

### நோக்கங்களும் காரணங்களும்.

இந்துச் சட்டப்பிரகாரம் விவாகங்களின் முக்கிய நோக்கம் ஆண் புத்திர சந்தானமே. கணவன் அசக்தனாவது நிர்வீரியனாவது இருந்தால் மனைவிக்கு ஓர் தோழனைக் கொடுக்கும் நியோக் என்னும் வழக்கப்படி இதைச் செய்வது அவசியமாயிருந்தது. அவ் வழக்கொழிந்துவிட்டதால், அப்படிப்பட்டவர்களுக்கு விவாகம்





பண்ணப்பட்ட மனைவிகள் ஆதரவு இழந்த அவதியே. ஆகையால், அவர்கள் நியோகத்தை அப்பியாசம் செய்யமுடியாதாகையால், அப்படிப்பட்ட விவாகங்களை அசிரத்தைகளினாலும் தங்கள் விருப்பத்துக்கு நேரிட்டுக்கொள்ளும் ஒரே சிறந்த வழியை அநுசரிக்க அவர்கள் சுதந்தரர்களாகவேண்டும். இவ்விதச் சீர்கேடுகளால் துன்பப்படும் கணவனும் ஆண் மனைவியும் இந்துச் சட்டப்பிரகாரம் சொத்து சுதந்தரங்களுக்கு விலக்கப்பட்டவர்களாதலால் இது மிகவும் அவசியம். ஆகையால் இந்த உபாயம் இந்து மனைவிக்கு மிக அநுகூலமாயிருக்குமென்று நம்பப்படுகிறது. இந்தச் சட்டமானது இந்து விவாகச் சட்டங்களோடு ஓர் புதிய கற்பனையைச் சேர்ப்பதற்காக ஏற்பட்டதன்று. இந்த சட்டமானது, இந்துச் சட்டத்தில் மிகவும் தலைசிறந்த பிரமாணிகர்களான நாரத், வசிஷ்டர் முதலியவர்களின் சாத்திரங்களில் காணப்பட்டிருக்கும் பழைய சட்டத்தையே புதுப்பிப்பதின் பயனையுடையது.

நாரத் XII-8. ஓர் மனிதன் அவனுடைய வீரிய சம்பந்தமாய்ப் பரீட்சிக்கப்படவேண்டும். அவன் சந்தேகமின்றி வீரியமுடையவனானால் பெண் கொள்ளலாம். (மற்றப்படியல்ல)

18. தன் இந்திரியத்தை வீண் போக்குகின்றவன் மனைவியும் சக்தியில்லாத இந்திரியத்தையுடையவன் மனைவியும் தங்கள் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து தீர்த்ததும் ஒரு வருடம் பொறுத்து அவள் வேறு கணவன் தேடிக்கொள்ளவேண்டும்.

19. பெண்கள் வமிசவிருத்திக்காகச் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றனர். மனைவியே நிலம். கணவன் விதை கொடுப்போன். வித்தில்லாதவனுக்கு நிலம் வைத்திருக்கத் தகுதியற்றவன்.

24. ஓர் மாப்பிள்ளை ஒரு கன்னிகைக்குப் பரிசம் போட்ட பின் தூர தேசம் சென்றால், அந்தக் கன்னிகை மூன்று ருதுக்காலம் இருந்து பின் வேறு மாப்பிள்ளையைத் தெரிந்துகொள்ளக்கடவள்.

37. பைத்தியம், சாதியிழத்தல், சக்தியின்மை, துர்ப்பாக்கியம், உறவினரைக் கைவிடுதல் (நாட்பட்ட அல்லது வெறுக்கப்படத்தக்க பிணிகளால் வருந்துதல், அங்க பங்கம்) இவைகளே மணங்கெட்டுப்போனது குறைகள்.

27. கணவன் காணாமற்போவதும், காலஞ்சென்றுபோவதும், துறவியாவதும், அசக்தனாயிருப்பதும் சாதிப்பிரஷ்டனாயிருப்பதுமா

பெயரின் காரணங்களைக்கொண்டே ஓர் பெண்ணினைவன் சட்டப்பிரகாரம் வேறோர் கணவனைத் தெரிந்து எடுத்துக்கொள்ளலாம்.

பாரக்க: XII-8, 10, 19, 21, 37, 97, 98, பி. இ. பக்கம் 160.

விபத் 20. அரசத்தன், ...பட்டவன், ... கணவனை விட்டு விட்டு வேறோர் பதியைக்கொண்டவன் புனர் விவாகஞ் செய்தவளால், (விவத்) XVII-20. 14-கை, பி. இ. 561.

## பள்ளிக்கூடப் பாடங்களின் உரை ஆராய்ச்சி

ம. கா. சோமசுந்தரம் பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி.

(128-ம்பக்கத் தொடர்ச்சி)

எனவே 'உந்தை என் துணைவன் அன்றே' என்புழி 'அன்றே' என்பது தேற்றப்பொருளில் வந்த இடைச்சொல் என்க. அது (உன் தந்தையாகிய வாலி எனக்குச் சகோதரன் ஆதலால்) 'நீ எனக்குத் துணையாகக் கூடும் கடமை உள்ளாய்' என்னும் பொருளைக்குறிப்பால் தந்தது காண்க.

46. (செய்-24) 'இந்திரன் செம்மல் பண்டோர் இராவணன் என்பான் தன்னை' என்புழி என்பான் என்பது வினைப் பெயர் என்று கூறி ஒழிந்தார். 'இல்வாழ்வான் என்பான்' (குறள்) என்புழிப் போல எனப்படுவான் என்னும் செயப்பாட்டு வினைச்சொல் என்பான் எனச் செய்வினைச் சொல்லாய் வந்தது என்னும் அரிய இலக்கணத்தைக் குறிக்காமையால் இவர்க்கு 'செயப்படுபொருளைச் செய்தது போல' என்னும் நன்னூற் சூத்திரமும் புதிது போலும்.

47. (செய்-28) அங்கதன் அதனைக்கேளா அங்கையோடு அங்கை தாக்கித், துங்கவன் தோளும் மார்பும் இலங்கையும் துளங்க நக்கான்' என்புழித் 'துங்கவன் தோளும்' என்பதைத் துங்கம்+வன்மை+தோளும், எனப் பிரித்து 'உயர்ச்சி பொருந்திய வலிய தோளும்' எனப் பொருள் பொருந்தமுற உரைகூற அறியாது, 'துங்கவன்' 'உயர்ச்சி பொருந்தியவனான இராவணன்' என்னும் இராவணனுடைய தோளும் மார்பும் அவனுடைய இலங்காபுரியும் நடுங்கும்படியாக 'அங்கதன்-சிரித்தான்' என்றும் உரைவிரித்தார். இவ்விடத்தில் உயர்ச்சியை இராவணனுக்கு ஏற்றிக் கூறுதல் பொருத்தமாயினும் இலங்கை துளங்கிற்று எனவே இராவணன் துளங்கி



னான் எனல் சொல்லாமலே அமையும் ஆதலாலும், தோள் இருபதும் தலை பத்தும் எனத் தொகை கொடுத்துக் கூறாமையாலும், விலாவிறச் சிரித்தான் என வழங்கு உண்மையாலும், அவ்வுரை பொருந்தாதென மறுக்க. 'அங்கையோடு அங்கைதாக்கி' என்புழி அங்கைகள் எனப்பட்டன அங்கதனுடைய அங்கைகளே யாதலாலும், அவன் அங்கைதாக்கிய செட்டைக்கு ஏற்ப அவனது தோளும் மார்பும் துளங்கும்படி சிரித்தான் என்றலே அமைவுடைத்து ஆதலாலும், ஒப்புமைக்கூட்ட அணியின்பாற்படுத்து அவனது தோளும் மார்புமே அன்றி இலங்கையும் துளங்கச் சிரித்தான் என்றார் ஆதலாலும், அவ்வுரை பொருந்தாதென மறுக்க. சீமான் இலங்கை நடுங்கும்படியாக அட்டகாசஞ் செய்தான் என்று வான்மீகர் கூறினார். அவ்வாறாகக் கம்பர் அங்கதனை வருணித்திருக்கின்றார் என அறிக.

48. (செய்-25) உந்தை—உம்+தை—உமது தந்தை. தை முறைப்பெயர் விகுதி என்று (Text book) குறிப்புரையாளர் கூறினார். இப்பாட்டிலே இலட்சுமணர் இராமனைப்பற்றி முன்னே 'நின்னை' எனவும் 'உன் சேவகை' எனவும், முன்னிலை ஒருமைவாய்ப்பாட்டால் பேசிப் பின்னே 'உமது தந்தை' எனப் பன்மைவாய்ப்பாட்டால் பேசினார் என்னின், பால்வழுவாம் என மறுக்க. அதுவன்றியும் 'உந்தை' என்பது 'உம்+தந்தை' என்பதன் மரூஉ முடிபாகவே இருக்குமானால் 'உன்+தந்தை' என்பதன் மரூஉ முடிபு 'உந்தை' என்பதன்றி வேறு யாதோ எனக்கடாவியும் மறுக்க. 'தந்தை' என்புழியும் 'தை' முறைப்பெயர் விகுதி என்பாரை, அது என்ன பால்குறித்து வந்தது? பகுதி யாது? அதன் பொருள் யாது? அவ்வாறே தம்பி, தங்கை, அப்பன், மாமன், மாமி, அத்தை, அன்னை, தாய், அக்காள், அம்மான், அத்தான், மருகன் முதலியனபகுதி விகுதி முதலியனவாக பிரித்து பொருள்படுமாறு எவ்வாறு? எனவும் கடாவி மறுக்க. 'தந்தை எனும் அவை முதலாகிய இயைந்து பெயருட் பிரிப்பப் பிரியா' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்துரையிலே சேனாவரையரும் பேராசிரியரும் தந்தை, தம்பி, தம்முன், தாய் முதலியன, பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கப்பட்டுப் பொருளுணர்த்தா என்று உரைத்தார். நச்சினார்க்கினியர் அவரொடு மாறுபட்டு உரைத்த உரை பிரயோக விவேகநூலாசிரியரால் மறுக்கப்பட்டவாறு அறிக. (சூ-32. உரை)

இனி நன்னூல் விருத்தியுரையாளர் சங்கர நமச்சிவாயப்புலவர் 'இலக்கியங்கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்னும் சூத்திர உரையில் 'நுந்தை' 'எந்தை' 'தந்தை' என்பனவற்றில் தகரவொற்று இடைநிலை யென அடுத்து 'நும்' பகுதி யென்றும் 'ஐ' விகுதி யென்றும் குறிப்பித்தார். 'ஐ' விகுதி எனின் எப்பால்

பற்றி வந்ததோ அதை வெளியிட்டாரில்லர். அவர் உரைமும் மேலே கூறியவாற்றால் மறுக்கப்பட்டது அறிக. அவரே தமன் என்பதைத் தம்+அன் எனப் பிரித்துக்காட்டியதும் மறுக்கப்பட்டவாறு அறிக.

49. (செய்-38) தம்பி-தம்+பி-தம்முடை தம்பி. பி-முறைப் பெயர் விகுதி என்றார் (Text book) குறிப்புரையாளர். இதுவும் மேலே 'உந்தை' என்பதற்கு உரைத்தாங்கு உரைத்து மறுக்க.

50. (செய்-28) 'செம்மல்' என்பதில் செம்மை பகுதி மென்றார் (Text book) குறிப்புரைகாரர். அவர்க்கு 'அல்' விகுதி என்பது கருத்துப்போலும். அற்றேல் அது எந்தப் பால் பற்றி வந்ததோ? 'தையல்' என்பதின் பகுதி விகுதியும் அவற்றின் பொருளும் என்னையோ? இவற்றுள் பால்காட்டும் விகுதியில்லை என்னும் கருத்துக்கொண்டே நன்னூலாரும் 'அவற்றுள் இன்னபெயர் குறூஉ முதல்' என்னும் சூத்திரத்திலும் 'இன்ன முதலாகக் கிளந்த பொருள்களுள்' என்னும் சூத்திரத்திலும் ஆண்பாற் பெயர்க்கு எகர வீறும் பெண்பாற் பெயர்க்கு ஏகர வீறும் இகர வீறும் புறனடையே கூறி 'குரிசில் தோன்றல்' என்பன 'நங்கை தையல்' என்பன எனப் பிரித்துக் காட்டாமல் ஒழிந்தார். ஆகவின் செம்மல் என்பதும் தோன்றல் என்பதுபோலப் பிரிக்கப்படாத் மொழி என்க.

51. (செய்-1) 'வள்ளல்'. வண்மை+அல் எனப் பிரித்துரைத்தார் குறிப்புரையாளர். இதுவும் மேலே செம்மல் என்பதற்கு உரைத்தாங்கு உரைத்து மறுக்கப்படும்.

52. (செய்-23). 'கங்கையும் பிறையும் சூடும்' என்புழிப் பிறை-பிற+ஐ-அகரம் தொகுத்தல் என்று பகுத்துக் காட்டினார் குறிப்புரைகாரர். அவர்க்கு 'ஐ' என்பது 'பறவை' என்புழிப்போல வினைமுதற் பொருணர்த்தும் விகுதி எனவும் பிறப்பித்தலை உடையது என்பது பொருள் எனவும் கருத்துப்போலும். 'தேய்பிறை' எனவும் வழங்கி வருதலால் ஆண்டுப் பிறத்தற்பொருள் அமையாமையால், அதுவும் பொருப்பதேயாம் என மறுக்க. சிவபெருமான் சூடியதும் தேய் பிறையேயாம் என்க.

53. (செய்-29.) 'தாழ வந்த அரசது ஆள்கை' என்புழி அது சொல்லுருபு என்றார். சொல்லுருபுக்கும் பகுதிப் பொருள் விகுதிக்கும் வேற்றுமை அறியார்போலும். 'வறியார்க் கொன்றீதலே' என்னும் குறள் உரையில் 'ஈதல்' என்புழி அது பகுதிப்பொருள் விகுதி என்று பரிமேலழகர் கூறியவற்றையும், அதனை எடுத்துக்காட்டிய பிரயோக



விவேகம், இலக்கணக்கொத்து முதலிய உரைகளையும் பார்த்திலர் போலும். பகுதிப்பொருள் விகுதியை வடநூலார் சுவார்த்தப் பிரத்தியயம் என்பர்.

54. (செய்-30). 'நடுவினை செய்யத்தக்க நாள் உலந்தார்க்குத் தூத' என்புழி, 'நடுவன்' என்பது யமனுக்கு ஓர் பெயர் என்பதை அறியாது நடு+அன் எனப் பிரித்து 'அன்சாரியை' என்றும், 'தன் ஆற்றலைக் காட்டத்தக்க காலம் நடுவே முடியப்பெற்றவனாகிய மனிதனுக்குத் தூதாக வந்தவனே' என்றும் உரைத்தார். இவர் நிகண்டு நூலைக் கண்ணாலும் பார்த்திலர் என்பதை இதனாலும் விளக்கினார். 'நமன் வைவச் சுதனே மறலி நடுவனே தென்றிசைக்கோன்' என்பது சூடாமணி நிகண்டு. யமனால் வரையறை செய்யப்பட்ட நாளையுடைய மனிதன் இராமன். அந்த நாளும் முடிந்துபோயிற்று. அவனுக்குத் தூதாகவந்தவனே என்பது பொருள் என்க.

> 'வாளில் அங்கவன் அடிகளும் சென்னியும் வரைசேர்
> தோளும் யாக்கையும் வீழ்ந்தன சூரியன் பகைஞன்
> நாள் உலந்தனன் அவன் உயிர் வௌவிய நடுவன்
> ஆளி மொய்ம்பனை வழுத்தியே தென்புலத் தடைந்தான்'

(கந்த-பானுகோபன் வதைப்படலம்) இப்பாட்டின் ஒற்றுமை நோக்கினும் பொருள் இனிது விளங்கும்.

55. (செய்-34.). 'கள்ளம் அடைத்துழி' 'வருணன் வந்து தொழுதுழி', 'உம்பி கொள்ளக்கொடுத்துழி', என்புழி, அடைத்த+உழி தொழுத + உழி, கொடுத்த + உழி எனப்பிரித்துக்காட்டி அகரம் எங்கும் தொக்கன; உழி ஏழாம் வேற்றுமை உருபு என்றார். என்றார்க்குத் 'அடைத்த' 'தொழுத' 'கொடுத்த' என்பன பெயரெச்சம் என்பது கருத்து அன்றோ? பெயர்ச்சொல்லே யன்றி பெயரெச்ச வினைச்சொல் தானும் வேற்றுமை உருபு ஏற்கும் என்பது எந்த இலக்கண நூலிற் கண்டாரோ யாம் அறியேம். 'வினையே செய்வது செயப்படு பொருளே நிலனே காலம் கருவியென்றா' ... 'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது-நினையுங் காலைக் காலமொடு தோன்றும்' என்னும் தொல்காப்பியச் சூத்திரம் இவர்க்குப் புதிதினும் புதிது போலும். (தொடரும்)

---

## அறிக்கை.

அரசாங்க நிந்தனையில்லாத வியாசங்களையும் பொது நோக்காக வுள்ள கட்டுரைகளையும், மதசம்பந்தமான நிரூபங்களையும் அன்புடன் வரவேற்று நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். வியாசங்களெல்லாம் சிறந்த கருத்துகள் பொதிந்தும், வடமொழி எழுத்துகள் கலப்பின்றியும் ஒவ்வோர் எழுத்தும் தனித்தனியே நன்கு விளங்கவும் செவ்வனே எழுதியனுப்பப்படவேண்டும். திருப்பிதர

இல்லை. விலாசங்கள் பிரசுரிக்கப்படமாட்டாவென்பதோடும் எக்காரணம் பற்றியும் திருப்பி அனுப்பப்படமாட்டா. சந்தா நெம்பர் குறிக்கப் பெறாத கடிதங்கள் யாரால் எழுதப்பட்டவை யென்று தெரிந்து கொள்ளுதல் வெகு சிரமசாத்தியமாக இருப்பதால், இனியேனும், சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளல் வேண்டும். இல்லையேல் கவனிக்கப்படமாட்டாதென்பது திண்ணம்.

ஸ்ரீ குறிப்பு—கோமானுக்கு அனுப்பப்படும் மணியார்டர்கள், கடிதங்கள், நிருபங்கள் முதலியவைகளெல்லாம் பத்திராசிரியர் விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும். [ப—ர்.]

விலாசம்:—தி. மு. சுவாமிநாத மாதவராயர்,
கள்ளர்கோமான் பத்திராசிரியர்,
மன்னார்குடி S. I. R. (தஞ்சை ஜில்லா.)

## சந்தா நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சென்ற சில பத்திரிகைகளின் வாயிலாக, நமது கோமானுக்கு வருடம் இரண்டு தொடங்கி மாதங்கள் பல கடந்துவிட்டன வென்பதையும், சந்தாத்தொகை அனுப்பப்படவில்லை யென்பதையும், பத்திரிகை நிர்வாக சம்பந்தமான பண நெருக்கடியைப்பற்றியும் தெற்றென விளங்கும்படியாக இடையறாது விண்ணப்பித்தும், நமது சந்தா நேயர்களில் அநேகர் தங்களது இரண்டு வருடச் சந்தாத் தொகையையும் மற்றும் பெரும்பாலோர் ஒரு வருடச் சந்தாத் தொகையையும் இன்னும் அனுப்பாமலிருப்பதை நினைக்க நினைக்க ஒருபுறம் கவலையாகவும் மற்றொருபுறம் வருத்தமாகவும் தோற்றுகின்றன. என்னே! நமது குலாபிமானப் பெருமை! சாதியபிமான ஊக்கம்! சமூகத்தின் முன்னேற்றம்!

இனியேனும் நமது சந்தா நேயர்கள், இதை சாதிப் பத்திரிகைகள் நடக்கவேண்டியது முன்னேற்றத்திற்குரியதென்று தங்களது சந்தாவை பக்தி அன்புடன் அதி விரைவில் அனுப்பி பத்திரிகையை ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

குறிப்பு:—நமது குலாபிமான கனதனவான்கள் இனியாவது சற்றும் பின்வாங்காமல் விரைந்து முழு மனதுடன் நம் குல முன்னேற்றத்துக்கு சில ஆதாரமாயுள்ள நமது கள்ளர்கோமானை போற்றுவான் வேண்டி தங்கள் இயல்பிற்கு ஏற்றவாறு பாதுகாப்புக் கட்டணங்களிலும், ஆயுட் கட்டணங்களிலும் பரிந்து பங்கெடுத்துக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கின்றனம். (ப—ர்.)

-18-



உ
கணபதிதுணை.

# "கள்ளர் கோமான்"

[தமிழ் மாதப் பத்திரிகை]
பத்திராசிரியர்:—தி. மு. சுவாமிநாதமாதவராயர்.

| | | |
|---|---|---|
| உயிர்-உ. | சுக்கில ஆண்டு கார்த்திகைத்திங்கள் | மெய்-கூ. |

## நமது கோமானுக்கு ஆதரவு.

நமது கோமானின் அபிவிருத்தியின் பொருட்டு 20—8—29 முதல் 7—12—29-வரையில் சுற்றுப்பிரயாணஞ் செய்ததில் அடியிற் கண்ட ஆதரவுகள் கிடைத்திருக்கின்றன.

புதுக்கோட்டை—புதுக்கோட்டை மகாராசா அவர்களுடைய தன் மாமனார் உயர்திரு திருவாளர் அ. துரைச்சாமி பல்லவராயரவர்கள் மேலராசவீதி அருண்மிகு திருவாளர் பிரகாசமுத்துவிருபண்ணிகொண்டாரவர்கள், திருவாளர் ச. முத்துச்சாமி தென்னதிரையரவர்கள், பண்ணிகொண்டான்விடுதி திருவாளர் தி. இரத்தினசாமி பண்ணிகொண்டாரவர்கள் முதலானவர்கள் நமது கோமானுக்கு ஐமாசத்தில் ரூ. 1000 (ஆயிரம்) கொடுத்துதவிசெய்வதாய் வாக்களித்து 23-சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி பதிவு செய்து கொடுத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி—நமது கோமான் ஆரம்ப காலமுதல் பத்திராபிமானியாய் விளங்கும் திருச்சிராப்பள்ளி மணிமை உயர்திரு திருவாளர் மு. கந்தசாமி சேர்வை அவர்கள் ஒரு சமயம் நம்மை வலிந்துப்

பிழைப்புக்கு வெளிப்பட்ட பாதேசியாகக் கருதியதை நன்குணர்ந்து 25—8—29-ல் பொன்மலை திருவாளர் கி. ரா. கோவிந்தசாமி சேதுராயரவர்கள், திருவாளர் ஏழுகுடைய களப்பாடியாரவர்கள் முதலானவர்களை பெயர்க்கு அழைத்துக்கொண்டுபோனதில் அப்பெருந்தகையாரைப் பார்க்க இயலவில்லை.

வேங்கூர்—திருச்சி தாலூகா போர்டு மெம்பரும், கூத்தப்பால் "கள்வர் இளைஞர்" சங்கத்தலைவரும் ஆகிய திருவாளர் மு. தங்கமுத்து அம்பலாரவர்கள் ஒரு பாதுகாப்புச் சந்தாதாரராய் ரூ. 25. அனுப்புவதோடு "கூத்தப்பால், எத்திதொண்டார்பட்டி, அரசங்குடி" முதலிய கிராமங்களில் சுமார் பத்து (10) பாதுகாப்புச் சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புவதாயும், அதன் பின்னர் அவர்களுடைய பெயர்களைப் பத்திரிகையில் வெளியிடலாமெனவும் சொல்லியிருக்கிறார்கள்.

தஞ்சாவூர்—சிங்கவனம் பாளையதாரர் சவ்வாயி விசயாகுநாத கிருட்ணசாமி மெய்க்கன் கோபாலர் அவர்கள் நமது கோமானுக்கு இயன்றவகையில் பெருங்கொடை அளிப்பதாயும்; கந்தை திருவாளர் A. சோமசுந்தரம்பிள்ளை B. A., B. L., அவர்கள் இயன்ற வகையில் பேருதவி செய்வதாயும் வாக்களித்தார்கள்.

திருவையாறு—புதகிரி கிராமத்தில் சோழர் மரபில் திருவவதாரஞ்செய்து, திருப்பேரூர் திருவருள் சாந்தலிங்கசுவாமிகள் பரம்பரையில் ஞானோபதேசம்பெற்று, திருமுதுகுன்றம் திருவருள் குமார தேவர் மடாலயத்தில் மடாதிபதியாயெழுந்தருளியிருந்து, திருவையாறு பூசைப்படித்துறையில் சிங்கப்பூர் சுவாமிகள் அமைத்த ஆறுபத்துமூவர் மடாலயத்தில் மடாதிபதியாய் விளங்கும் வேதாந்த சித்தாந்த சுவானுபூதி மகான் சிதம்பரசுவாமிகள் அன்புபாராட்டி ரூ. 5. கொடுத்து கோமானுக்கு இன்றியமையாத பேருதவி செய்வதாய் வாக்களித்தார்கள்.

பசுபதிகோயில், இராசகிரி, வங்காரம்பேட்டை— நமது பத்திரிகாபிமானிகளும், சைவாதி அபிமானத்தியாகர்களும் ஆகிய பசுபதிகோவில், திருவாளர் திபாகாசகாடவராயரவர்கள், இராசகிரி திருவாளர் நடராசபிள்ளையவர்கள், வங்காரம்பேட்டை திருவாளர் சுப்பையாசேர்வையவர்கள் இப்பெருங்கொடை வள்ளல்கள் நாம் சென்றபோது இல்லாதிருப்பினும் நமது கோமானுக்குப் பெருங்கொடைகொடுத்துதவிசெய்வார்களென்று நிச்சயமாக நம்பியிருக்கின்றோம்.

திருத்துறைப்பூண்டி— திருவாளர் T. V. சந்திரசேகரஞ்சாளுவர் அவர்கள் இயன்றளவு பேருதவி செய்வதாய் வாக்களித்தார்கள்.

-19-



மகாராசபுரம்— திருவாளர் கிருட்ணசாமி மழவராயரவர்கள் கோமானுக்கு பாதுகாப்புச் சந்தா ரூ. 25. அனுப்புவதோடு திருவாளர் சச்சிதானந்த சேண்டப்பிரியர் அவர்கள் முதலானவர்களிடத்தில் ரூ. 35. வசூல் செய்து அனுப்புவதாய் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இடையூர்— திருவாளர் ரா. கந்தசாமி வாண்டையார் அவர்கள் நம் கோமானின் அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக்கொண்டு பாதுகாப்புச்சந்தா ரூ. 25. கொடுத்துதவிசெய்தார்கள்.

உதயமார்த்தாண்டபுரம் (இடையகாடு)— திருவாளர் சண்முகத்து சேர்வை அவர்கள் கோமான் அபிவிருத்தியைக்கோரி பாதுகாப்புச் சந்தா ரூ. 25. அனுப்புவதாய் வாக்களித்தார்கள்.

சிறுவளூர்—திருவாளர் விசையசேதுபதி அவர்கள் கோமானிடத்தில் மிக்க அபிமானம் வைத்து பாதுகாப்புச்சந்தா ரூ 25. அனுப்புவதோடு தமக்கு வேண்டியவர்களிடத்திலும் இயன்ற அளவு வசூல் செய்து அனுப்புவதாய் வாக்குக்கொடுத்தார்கள்.

மதுக்கூர்—பாளையதாரர் சவ்வாயி விசயாகுநாத பாலகி கி. இராசக்கண்ணு கனகசபை கோபாலர் அவர்கள் இயன்ற அளவு பேருதவி செய்வதாய் வாக்களித்திருக்கிறார்கள்.

அணைக்காடு—திருவாளர் அன்னையாபிள்ளை அவர்கள் மார்கழி மாசக்கடைசியில் கோமானுக்கு ரூ 100-க்குக் குறையாமல் கொடுத்துதவுவதாய் வாக்குக்கொடுத்திருக்கிறார்கள்.

ஆறுநாட்டார் (ஆவுடையார்) கோவில்—தெற்குப்பம் திருவாளர் வ. இரத்தினசபாபதி சேர்வை அவர்கள், திருவாளர் ஆ. க. ஆவுடை சேர்வை அவர்கள் இவ்விருவள்ளல்களும் தங்களால் இயன்ற அளவு பேருதவி செய்வதாயும் "சாட்டியக்குடி, மாவடிக்கோட்டை, சிறுகாசாவயல், அரண்மனைவயல், தியூர், சிறுமருதூர், வேளானி, குடிக்காடு, பொய்யவயல், கேசவேந்திரம், மேலக்காவனூர், கட்டிக்குளை, பலவாசன், விளானூர், ஏனாங்கம், நல்லிச்குடி, நில்லைவயல், பெருங்காசாவயல், மேலக்கரம்பை, குருந்தமண்டக்குடி, அம்பலத்தாடி, பஞ்சாத்தாங்கி, கெவ்வேலி, பமனூர், பண்ணையூர், இடையான்காடு" முதலியவூர்களிலுள்ள நமது பத்திரிகாபிமானிகளிடம் கேட்டுச்சொல்லி இயன்ற அளவு உதவிசெய்யச்செய்வதாயும் வாக்குக்கொடுத்திருக்கிறார்கள்.

சிதம்பரம்—பாண்டிமண்டலத்து, வெள்ளலூர்நாட்டு, பழையூர்ப் பட்டியில் செய்யாமுத்தையா திருக்கோயில் கட்டி முடித்தவரும்; காரைப்பாக்கம் திருவருள் குமாரசுவாமிச்சுவாமிகளிடத்தில் மிக்க பத்தியுடையவரும்; திருவையாறு பூசைப்படித்துறை திருவருள் சிதம்பரசுவாமிகளிடத்தில் பேரன்புடையவரும்; சுயசாதியபிமானத்தியாகரும்; கோமானபிவிருத்திக்கு ரூ 50. கொடுத்துதவிசெய்தவரும் ஆகிய திருவாளர் ஆறுமுகத்தேவரவர்கள் அன்புபாராட்டி, இரண்டு ஆடைகொடுத்து, செலவுக்கு ரூ 5. கொடுத்தார்கள்.

வடகத்தெருமேடு—திருவாளர் கோவிந்தசாமி வாண்டையாரவர்கள் கோமானபிவிருத்தியை முன்னிட்டு பாதுகாப்புச்சந்தா அனுப்புவதாய் வாக்குக்கொடுத்து "வடகத்தெருமேடு, கொத்தங்குடி தோப்பு" என்பவற்றில் 9 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி அனுமதி கொடுத்தார்கள்.

அம்மாப்பேட்டை—சிதம்பரம் தாலுகா அம்மாப்பேட்டை திருவாளர் துரைசாமி நாய்க்கர் அவர்கள் தாம் சந்தாத் தொகை வசூல் செய்து அனுப்புவதாய் சில சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி அனுமதிகொடுத்து சாமியம் திருவாளர் நாராயணசாமி வாண்டையாரவர்களுக்கு அறிமுகக்கடிதம் கொடுத்துதவி செய்தார்கள்.

சாமியம்— திருவாளர் நாராயணசாமி வாண்டையாரவர்கள் "சாமியம், மேலைவல்லம், கன்றுன்குளம், சிப்பாளன்கீழதெரு, மாங்களும்பட்டு, தண்டேசநல்லூர், கல்லூர், ஆயங்குடிப்பள்ளம், குமிளங்காடு" என்னுமூர்களிலுள்ள 31 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி அனுமதிகொடுத்து சந்தாத் தொகை வசூலித்து அனுப்புவதாய் வாக்களித்தார்கள்.

திருக்குருகாவூர்— திருவாளர் ப. செப்பையாத்தேவரவர்கள் அன்புடன் உபசரித்து ரூ 5. கொடுத்து கோமானுக்கு இன்றியமையாத பேருதவி செய்வதாய் வாக்களித்தார்கள். 3 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டனர்.

வைத்தீசுவரன்கோவில்— திருவாளர் அ. ச. அழகுதேவரவர்கள் அன்புபாராட்டி, உபசாரஞ்செய்து, ரூ 5. கொடுத்து, பத்திரிகைக்கு இன்றியமையாத பேருதவிசெய்வதாய் வாக்களித்து, தென்பாதி கிராமத்தில் 2 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி அனுமதிகொடுத்தார்கள்.



மேலையூர்— திருவாளர் ஆ. மணியத்தேவர் அவர்கள் அன்புபாராட்டி "மாத்தூர்படுகை, முக்குறும்பூர், மடப்புரம், மேலையூர்" என்னுங்கிராமங்களில் 9 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி அனுமதித்தார்கள்.

கொட்டூர்—திருவாளர் து. முத்தையா சேர்வை அவர்கள் நன்றி பாராட்டி நன்குபசரித்து, திருவாளர் வெங்கட்டராமையர் (கர்ணம்) அவர்களைக்கலந்து "கொட்டூர், கோவிந்தசேரி, வாதலூர், மாங்குடி, பனங்காட்டாங்குடி, அலிவாய்ப்பேட்டை, இஞ்சிகுடி, கண்டத்தோப்பு, வெள்ளித்தோப்பு, நெடுஞ்சேரி" முதலிய கிராமங்களிலுள்ள 17 சந்தாதாரர்களைப் பதிவுசெய்து கொடுத்தார்கள்.

முப்பயத்தங்குடி— திருச்செங்காட்டங்குடி சிவதலத்தில் கன்னிமாடாலயத் திருப்பணிசெய்யும் திருவாளர் சா. முருகையவாண்டையார் அவர்கள் நன்றி பாராட்டி நான்கு நாள் உபசரித்து ஏற்கனவே அனுப்பிய ரூ 10 நீக்கி ரூ 15 கொடுத்து பாதுகாப்புச்சந்தாவாகச் சேர்த்து, காரைக்காலுக்கு காரில் அழைத்துக்கொண்டுபோய், பனிக்காலத்துக்கேற்ற சீலமேக உல்சன் போர்வை வாங்கிக்கொடுத்து, அக்காரிலேயே திருமலைராயன் பட்டினத்தில் கொண்டுவந்துவிட்டுத் திரும்பிச்சென்றார்கள்.

அநந்தநல்லூர்—திருவாளர் கோவிந்தவாண்டையார் அவர்கள் நன்றி பாராட்டி நன்குபசரித்து பாதுகாப்புச் சந்தா ரூ 25. கொடுத்துதவிசெய்தார்கள்.

ஏனங்குடி—திருவாளர் முருகைய மன்னாரிங்காரியர் அவர்கள் "ஏனங்குடி, கண்டமாணிக்கம், சீதக்கமங்கலம், புளியஞ்சேரி, கடம்பங்குடி, ஊறுவெளி, மேலத்திருப்பூந்துருத்தி, வடவாறு, தேப்பிராண்மங்கலம்" முதலிய கிராமங்களிலுள்ள 13 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி பதிவுசெய்து கொடுத்தார்கள்.

நாகபட்டினம்—திருவாளர் கா. மு. சபாபதிசேர்வை அவர்கள் அன்புடன் பாதுகாப்புச் சந்தா ரூ. 25 கொடுத்துதவிசெய்தார்கள். திருவாளர் கலியமுடையார் சேர்வை அவர்கள் நமது கோமான் அபிவிருத்தியின்பொருட்டு பாதுகாப்புச் சந்தாதாராய்ச் சேர்ந்து ரூ. 25 அனுப்புவதாய் வாக்களித்தார்கள். வெளிப்பாளையம் திருவாளர் வீ. வெ. நாராயணசாமி சேர்வை அவர்கள் அன்புபாராட்டி ரூ 5 கொடுத்து கோமானுக்கு இன்றியமையாத பேருதவி செய்வதாய் வாக்களித்தார்கள்.

பிரதாபராமபுரம்(பூவத்தை.)—திருவாளர் பொன்னுசாமி சேர்வை அவர்கள் கோமானிடத்தில் மிக்க அன்புவைத்து பாதுகாப்புச் சந்தா ரூ. 25 அனுப்புவதாய் வாக்களித்திருக்கிறார்கள்.

தேமங்கலம்—திருவாளர் சிங்காரவேல் ஆரிச்சுற்றியார் அவர்கள் கோமானை விருத்தி செய்யும்பொருட்டு மிக்க ஆவல்கொண்டு பாதுகாப்புச்சந்தா ரூ. 25 விரைவில் அனுப்புவதாய் வாக்களித்து "பொன்குடிப்புலியூர், ஆரூர், ஆலக்குடி, செல்லூர், சிக்கல், ஒருச்சேரி, கொடிக்காப்பாலையம்" முதலிய கிராமங்களிலுள்ள 9-சந்தாதாரர்களுக்குப் பத்திரிகை அனுப்பும்படி பதிவுசெய்து கொடுத்தார்கள்.

புத்தகரம்—கீரனூர் திருவாளர் கோதண்டபாணிக்கண்டியர் அவர்கள் கோமானிடத்தில் மிக்க அன்புடையவராய் தாம் பாதுகாப்புச் சந்தா ரூ. 25 அனுப்புவதோடு தமது நண்பராகிய புத்தகரம் திருவாளர் V. முத்தையாவாண்டையாரவர்களையும் பேருதவிசெய்யச் சொல்வதாய் வாக்களித்தார்கள்.

---

இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கை தாலுகா, ஆநார்வட்டகை நாட்டு, கீழப்பூங்குடியிலிருக்கும் தென்னாட்டு ஆன்றிலையாகிய ஈகைமிகு திருவாளர் வீ. ந. ஆ. இராமையா அம்பலம் அவர்கள் நமது கோமான்மீது கிருபைகூர்ந்து பின்னுள்ள கடிதம் அனுப்பினார்கள்.

கனம் மிக்க கள்ளர்கோமான் ஆசிரியரவர்கட்கு.

ஐயா,

தாங்கள் நம் மரபு கலங்கருதி யாற்றிவரும் பணியும், இனி முயற்சியும் கண்டு களிபெருவகைவெய்தலோடு தங்களை மிகவும் பாராட்டுகிறேன்.

யான் இலங்கைக்குச் சென்றிருந்த காலத்து எனக்கு இவ்வின் பத்திரிகைகள் வந்ததுண்மையேயாயினும் அறிவிக்கப்படாமையின் அவ்விருந்து பத்திரிகை இவ்வழியனுப்பித்தருமாறு முன்னையாக [illegible] தாத்தொகை அனுப்பப்பெற்றிருந்தது. இப்பொழுதோ இரண்டு சஞ்சிகைகளும் வந்துகொண்டிருக்கின்றன. ஆதலால் [illegible] என் சரியான விலாசமுள்ள பத்திரிகை ஒன்றையாவது அனுப்பிவரும்படிசெய்வீர்களாக.

தாங்கள் ஒக்கூர் போர்திருந்தபொழுது யான் இலங்கையிலிருந்து வந்திலேனென்று எதிர்நோக்கியதாக தங்கள் பத்திரிகையால் உணர்ந்திலேன். யான் மதுரைக்கு [illegible] இவண் வந்தேன்.



எனக்கும் சமூக முன்னேற்றத்துக்குழைப்பான் ஓர் உண்மைத் தீர்மானம் முன்வால் வேண்டுமென பேராவா உண்டு. ஆதலின் தாங்கள் இவ்வமயம் இவ்வழிபோதருவதாயின் என்னாலான உதவிசெய்ய தயாரிலிருக்கிறேன். ஐயமின்றி வருவீர்களாக. மற்றவை நேரிற்பேசுமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

இங்ஙனம் தங்களன்பு விரும்பும்,

இராமையா.

கீழப்பூங்குடி, 21—11—29.

முற்கூறிய பெருங்கொடை வள்ளலாகிய வீ. ந. ஆ. இராமையா அம்பலம் அவர்கள் அன்புபாராட்டி நான்கு தினம் நல்லுபசாரஞ் செய்து "வீ. ந. சுப. சண்முக அம்பலம் அவர்கள், பழ. சுப. கா. பெரிய கருப்பனம்பலம் அவர்கள், கா. ஆக. சோ. ஆதினமழகனம்பலம் அவர்கள், சி. பெரு. அழ. ஆதினமழகியம்பலம் அவர்கள், ந. ராம. மாயனம்பலம் அவர்கள்" முதலானவர்களைக் கூட்டிவைத்து நம்மோடு நீண்டநேரம் அளவளாவி நமது கோமான் நீண்டகாலம் இப்பூவுலகில் நிலவும் பொருட்டு ஒரு அச்சுக்கூடம் அவசியமென்பதை நிச்சயித்து மேற்கூறிய "பழ. சுப. கா. பெரியகருப்பனம்பலம் அவர்கள், கா. ஆக. சோ. ஆதினமழகனம்பலம் அவர்கள்" முதலானவர்களோடு "பிரவலூர்" என்னுங்கிராமத்திற்கு வந்து "சி. பழ. சி. சின்னக் கருப்பனம்பலம் அவர்கள், சி. பெரி. செ. கார்கண்ணனம்பலம் அவர்கள், மு. பழ. ஆ. நாச்சியப்பனம்பலம் அவர்கள், மு. பழ. பெரி. பழனியாண்டியம்பலம் அவர்கள், ஒ. பழ. அரசப்பனம்பலம் அவர்கள், ஒ. பழ. பெரியகருப்பனம்பலம் அவர்கள், ராம. பெ. அழகாம்பலம் அவர்கள், சி. ஒ. காளிமுத்தம்பலம் அவர்கள், சி. ஒ. பெரி. வெள்ளைச்சாமி அம்பலம் அவர்கள்" முதலியவர்களைக் கூட்டிவைத்து நமது கோமானபிவிருத்திக்கு "அச்சுக்கூடம்" இன்றியமையாததென்பதை விளக்கிக்காட்டி ரூ. 500. சேகரஞ்செய்து, தஞ்சாவூர் ஜில்லா பூண்டி பெருநில மன்னரும், பாபநாசம் தாலூகா போர்டு பிரசிடெண்டும், கள்ளர் பெருமக்கள் தலைவருமாகிய V. A. வீரையாவாண்டையார் அவர்களுக்கு அனுப்புவதாய் வாக்களித்து காரில் பாகனேரிக்கு அழைத்துவந்து, தென்னாட்டு வேங்கைப்புலியாகிய திருவாளர் சி. உ. சுப. பில்லப்ப அம்பலம் அவர்களிடம் ஒப்புவித்து தாங்கள் கோமானுக்குச்செய்யும் பேருதவியை அவர்களுக்குந் தெரிவித்து, அவர்களையும் அவ்வாறே உதவிசெய்யும்படி சிபார்சு செய்து நமக்குச்செலவுக்கு ரூ. 22. கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

பாகனேரி—பெருங்கொடைத்தியாகராகிய திருவாளர் சி. உ. சுப. பில்லப்ப அம்பலம் அவர்கள் நன்றிபாராட்டி நன்குபசரித்து

கோமானின் அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக்கொண்டு முற்கூறிய கிழப்பூங்குடி திருவளர் திருவாளர் வீ. ந. ஆ. இராமையா அம்பலம் அவர்கள் சொல்லியபடி சேகரஞ்செய்து முற்கூறிய திருவாளர் V. A. வீரையா வாண்டையார் அவர்கள் விலாசத்துக்கு அனுப்புவதாய் வாக்களித்தார்கள்.

அன்புமிகு திருவாளர் R. V. சாமிநாதம் அவர்கள் நன்புமிக்க உபசாரஞ்செய்து கோமானுக்கு பாதுகாப்புச்சந்தா ரூ 25. அனுப்புவதாய் வாக்களித்து "பாகனேரி, காடனேரி, நகரம்பட்டி, விளனேரி, காளையார்மங்கலம், கொட்டாம்பட்டுபுளி, நெப்புகப்பட்டி" என்னுங்கிராமங்களில் 18 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி பதிவுசெய்து கொடுத்தார்கள்.

தலைஞாயிறு—பாண்டிமண்டலத்து ஆதார்வட்டகை நாட்டினின்று, சோழமண்டலத்து தஞ்சாவூர் ஜில்லாவில் "மாயவரம், சீர்காழி" தாலூகாக்களில் "தலைஞாயிறு, பட்டவிருத்தி, நடராசபுரம், மண்ணிப்பள்ளம், ஆதமங்கலம், மாதூர்திருவாசல்" முதலிய கிராமங்களில் குடியேறிய கள்வர் பெருமக்களின் தலைவராகிய தலைஞாயிறு திருவாளர் மு. வெள்ளையன்சேர்வை (துரி) அவர்கள் ஏற்கனவே மூன்றுதடவை செலவுக்குக் கொடுத்த ரூ 5. நீற்க பாதுகாப்புச்சந்தா ரூ 25. கொடுத்துதவி செய்தார்கள். திருவாளர் சொ. வெள்ளையன் சேர்வை அவர்கள் ரூ 10. கொடுத்துதவினார்கள். இருவர்களும் முற்கூறிய கிராமங்களிலுள்ள 12 சந்தாதாரர்களிடத்தில் தலா ரூ 5 வீதம் வசூல் செய்து அனுப்புவதாய் வாக்களித்தார்கள்.

பரவாக்கோட்டை—திருவாளர் மு. ஆதிமூல அம்பலகாரர் அவர்கள் நன்றிபாராட்டி நல்லுபசாரஞ்செய்து, வெண்டாவல்குடி சேந்தாக்குடி முதலிய கிராமங்களுக்குவந்து வாக்குச்சகாயஞ்செய்தார்கள்.

சேந்தாக்குடி—திருவாளர் மிச. இராமசாமி அம்பலம் அவர்கள் அன்புகூர்ந்து "சேந்தாக்குடி, குளவாய்ப்பட்டி, கீழையூர், வெண்டாவல்குடி, பாலையூர், அரிமளம், நம்புகுளி, ஆவுடையார்பட்டி, முதலியகிராமங்களிலுள்ள 20 சந்தாதாரர்களுக்கு பத்திரிகை அனுப்பும்படி பதிவுசெய்து கொடுத்தார்கள்.

---

விண்ணப்பம்—சகோதரர்களே! கடவுள் ஒருவர் உண்டென்பதற்கும்; அக்கடவுள் "மெய், வாய், கண், மூக்கு, செவி" என்பனவாகிய ஐம்புலனின்றி, இயல்பாகவே எல்லாவற்றையும் அறியும் பேறிவினர் என்பதற்கும்; தமக்கு "மிக்காரும், ஒப்பாரும்" இல்லாதவர் என்பதற்கும் அறிகுறியாக மண்ணினால் பிள்ளையார் பிடித்துவைத்து "விநாயகர்" என்று பெயரிட்டு வணங்கிவந்தவர்களும்; பின்னர்



அவ்விநாயகர் உருவினை கல்லில் அமைத்து "இலிங்கோற்பவர்" என்று பெயரிட்டு எண்ணிறந்த திருக்கோயில்கள் கட்டிவைத்தவர்களும்; அக்கோயில்களில் "சத்தி, சிவன், அலர்மகள், நாரணன், கலைமகள், பிரமன், வைரவன், வீரபத்திரன், முருகன், ஐயன், சாத்தன், காளி" முதலிய தெய்வங்களாய் விளங்குபவர்களும்; "கோச்செங்கட்சோழ நாயனார், புகழ்ச்சோழ நாயனார், இடங்கழிநாயனார், கூற்றுவநாயனார், கழற்சிங்க நாயனார், ஐயடிகள் காடவர்கோனாயனார், மெய்ப்பொருள் நாயனார், நரசிங்கமுனையரைய நாயனார், திருமங்கையாழ்வார்" என்னும் தெய்வத்திருத்தொண்டர்களாய் திருக்கோயில்களில் விளங்குபவர்களும்; "நகரம், நாடு, ஆறு, ஏரி, ஊர்" முதலியவற்றையுண்டுபண்ணினோர்களும்; "அரையர், இராயர், ஆக்கியர், ஆளியர், ஆட்சியர், ஆண்டார், பிரியர், கொண்டார், நாடார், நிரையர், சுற்றியர், வெற்றியர், கொளுத்தியர், பொறுக்கியர்" முதலிய பட்டமுடைய அரசர்களாய் தொன்றுதொட்டு உலகினை ஆட்சி புரிந்தோர்களும்; "வேளிர், நாகர், சோழர், தொண்டையர், பல்லவர், காடவர், சேதியர்" என்று கூறப்படுவோர்களும்; "சேனாபதி, தானாபதி" முதலிய போர்வீரர்களாய் விளங்கியோர்களும்; "கன்னன், காரி, ஓரி" முதலிய எண்ணிறந்த வள்ளல்களாய் விளங்கியோர்களும்; "பாரி, அகத்தியர்" என்று கூறப்படுவோர்களும் நம்முடைய முன்னோர்கள் என்பதற்கும், நம்முடைய மரபோரை விடப்பழமையான மனிதவர்க்கம் உலகில் இல்லையென்பதற்கும் தக்க ஆதாரங்களிருக்கின்றன. இத்தகைய மேன்பாடுற்ற நம்முடைய சமூகமானது மிக்க தாழ்வான நிலைமையிலிருப்பதைப்பற்றி கவலைப்படாமலிருக்க முடியவில்லை. தெய்வ சம்பந்தமுடைய இச்சமூகத்திற்குச் செய்யுந்தொண்டானது தெய்வத்திற்குச் செய்யுந் தொண்டாகுமெனவும்; இச்சமூகத்திற்குத் தொண்டு செய்யாதிருப்போமாயின் இச்சமூகத்திற் பிறந்தவனல்லேன் ஆவேனெனவும் கருதி சமூகத்தொண்டுசெய்ய முன்வந்த எமக்குக் கடவுள் உதவிசெய்வாராக. ஒருவித பற்றுமில்லாத எமக்கு சமூகத்தொண்டு செய்யுந்தோற்றம் வந்ததானது சமூகத்தோர்கள் செய்த புண்ணியமேயாகும். இக்கின்றிப் பாதிபிக்கும் எமக்கு உதவிசெய்வோர்கள் இவ்வுலகத்தில் புகழையும் அவ்வுலகத்தில் பேரின்பத்தையும் அடைவர் என்பது நிச்சயமேயாகும். "இலங்கை (சிலோன்), பர்மா (இரங்கோன்), பினாங்கு, கிள்ளான், சிங்கப்பூர், கோலாலம்பூர்" முதலிய நாடுகளில் வசிக்கும் எமது சகோதரர்கள் தங்கள் தங்களாலியன்ற வரையில் "பாதுகாப்புச்சந்தா, ஆயுட்சந்தா, நன்கொடை" என்பவற்றுள் ஒன்றை அனுப்பி அச்சுக்கூடம் வைத்துக்கொடுத்து எக்காலமும் "கள்வர் கோமான்" பத்திரிகை நடைபெறும்படிசெய்து எமது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பார்களென்று நிச்சயமாக நம்பியிருக்கின்றோம். எமக்குப் பிரதிநிதியாக கோமானை நடத்தும் உத்தமத்

தொண்டர் கிடைக்கப்பெறுமையால் யாம் முற்கூறிய நாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணஞ்செய்து எமது குறைகளை சகோதரர்களிடத்தில் நேரில் தெரிவித்து நிவர்த்தி செய்துகொள்ளவியலாத நிலைமையிலிருக்கின்றோம். அச்சில்லாமல் தேரோட்டுவதுபோல "அச்சுக்கூடமும், பொருளும்" இல்லாமல் திண்டாடித் தெருவில் நின்று, பரிதபித்துப் பத்திரிகை நடத்தும் எம்மிற்குறை கூறுவதிற் பயனில்லை. பெருந் திரளாகிய நம் சமூகத்தவர்கள் கவனிக்காத குறையொன்று எம்மைத் துன்பத்திலாழ்த்தி வருத்துகின்றது. எல்லாம் வல்ல இறைவன் காப்பாறுக.

குறிப்பு:—நமது கோமானுக்குச் சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் ஏற்படுத்தும்பொருட்டு சென்ற ஆடி மாசம் முதல் "இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னாற்காடு" ஜில்லாக்களிலும், புதுக்கோட்டை சீமையிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்த காரணத்தினாலும்; நமது பத்திரிகாபிமானிகள் சந்தாத்தொகை அனுப்பி ஆதரிக்காமல் மௌனஞ்சாதிப்பதினாலும்; நேரிற்சென்று சந்தாத்தொகை கேட்கும்போது சால்சாப்பு சொல்வதினாலும்; கடன் கொடுக்கக்கூடியவர்கள் இல்லாததினாலும் சிலமாதங்களாக காலந்தாழ்த்து பத்திரிகை வெளிவந்தமைக்கும், புரட்டாசி ஐப்பசி பத்திரிகைகளை ஒன்றுசேர்த்து வந்தமைக்கும், இப்பத்திரிகையும் மார்கழிப் பத்திரிகையும் சேர்ந்துவந்தமைக்கும் மன்னிப்பார்களாக. கடவுள் துணை.

ப—ர்.

## அறிக்கை.

அரசாங்க நிந்தனையில்லாத வியாசங்களையும் பொது நோக்காகவுள்ள கட்டுரைகளையும், நமது சாதி சம்பந்தமான நிருபங்களையும் அன்புடன் வரவேற்று நமது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். வியாசங்களெல்லாம் சிறந்த கருத்துகள் பொதிந்தும், வடமொழி எழுத்துகள் கலப்பின்றியும் ஒவ்வோர் எழுத்தும் தனித்தனியே தனி விளக்கவுஞ் செவ்வனே எழுதியனுப்பப்படவேண்டும். திருப்திகரமில்லா வியாசங்கள் பிரசுரிக்கப்படமாட்டாமையோடும் எக்காரணம் பற்றியும் திருப்பி அனுப்பப்படமாட்டா. சந்தா நெம்பர் குறிக்கப் பெறாத கடிதங்கள் யாரால் எழுதப்பட்டவையென்று தெரிந்து கொள்ளுதல் வெகு சிரமசாத்தியமாக இருப்பதால், இனியேனும், சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளல் வேண்டும். இல்லையேல் கவனிக்கப்படமாட்டாதென்பது திண்ணம்.



☞ குறிப்பு:—கோமானுக்கு அனுப்பப்படும் மணியார்டர்கள், கடிதங்கள், நிருபங்கள் முதலியவைகளெல்லாம் பத்திராசிரியர் விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும். [ப—ர்.]

விலாசம்:—தி. மு. சுவாமிநாத மாதவராயர்,
கள்ளர்கோமான் பத்திராசிரியர்,
மன்னார்குடி S. I. R. (தஞ்சை ஜில்லா.)

## சந்தா நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சென்ற சில சஞ்சிகைகளின் வாயிலாக, நமது கோமானுக்கு வருடம் இரண்டு தொடங்கி மாதங்கள் பல கடந்துவிட்டன வென்பதையும், சந்தாத்தொகை அனுப்பப்படவில்லை யென்பதையும், பத்திரிகை நிர்வாக சம்பந்தமான பண முடையைப்பற்றியும் தெற்றென விளக்கும்படியாக இடையறாது விண்ணப்பித்தும் நமது சந்தா நேயர்களில் அநேகர் தங்களது இரண்டு வருடச் சந்தாத் தொகையையும் மற்றும் பெரும்பாலோர் ஒரு வருடச் சந்தாத் தொகையையும் இன்னும் அனுப்பாமலிருப்பதை நினைக்க நினைக்க ஒருபுறம் விந்தையாகவும் மற்றொருபுறம் வருத்தமாகவும் தோற்றுகின்றன. என்னே! நமது குலாபிமானப் பெருமை! சாதியபிமான வகுப்பு! சமூகத்தினர் முன்னேற்றம்!

இனியேனும் நமது சந்தா நேயர்கள், இதர சாதிப் பத்திரிகைகள் அடைந்துவரும் முன்னேற்றத்தைக்கருதியாவது தங்களது சந்தாவை பாக்கி அன்னியில் அதி விரைவில் அனுப்பி பத்திரிகையை ஆதரிப்பார்களென நம்புகிறோம்.

குறிப்பு:—நமது குலாபிமான கனதனவான்கள் இனியாவது சற்றும் பின்வாங்காமல் விரைந்து முழு மனதுடன் நம் குல முற்போக்குக்கு சிறந்த ஆதாரமாயுள்ள நமது கள்ளர்கோமானை போஷிக்க வேண்டி தங்கள் இயன்றளவு பாதுகாப்புக் கட்டணங்களிலும், ஆயுட் கட்டணங்களிலும் பரிந்து பங்கெடுத்துக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கின்றோம். (ப—ர்)

# அறிஞரின் அமுதமொழிகள்.

It is part of our education that we should suffer.
—Selby.

நாம் துன்பப்படுவது நமது கல்வியின் ஓர் பகுதி. —செல்பி.

A little learning is a dangerous thing. —Pope.

அற்பக்கல்வி அபாயகமானது. —போப்.

I resolve never to speak of a man's virtues before his face; nor of his faults behind his back. —Beveridge.

ஒருமனிதனுடைய நற்குணங்களை அவனுக்கு முன்னும் அவன் தப்பிதங்களை அவனுக்குப்பின்னும் பேசுவதில்லையென்று தீர்மானிக்கிறேன். —பெவரிட்ஜ்.

Sloth is in itself both a great sin, and the cause of many more. —South.

சோம்பல் ஓர் பெரிய பாவமும் அநேக பாவங்களுக்குக் காரணமாயுமிருக்கின்றது. —சௌத்.

It is only by mixing freely in the world that one can form a proper estimate of his own capacity. —Smils.

உலகத்தில் மற்றவர்களோடு தாராளமாய்ப் பழகுவதனால் தான் ஒருவன் தன் திறமையை உண்மையாய் மதிக்கக்கூடும். —ஸ்மைல்ஸ்.

No man is more miserable than he that hath no adversity. —Taylor.

துன்பமில்லாதவனைப்போல் துர்ப்பாக்கியனில்லை. —டெயிலர்.

The glories of our blood and state
Are shadows, not substantiel things. —Shirley.

நம் வமிசத்தின் மகிமைகளும் நிலைமையின் மகிமைகளும் தோற்றங்கள்தான், உறுதியானவையல்ல. —ஷர்லி.

He that fears god fears nothing else. —Burke.

கடவுளுக்குப் பயப்படுகிறவன் வேறொன்றுக்கும் அஞ்சான். —பர்க்.

V. S. மாசிலாமணி நாடார்.



## பள்ளிக்கூடப் பாடங்களின் உரை ஆராய்ச்சி

ம. கா. சோமசுந்தரம் பிள்ளை, தமிழ்ப்பண்டிதர், மன்னார்குடி.

(159-ம்பக்கத் தொடர்ச்சி)

56. (செய்-35).

'மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளில் வைகும்
செறிப்புண்டரீகம் அன்ன முகத்தியர் முன்னே தென்னல்
பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனால் புனைந்த மௌலி
பறிப்புண்டும் வந்திலாதான் இனிப்பெறும் பான்மையுண்டோ'

இப்பாட்டின் உரையில், 'செறிப்புண்டரீகம் அன்ன மறிப்புண்ட' என்பதற்கு 'இராவணனால் அடக்கி வைக்கப்பட்ட' எனவும், 'மணிவரைத்தோளில் வைகும்' என்பதற்கு 'நீலமணியால் ஆகிய மலையை ஒத்த தோள்களின்மீது வாசம் செய்யும்' எனவும், 'செறிப்புண்டரீகம் அன்ன முகத்தியர் முன்னே' என்பதற்கு 'தாம் வாசம் செய்யும் கோயிலாகிய தாமரையை ஒத்த முகத்தையுடைய அட்டலட்சுமிகளுக்கு முன்னே' எனவும், 'பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனால்' என்பதற்கு 'ஐம்பொறிகளும் தாமரைபோல விகசிக்கப்பெற்ற ஒப்பற்றவனாகிய சுக்கிரீவனால்' எனவும், 'புண்டரீகத்தை ஒத்த பின்புறத்தையுடைய ஒருவன் என்று கொள்ளினும் பொருந்தும்' எனவும், 'இது குரங்கின் இயற்கையை வருணித்ததாகக் கொள்க' எனவும், கூறினர். இவர் கூறிய அறிவே அறிவு. இது எழுபரியோன்பால் வியாகரணங்களையும் ஒரு பகலிலே ஓதியுணர்ந்த சிறிய திருவடிக்கும் அமையாது. இதனாலும் தமக்குச் சங்கநூற்பயிற்சியின்மையும் நிகண்டுநூற் பயிற்சியின்மையும் இவ்வங்கதன் தூதுப் படலத்துக்குமுன்னும் பின்னும் உள்ள படலங்களில் பயிற்சியின்மையும் விளக்கினர்.

இப்பாட்டின் கருத்து, வானரசேனையின் பரப்பை இலங்காபுரியில் கோபுரத்திலிருந்து நோக்கிய இராவணன் மீது சுக்கிரீவன் பாய்ந்து கிரீடங்களைப் பறித்துக்கொண்டு இராமர் பால் வந்ததை அங்கதன் இராவணனுக்கு எடுத்துக்கூறி, சீதாபிராட்டியை விட்டிடல் தகுதி என்றான் என்பது. கிரீடம் பறிப்புண்ட இழிவைப் பெரிது படுத்தும் பொருட்டு, தன்னால் சிறையிடப்பட்ட பகைவர் ஆகிய தேவர் கண்டு இகழும்படியாகவும், தன்னோடு இருந்த அரம்பையர்கள் கண்டு வெறுக்கும்படியாகவும், சுக்கிரீவன் அவைகளைப்பறித்தான்

என்றான். தேவர் இராவணன் சிறையில் இருந்தது 'செம்பொனாட்டுள சித்தரைச் சிறையிடை வைத்தான், கும்பன் என்றுளான்' (கம்ப-இலங்கை கேள்வி) என்பதனால் அறிக. கிரீடங்கள் பறிபடும் காலத்து இராவணன் அரம்பையர் கூட்டத்தில் இருந்தான் என்பது 'நாறுதன் குலக்கிளையெலாம் நரகத்து நடுவான், சேறுசெய்துவைத்தான் உம்பர் நிலோத்தமை முதலாக, கூறுமங்கையர் குழாத்திடைக் கோபுரக் குன்றத்து-ஏறி நின்றனன் புன்தொழில் இராவணன் என்றான்' (இராவணன் தானைகாண்படலம். 37) 'கரியகொண்டலைக் கருவளையங் கடலினைக் கானைப், பெரிய கண்கள் பெற்றுவக்கின்ற அரம்பையர் பிறரும், உரியகுன்றிடை உருமிடி வீழ்தலும் உலைவுற்று, இரியல் போயின மயிற்பெருங்குலமென இரித்தார், (டி 41) 'தூபுர மடந்தையர் கிடந்தலற...—...குதித்தான்', (மகுடபங்கம் 15) என்னும் பாடல்களால் அறிக. இதனால் 'முகத்தியர்' என்றது அரம்பையரையே என்று தெளிக. இதை உணராது 'முகத்தியர்' என்றது அட்ட லட்சுமிகளை என்று உரைத்தவர் 'முன்னே' என்னும் சொல்லினது ஆற்றலைக் கருதினாரிலர். 'திருவளர் தாமரை' என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் உரையில் திருமகள் ஆசனம் ஆகிய தாமரையைத் தலைமகள் முகத்துக்கு உவமையாகக் கூறலாகாது என்று பேராசிரியர் கூறியதையும் நோக்கினாரிலர். விசயலட்சுமிக்கு முன்னே இராவணன் அபசயம் அடைந்தான் என்று கூறுவது தன் தாயை மலடி என்பவன் கூற்றேடு ஒக்கும் என மறுக்க. (இராவணனுடைய) தோளில் வைகும்........முகத்தியர் என்றதனால் தெய்வப் பெண்களிர் ஆகிய அரம்பையர் கல்வி விசேடம் குறிப்பிக்கப்பட்டது. வைகல்-துயிலல், படுத்துறங்கல். இதனைச் சிலப்பதிகார உரையில் 'வைகுறை' என்பதற்குத் 'துயில் அறுதல்' என்று அடியார்க்கு நல்லார் கூறியதனாலும் அறிக. 'புண்டரீகம்' என்பது தாமரை, புலி, வண்டு, கழுகு, தென்கீழ்த்திசையானை என்னும் பலபொருள்களை உணர்த்தும் ஒரு பெயர். 'வினைசார்வினையிடம் மேவி விளக்கப் பல பொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே' என்னும் நன்னூற் சூத்திரக்கருத்துக்கு ஏற்கத் தாமரைமலரைக் குறிக்க 'செறிப்புண்டரீகம்' எனவும், புலியைக் குறிக்கப் 'பொறிப்புண்டரீகம்' எனவும் அடைகொடுத்துக் கூறப்பட்டது. 'செறிப்புண்டரீகம்' என்பதில் 'முழுசெறி' என்பது முன்மொழிகெட்டு 'செறி' என நின்றது; 'இந்திரகோபம்' என்பது 'கோபம்' எனவும், 'மாணிக்கவாசகர்' என்பது 'வாசகர்' எனவும், 'எடுத்துக்காட்டு' என்பது 'காட்டு' எனவும் நின்றாற்போல. இவ்வாறு வருவதனை 'நாமைகதேச நாமக்கிரகணம்' என்பர் வடநூலார். 'குரபத்மன்' என்பது 'குரன்' எனப் பின்மொழி கெட்டு நிற்பதும் அது. 'முழுசெறி' என்பதற்கு 'புறவிதழ் ஒடிக்கப்பட்ட முழுப்பூ' என்பது பொருள். இதனைப் புறநானூறு சிலப்பதிகாரம் இவற்றின் உரைகளிற் காண்க. எனவே, 'செறிப்புண்டரீகம்' என்பதற்குப் புறவிதழ் ஒடிக்கப்பட்ட முழுப்பூ ஆகிய தாமரை என்பது பொருள். மலரின் அழகைப் புறவிதழ் மூடிக்குறைத்தலால், அப்புறவிதழ் ஒடிபட்ட தாமரையின் முழுமலர் அரம்பையர் முகங்களுக்கு உவமையாகக் கூறப்பட்டது.



இனி, 'செறிப்புண்டரீகம்' என்பதற்கு வேறோர் உரையுங் கூறலாம். இராவணன் அப்பொழுது நூற்றுக்கணக்கான அரம்பையர் புடைசூழ இருந்தான் என்று கம்பர் வருணித்துள்ளார். அதனை

'விழி மின்கனி இதழ்ப்பனை மென்தோள்
ஆழி வந்த அர மங்கையர் ஈடுணாற்று
எழி ரண்டினின்இ ரண்டெ யின்றோர்
சூழ்இ ரண்டு புடை யும்முறைசுற்ற',

(இராவணன் தானைகாண்படலம் 7). என்னும் செய்யுளிற் காண்க. அக்கருத்துப் பற்றி அவர் முகங்களுக்கு உவமையாகிய தாமரை என்பதற்கு 'செறி' என்னும் அடைகொடுத்துக் கூறினர். செறி என்பது முதனிலைத் தொழிற்பெயர். 'செறிதல்' என்பது 'செறி' என நின்றது. செறிதல்—செறிதல்—அடர்தல். இதனை 'செறித்த மயிர்க் கற்றை' 'செறிமணல்' எனச் செய்யுள் வழக்கினும்* 'தேங்காய் செறித்துக் காய்த்தது' என உலக வழக்கினும் கண்டுகொள்க. செறி என்பதற்கு ஒழுங்கு, வரிசை, எனவும் பொருள் கொண்டு, வரிசை வரிசையாக அமர்ந்திருந்த நூற்றுக்கணக்கான தாமரைமலர் முகத்தையுடையவர் ஆகிய அரம்பையர் முன்னே கிரீடங்களைப் பறித்தான் என்று இழிவு தோன்றக் கூறியவாறும். வீரன் ஒருவன் தோல்வியுற்றதைக் அது மங்கையர் பார்க்க நிகழ்ந்ததானால், அவனுக்கு மிகவும் நாணத்தையும் அவமானத்தையும் உண்டாக்கும் என்பது நினைவாம். இதனை 'காணொத்த வளிமங்கை முகத்தியர் நயனம் எல்லாம்-வாளொத்த' 'தாதவிழ் கூந்தல் மாதர் தனித்தனி நோக்கத்தான் அப்பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்' 'சானகி கருவன் என்னும் நாணத்தால் சாம்புகின்றான்' (கும்பகருணப்படலம்) என்னும் இவற்றால் அறிக.

'பொறிப்புண்டரீகம்' என்பதில் பொறி என்பது வரி. புண்டரீகம் என்பது புலி. எனவே உடம்பில் வரிகளையுடைய புலி என்பது. புலிக்குக் 'கொடுவரி' என்னும் பெயர் இதனால் வந்தது. 'புலிபொறிப் போர்வை நீக்கி' என்னும் சிந்தாமணி உரையில் 'பொறி' என்பதற்கு 'வரி' என நச்சினார்க்கினியர் உரைத்தது காண்க. 'வேங்கை வரிப் புலிக்கு' என்னும் முதுமொழியும் அதனை வலியுறுத்தும்.

---

* பரிபாடல்.

'பொறிப்புண்டரீகம் போலும் ஒருவனும்' என்புழி ஒருவன் என்பதற்குத் தனியன் (தனித்தவீரன்) என்பது பொருள். அஃதாவது 'வேறுதுணை வேண்டாதவன்'. வாலி 'கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ' என இராமனை விளித்துக் கூறியதும் அப்பொருட்டு. வடநூலார் 'அசகாய சூரன்' என வழங்குவர். இவ்வாறல்லாமல் இவர் உரையிற் கூறியவாறு 'ஒப்பற்றவன்' எனப் பொருள் கொண்டால், முன்னே 'புண்டரீகம் போலும்' என ஒப்புக் கூறியதற்கு மாறாகும் ஆகலால் அது பொருந்தாது. புலியைச் சுக்கிரீவனுக்கு உவமையாகக் கூறினன் அங்கதன். புலி எதற்கும் அஞ்சாது, துணைவேண்டாது, காடுகளில் உலாவும். 'புலிக்குத் தன் காடென்றும் பிறகாடு என்றும் இல்லை' என்பது பழமொழி. புலி பாய்ச்சலில் சிறந்தது. அதன் வேகம் அம்பின் வேகத்திலும் அதிகம். அதனை எதிர்த்து ஒரு வீரன் ஆயுதப்பிரயோகம் செய்ய முயற்சி செய்வதற்குள் அவன் மேற்பாய்ந்து ஆயுதத்தோடு தலையையும் பறிக்கும். அதுபோலச் சுக்கிரீவன் அஞ்சாமலும் வேறு துணையை வேண்டாமலும் அதிவேகத்துடன் இராவணன் மேற் பாய்ந்து கிரீடங்களைப் பறித்துக்கொண்டு திரும்பினன். அதுபற்றிப் புலி உவமையாகக் கூறப்பட்டது.

இதுவேயன்றி, ஒருவன் 'புலி புலி' என்று பெயரைச் சொன்ன மாத்திரையிலே கேட்டோருக்கு நடுக்கத்தை உண்டாக்கவல்லது. 'புலி புலி' என்று கூறிப் பிறருக்கு அச்சத்தை உண்டு பண்ணும் வழக்கு உள்ளதை மதுரைக்காஞ்சி, பரிபாடல் முதலியவற்றால் அறிக. புலி எதிர்ப்பட்டவன் புலியினது அறைக்குப் பிழைத்தான் ஆயினும் அச்சம் முற்றி இறப்பான் என்பர். புலி எதிர்ப்பட்ட மான் முதலிய மிருகங்கள் எல்லாம் நடுக்கத்தால் கீழே விழுந்து உதைத்துக்கொள்ளும் என்பர். அவ்வாறே நெடுந்தூரத்தில் உள்ள பகைவரைக் கனவிலும் நடுக்கஞ் செய்பவன் சுக்கிரீவன் என்பதுபற்றிப் புலியை அவனுக்கு உவமையாகக் கூறினன்.

அன்றியும், புலியானது புறத்தில் தங்கியிருந்தாலும் அதன் குட்டியை அழிக்க மற்றெதனாலும் முடியாது. இதனை 'நட்டவர் குறை கேட்டே பகைமுகம் கடுகுற்றோர், குட்டியைத் தின்னலாமே கோட்புலி புறத்ததாகக், கட்டியங்காரன் என்னும் கழுதை நம்புலியைப் பாய, ஓட்டி இஃதுண்ணலாமே உரைவல்லை அறிக என்றான்' என்னும் சிந்தாமணியால் அறிக. சூர்ப்பநகைப் படலத்திலும் 'புலிதானே புறத்ததாக குட்டிகோட்படாதென்ன, ஒலியாழி உலகுரைக்கும் உரைபொய்யோ வழியினும், சலியாத மூவருக்கும் வானவர்க்கும் தானவர்க்கும், வலியாலே யான்பட்ட வலிகாண வாராயோ' என்று சூர்ப்பநகை கூறியதும் காண்க.

## மக்களின் கடமை—தொண்டு.

(நா. ஆ. சோ. ஆதினமழகன், கோற்றுன், பர்மா.)

(145-ம் பக்கத் தொடர்ச்சி.)

தொண்டு செய்பவர்க்கு மிக்க துன்பமுண்டு என்பதை யானுணர்வேன். எங்ஙனமுண்டாகாதிருக்கும். எம்முதாதையர்கள் காரணம் பற்றியோ காரணமின்றியோ ஒரு வழக்கத்தை கையாண்டிருப்பார்களாயின் அதனையே தங்கள் சந்ததி பரம்பரையாக கையாளல் வேண்டுமெனவும் (பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே) என்றதுபோல தற்கால நாகரிகத்திற்கு முற்றும் முரணுய முடைவழக்கமாயிருந்தால் வேண்டாமென்பார் பாற் சீர்திருத்தக் காரணம் கேட்கப்புகின் எங்கள் தந்தையர் காலத்துக்கு முன்னமே பழக்கத்திலிருந்துகொண்டு வருகிறதென்று சொல்வதொன்றைத்தவிர காரணம் விளங்காமலும் மற்கடம்போன்று கைநெகிழ்விடாமலும் மனித சமூகத்தை பிற்போக்குத் தீர்த்துச்செல்லும் மதியற்ற முதியோரிருக்கும் வரையிலும்

அந்தோ! செல்வர்களென்று திமிர்கொண்டுள்ள சிலர் மக்கட்குத் தொழும் துன்பத்துறல் சொல்லமுடியுங்கொல். ஆனல் சில செல்வர்கள் பிறர் நலமே தங்கள் பெருமையைக் கருதி துன்பத்துடைக்கும் தாய்மையுளத்தாராய் தங்கள் செயலாலும் பொருளாலும் உதவியளிக்கும் வள்ளல்களாக மிளிர்கிறார்கள். அத்தகைய வள்ளல்களில் எனதுள்ளங் கவர்ந்த கள்வர் ஒருவர் உண்டு. ஆதலின் செல்வர்களென்றால் யாவரும் மறத்துறையாளரென்று அர்த்தம் கொடுவிடல் வேண்டாம். மேற் கூறிய திமிர்கொண்ட சிலர் அகங்காரமேப் பிடித்தவர்களாய் அவர்கள் சொல்லே மறையாகவும் அவர்கள் செயலே ஆண்டவன் செயலாகவும் ஏழைமக்கள் எத்துணை இடுக்கட்பட்டேனும் அவர்கள் காற்கீழ் பணி புரிதல் வேண்டுமெனவும் இன்ப துகர்ச்சிபெறும் பெரும்பேற்றை இறைவன் அவர்கள் மாட்டேயளித்தானெனவும்

'பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவே
குறிக்குமிச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே'.

'கூத்தாட்டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்குமது விளிந்தற்று'.

என்ற பெரியோர் கூற்றுக்களையும் உன்னலாப்பசெய்து செருக்குற்று ஏகபோகமாய் உரிமையநுபவிக்கக் கருதி பலர் துன்பப் பார்த்தனமிக்கும் தனவந்தர்களிருக்கையில்

இன்னொருசாரார் தாங்கள் கண்டதே காட்சியும் கொண்டதே முடிபு தாங்களே உலகம் தம்போன்ற முதறிவாளர்கள் உளரோ? நமக்குத் தெரியாத ஒன்றை எவன் கண்டான் அவன் கிடக்கிறான் பேயன் பித்தன் எனப்பிதற்றி உகைத்தெழ நோக்காது இறைஞ்சுந் தவனிகளைப் குறுகிய மனத்தராய் ஆணவமெனும் சாத்தான் அவர்க ளகக்கண்ணை மறைத்தலான் ஒன்றும் உணராத பாமரமக்களை அவர்க ளாட்சிக்குள் அடக்கி ஒடுக்கி நடப்பான்செய்து அவர்கள் ஐயா வெனவும் இராசாவெனவும் அம்மா! மிக தருக்கியவர்களாய் உன்மத்தம் பிடித்த சில பெரியார்களிருக்கையில்

மற்றொரு சிலர் பொதுநல ஊழியரை பொது ஜனங்கள் ஆதரிக் கிறார்களென்ற அழுக்காறு கொண்டவர்களாய் தாங்களும் பொது நலம் நாடாது நாடினோர் மீதும் பொச்சாப்புக்கொண்டு தொண்டர்களை இழித்துப் பழித்துக்கூறுவதையே தங்கள் தொழிலாகக்கொண்ட பொறாமைக் களஞ்சியங்களிருக்கையில்

எங்ஙனம் பொதுநலச் சீர்திருத்தக்காரர்களுக்கு துன்பமுண்டா காமற்போகும். மேற்கண்டவர்கள் போன்றாரின் உரிமையை யொழிப் பதல்லவோ பொதுநலச்சீர்திருத்த நோக்கம். அங்ஙனமிருக்க அவ் விழிதகை யொழுக்குடையோர் எதிர்ப்பின்றி வாளாகிடப்பரோசொல். இத்தகையோரிடையில் எம்மக்கள் படும்பாட்டைப் பாருங்கள் பாருங் கள். அவர்களுய்வான் வழி கோலுங்கள். காருண்ய கவர்ன்மெண்டா ரும் தாயைப்பான ஒற்றர்களை வைத்துக் கவனியார்களாயின் எனது கவிற்றிக்கு தக்க ஆதாரமின்றிப்போகா. இங்ஙனம் கல்வி கேள்வி யறிவான துணையின்றியும் கூட்டுறவாதியான பிணைப்பின்றியும் பெ ரும்பாலான மக்கள் தவிக்கிறார்கள். ஆகையால் பல தொண்டர்கள் முன்வந்துழைத்தல்வேண்டும். இனி அகராதி தொகுக்கப்படுமானால் தொண்டர்களெனும்பதற்கு பிரதி பதம் துன்பம் சகிப்போரென்றே தொகுக்கப்படுமென்று கருதுகிறேன்.

துன்பங்கருதி வாளாவிருத்தல் பகுத்தறிவுடைய மனிதவியற்கை க்கு பொருந்துவதாமோ. இயேசுகிறிஸ்து நாதரை யெண்ணிப்பா ருங்கள். புத்தர்பெருமானை நினையுங்கள். முகமது நபியை முன்னுங்கள். இவர்களெல்லாம் ஒருபுறமிருக்க.

தற்காலம் யாம் கண்கூடாகப் பார்த்துவரும் கேட்டுவரும் தேச பக்தர்களை சிந்தியுங்கள். அவர்கள் பட்டபாடும் படும்பாடும் எம்மாலி யம்பும் தகையதா. அவர்களிவ்வளவாம் தங்கள் தங்கள் போகபோக்கி யங்களெல்லாம் துறந்து காராக்கிரகப் பிரவேச மெய்தி பல துன்பப் பட்டு உயிரையும் அர்ப்பணஞ்செய்து உழைத்தார்களே உழைக்கிறார்



களே எதற்காக? யார் நலம்கருதி? தேசநலங்கருதியே யென்பது யான் கூறவேண்டியதில்லை. ஆங்கிலம் படித்த அறிஞர்களன்றி பெரும் பான்மையோர் உணராதிருந்த அரசியலமைப்பின் பொதுவான இலட் சியங்களை மூலை முடுக்குகளிலுள்ள பாமரமக்களும் உணருமாறு செய்தது பெருமையேய்ந்து, உலக முழுமையும் உத்தமர் உத்தம ரென்று போற்றும் பேறுவாய்ந்த ஏழைபங்காளர் காந்தியடிகள் எப்பாடெலாம் பட்டார் படுகிறார். உள்ளுந்தோறும் உள்ளுந்தோ றும் இரத்தக்கண்ணீர் சொட்டுகிறது. அத்தகை தனக்கெனவாழா பிறர்க்குரியாளர் கொள்கைக்கும் எதிர்ப்பில்லையா? வசைதூற்றுதலில் லையா? அதற்காக தம் முயற்சியை கைநழுவவிட்டாரா? அங்ஙனம் நழு வவிடுவரேல் எங்ஙனம் மகாத்மாவாவர். வீறுகொண்டெழுந்துநிற் கிறார். பொதுமக்கட்காக தம் உயிரையும் தியாகம் செய்ய தயாரிருக் கிறார். ஆதலின் தூற்றலையும் போற்றலையும் பொருளாக மதிப்பவர் உண்மையிற் பொதுநல நோக்குடையரென்பது எப்படி பொருந்தும். இகழ்ச்சி புகழ்ச்சி கருதுவது உண்மைத்தொண்டிற்கு முற்றும் மாறு பட்டதாகும். தூற்றினும் தூற்றுக போற்றினும் போற்றுக துன்பம் வரினும் வருக இன்பம் வரினும் வருக யாது வரினும் வருக அச்ச மில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே. நாமார்க்கும் குடியல்லோம் அருள்மொழிகளுக்கிலக்காய் பலர்முன்போந்து பல துறைகளிலு முழைத்தல்வேண்டும் அறிஞர்களே முன் வாருங்கள்.

பாரதியின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கும் விவேகானந்தரின் பொன்மொழிகளைக் குறிப்பிட்டு இவ்வியாசத்தை முடிக்கிறேன். குறையுளதேல் மன்னிப்பார்களென்றே நம்புகிறேன்.

உனது விலாசமும் உனது செல்வமும் உனது வாழ்வும் உனது இந்திரிய போகத்துக்கல்ல வென்பதையும் உனது தனிமையான சொந் திய போகத்துக்கல்ல வென்பதையும் மறவாதே.

மிகத்தாழ்ந்த சாதியானும் அறிவிலியும் ஏழையும் எழுத்தறியா தவனும் தெருப்பெருக்குவோனும் உன் இரத்தத்தின் சேர்ந்தவர்க ளென்பதையும் உன் சகோதரர்களென்பதையும் மறவாதே.

என் மனந் துடிக்கிறது கதறுகிறேன் ஏழைகளின் நிலை ஏங்கவை க்கிறது. இலட்சக்கணக்கான எங்காட்டுமக்கள் பசியாலும் அறியா மையாலும் அலைந்துகொண்டிருக்கும் பொழுது அவர்களின் உதிரத் தால் வளர்ந்து கல்விகற்று அவர்களுக்கு சேவை செய்யாது நிற்கும் ஒவ்வொருவரையும் தேசத்துரோகி யென்றே அழைக்கிறேன். ஏழை களை அழுத்தி நசுக்கி தான் அடைந்த தனத்தால் டாம்பீகத்தால் உழ லும் ஒவ்வொருவனையும் கேடுகெட்ட அயோக்கியன் என்றே கூறு

வேன். பசிப்பிணியால் பல லட்சம் மக்கள் பரிதவிக்கும் அவர்கள் உதிரத்தால் இவர்கள் சுகமாய் வாழ இவர்களுக்கென்ன உரிமையுண்டு.

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே'.

## பெண்கள் சீர்திருத்த மகாநாடு.

### தலைவியின் பிரசங்கம்.

தீர்மானங்களின் விவரம்.

விவாகரத்து சட்டம் வேண்டுமாம்.

நான்காவது சென்னை பெண்கள் சீர்திருத்த மகாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை தினம் வில்லிங்டனில் மிசஸ் சீனிவாச அய்யங்காரின் தலைமையில் நடைபெற்றது. அன்று கூட்டத்தில் சமூக சீர்திருத்த விடயங்களைப் பற்றியே ஆலோசிக்கப்பட்டது. ஐரோப்பிய இந்திய பெண்கள் பலர் வந்திருந்தனர். பிரான்சு, ஸ்காட்லாண்டு அயர்லண்டு, இத்தாலி, ஆயர்லாந்து, ருமேனியா, அமெரிக்கா, கானடா, சப்பான், சீனா, முதலிய இடங்களிலிருந்தும் இங்கிலாந்திலுள்ள பெண்கள் சங்கத்தின் சார்பாக சீமான் தந்திடமிருந்து வந்திருந்த அநுதாபச் செய்திகளை மிசஸ் எஸ். சி. மசின்க வாசித்தார். இவ்விதம் பாராட்டுதல் செய்திகள் அனுப்பியதற்காக நன்றி தெரிவிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

பிறகு மிசஸ் S. சீனிவாசய்யங்கார் தலைமை வகிக்க வேண்டுமென்று மிசஸ் கசின்ஸ் பிரேரிக்க டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அதை ஆமோதித்தார்.

அக்கிராசனப் பிரசங்கம்.

மிசஸ் சீனிவாசய்யங்கார் பிறகு தலைமை வகித்துத் தமிழில் பேசியதாவது:—தேசத்திலுள்ள வயோதிக பெண்கள் சமூக விடயங்களில் எவ்விதச் சீர்திருத்தமும் வேண்டுவதில்லையென்றே நினைக்கின்றனர். ஆனால் யுவதிகள் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று கிளர்ச்சிசெய்ய வாரம்பித்தனர். வயதான என்னைப்போன்ற ஒரு பெண்ணை இம்மகாநாட்டில் தலைமைவகிக்குமாறு நீங்கள் அழைத்திலிருந்து நீங்கள் செய்யவிருக்கும் விடயங்களில் வயதானவர்களு



டைய ஆதரவையும் நீங்கள் பெறவிரும்புகின்றீர்களென்று ஏற்படுகிறது. சில துறைகளில் சீர்திருத்த மேற்பட அவசியமிருக்கிறதென நான் நம்புகிறேன். அவ்விதம் அவசியமான சீர்திருத்த விடயங்களில் வயதானவர்கள் யுவதிகளுக்கு உதவிபுரிய வேண்டியது அவசியமாகும். இவ்விடயங்களில் வயோதிகர்களின் உதவியை நீங்கள் பெறக்கூடும். சமூகச் சீர்திருத்தமுண்டுபண்ணுவது எப்பொழுதும் மிகவும் சிரமமான வேலையாகும். இந்தக் காரியம் சட்டத்தினால் சாதிக்கப்படுவதைவிடப் பொதுசன அபிப்பிராயத்தினால் சாதிக்கப்படுவது மேலென எனக்குத்தோன்றுகிறது. நாம் மிகுந்த சாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும். நாம் செய்யவிருக்கும் சீர்திருத்தங்கள் நமது தேசிய நாகரீகத்திற்கு ஒத்ததாக விருக்கவேண்டும். சிறிதுகாலமாக மேனாட்டு முறைகளைப் பார்த்து அப்படியே பின் பற்றுவதாக விருக்கிறது. எந்தச் சீர்திருத்தங்கள் மிகவும் அவசியமோ அந்தச் சீர்திருத்தங்களுக்காகவே நீங்கள் வேலைசெய்யவேண்டுமென்பது எனது வேண்டுகோள். ஏதோ ஒரு சிலர் விரும்புகின்றனரென்பதற்காகப் பெரும்பாலோருக்குப் பிடிக்காத ஒரு காரியத்தைச் செய்வது சிறிதும் விரும்பத்தகுந்ததன்று.

பெண்களுக்குச் சமத்துவ மளிக்கவேண்டுமென்பது சிறந்த லட்சியம்தான். புராதன இந்தியர்கள் இதை உணர்ந்தனர். இதற்குப் புராணங்களிலும் சரித்திரத்திலும் விசேட ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் ராசிய விடயங்களில் போலவே இதிலும் சிலர் கிளர்ச்சி செய்யவாரம்பிப்பதனால் எதிர் கிளர்ச்சியு மேற்படக்கூடுமென்பது எனது அபிப்பிராயம். இதனால் முன்னேற்றம் வெகு தூரம் பாதகமடையக்கூடும்.

சீர்திருத்தமென்பது சட்டஞ்செய்வதனாலும் இம்மாதிரி மகாநாடுகள் கூட்டுவதனாலும் மேற்படாதென்பதை மீண்டுமொருமுறை நான் வற்புறுத்த விரும்புகிறேன். இந்தச் சீர்திருத்தங்களை உண்டுபண்ண விரும்பும் உற்சாகிகளான யுவதிகள் கிராமாந்தரங்களுக்குச் சென்று அங்குள்ள உணர்ச்சியை அறியவேண்டும். அங்குபோய் பெண்கள் சங்கங்களை யேற்படுத்தி தங்கள் நடத்தைகள் மூலம் இவர்கள் தக்க சீர்திருத்தத்தை யுண்டுபண்ண முயற்சிக்கவேண்டும். அப்பொழுது சீர்திருத்தத்திற்குச் சாதகமாக பொதுசன அபிப்பிராய மேற்படக்கூடும். அப்பொழுதுதான் உண்மையாகச் சீர்திருத்தமு மேற்படக்கூடும்.

இன்று மகாநாட்டில் ஆலோசனைக்கு வரவிருக்கும் நகல் தீர்மானங்களை நான் கவனித்தேன். இரண்டொருதீர்மானங்கள் தவிர மற்றவைகளை நான் முழுவதிலும்ஆதரிக்கிறேன். இத்தேசத்தில் விவாகரத்

றுச்சட்ட மேற்படுத்துவதை நான் முற்றிலும் ஆட்சேபிக்கிறேன். இதனால் பெண்களுக்கு இன்னும் அதிக கெடுதலேற்பட்டு கணவர்கள் தங்கள் மனைவிகள் விஷயத்தில் அதிக பொறுப்பின்மையுடன் இருக்க நேரிடும். ஏதோ ஒரு சிலரின் நன்மைக்காக இச் சட்டத்தைச் செய்வது உசிதமாகாது. தீண்டாமை விலக்கைப்பற்றியும், துன்மார்க்கத்தை ஒழிப்பதைப்பற்றியும் இம் மகாநாட்டில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானங்களை நான் ஆதரிக்கிறேன்.

## தீர்மானங்கள்.

இந்திய பெண்கள் நன்மைக்காகச் சிறந்த தேசபக்தியுடன் ஸ்ரீமான் ஹரிவிலாச சாரதா முயற்சி யெடுத்துக்கொண்டதற்காக அவரிடம் நன்றிபாராட்டுவதாகவும், பால்ய விவாகத் தடைச் சட்டம்போன்ற மிகவும் ஜீவகாருண்யச் சட்ட மொன்றை நிறைவேற்றுவதில் உதவி புரிந்த கவர்ன்மெண்டிற்கும் மற்றவர்களுக்கும் நன்றி செலுத்துவதாகவும் முதலில் அக்கிராசனரால் ஒரு பிரேரேபனை பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

வயதாகாத பெண்கள் பால்யத்தில் பிரசவிப்பதான மிகவும் சீர்கேடான வழக்கத்தை இம்மகாநாடு பலமாகக்கண்டிப்பதுடன் பெண்கள் விவாக வயதை 16-ஆகவும் பையன்கள் விவாக வயதை 21-ஆகவும் சட்டப்படி உயர்த்தவேண்டுமென்றும், இப்பொழுது இந்தியா சட்டசபையில் கொண்டுவந்திருக்கும் சம்மத வயது மசோதாவை சம்மத வயதுக் கமிட்டி சிபார்சுகளை ஒட்டித் திருத்தவேண்டுமென்று டாக்டர் கவுரைக் கேட்டுக்கொள்வதாகவும் ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் ஒரு பிரேரேபனை கொண்டுவந்தார். பண்டித கிருஷ்ணவேணி அம்மாள் இதை ஆமோதித்தார்.

மிசஸ் ஆனன் ஆஞ்சலோ பையன்கள் விவாக வயதை 21-ஆகச் செய்யவேண்டுமென்பதை 19-என்று மாற்ற வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவந்தார். இங்கிலாந்திலேயே விவாக வயது 18-ஆகத்தானிருக்கிறதென்றும், பால்ய விவாக வழக்கமாகவிருக்கும் இந்தியாவில் 21-வயது விதிப்பது சரியில்லை யென்றும் மிசஸ் ஆஞ்சலோ கூறினார். ஸ்ரீமதி ஞானம்மாள் திருத்தத்தை ஆமோதித்தார். ஸ்ரீமதி அம்புஜம்மாளும் ஸ்ரீமதி அலர்மேல்மங்கைத் தாயாம்மாவும் திருத்தத்தை எதிர்த்துப் பேசினர். திருத்தம் ஓட்டுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது. பிரேரித்தவரும் ஆதரித்தவருமே சாதகமாக ஓட்டுச் செய்தனர்.

பால்ய விவாகத் தடைச் சட்டத்தைச் சரிவர அமுல் நடத்த வேண்டி பிறப்பையும் விவாகத்தையும் கட்டாயமாக (Register) பதிவு





செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பிறகு ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இது ஸ்ரீமதி விசாலாட்சி அம்மாளால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பெண்களுக்கு வாங்கின விலைக்கு வாங்குவதென்ற கெட்ட வழக்கத்தைக் கண்டிப்பதாகவும், தேச ஜனங்களின் ஆரோக்யத்தைக் கருதி தாதிகளை அதிகரிக்கத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும், இது சம்பந்தமான செலவு கவர்ன்மெண்டின் செலவில் முதன்மையாக விருக்கவேண்டு மென்றும், மற்ற நாடுகளிலிருப்பதுபோல் இந்தியாவிலும் சிசு சம்ரட்சணம் சம்பந்தமாகச் சட்டம் செய்ய வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டது. பெண்களிடையேயிருக்கும் முகமூடி முறையை ஒழிக்கவேண்டு மென்றும், இந்த வழக்கத்தை யனுஷ்டிக்கும் இந்துமுஸ்லீம் பெண்கள் இதை உடனே யகற்ற முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும், ஸ்ரீமதி பத்மாவதி அம்மாள் ஒரு தீர்மானம் பிரேரித்தார். மிசஸ் நல்லமுத்தம்மாள் இதை ஆமோதித்தார்.

மிசஸ் அஸிம் இதை எதிர்த்துப் பேசுகையில் முகமூடி முறை சிறந்த இயற்கை முறையை அநுசரித்திருக்கிறதென்றும், இப்பொழுது ஒரு தீங்கை அகற்ற முயற்சித்து மற்றொரு தீங்கை யுண்டுபண்ணுவதில் பயனில்லையென்றும், நியாய புத்தியைக்கொண்டு பார்க்குமளவில் மனம்போனபடி பெண் புருடர்கள் சேராமலிருக்க வேண்டி இந்த ஏற்பாடு ஏற்பட்டிருக்கிறதென்பது புலனாகுமென்றும், காரியமாக வெளிச் செல்வோருக்கு இதனால் எவ்வித தடையும் கிடையாதென்றும், மேனாடுகளில் ஏற்பட்டுவிட்டதுபோல் அளவிலாத வேடிக்கைகளுக்கு இது இடம் கொடுக்காதது தவிர இதில் வேறு கெடுதலில்லையென்றும், நல்ல முறையைக் கண்டிக்க வேண்டாமென்றும், கல்வி யபிவிருத்தி அவசியமே தவிர இதை ஒழிக்க வேண்டுவது அவசியமில்லை யென்றும் கூறினார்.

முடிவில் தீர்மானம் நிறைவேறியது. சில முஸ்லீம் பெண்கள் எதிராக ஓட் செய்தனர்.

பெண் புருடர்களுக்குள் சமமான உரிமைகள் இருக்கவேண்டி விவாகம், சுவிகாரம், சொத்துரிமை ஆகிய விஷயங்களைப்பற்றிய சட்டங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அடியுடன் ரத்து செய்ய வேண்டுமென்று ஸ்ரீமதி சி. சரஸ்வதி பாயின் பிரேரேபனையின்பேரில் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## விவாக ரத்துச் சட்டத்தின் அவசியம்.

மிசஸ் மாலதி பட்டவர்த்தன் பிரேரித்த பின்கண்ட தீர்மானத்தின்பேரில் விசேட விவாதமேற்பட்டது.

பெண் புருடர்களுக்கு சன்மார்க்க விடயமாக ஒரேவிதமான ஒழுக்கமுறை யிருக்க வேண்டுமென்றும், சட்டப்படி விவாகத்தை ரத்து செய்துகொள்ள பெண்கள் உரிமை கோருகின்றனரென்றும், ஆகவே பெண் புருடர்களுக்குச் சமமாக ஒரு விவாக ரத்துச் சட்டத்தைச் செய்யவேண்டுமென்றும் இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

மிசஸ் பட்டவர்த்தன் பேசுகையில் விவாக ரத்து விடயம் இந்தியா முழுவதிலும் உலகம் முழுவதிலும் இப்பொழுது பலமாக சர்ச்சை செய்யப்பட்டு வருகிறதென்றும், புருடர்கள் உயர்தர பதவி பெற்றிருக்கின்றனரென்றும், இதனால் மிகுந்த கெடுதலேற்படுகிறதென்றும், எல்லா விடயங்களிலும் தங்களுக்கும் சுதந்திரமிருக்க வேண்டுமென்பது உலக பெண்களின் உணர்ச்சியாக விருக்கிறதென்றும், இந்த ஆசையின் பயனாக விவாக ரத்து அவசியமாகிறதென்றும் இது உள்பட எல்லா விடயங்களிலும் சமத்துவம் கேட்பதில் எவ்விதத் தவறுமிருப்பதாகத் தமக்குப் புலப்படவில்லை யென்றும் கூறினார்.

மிசஸ் லட்சுமி அம்மாள் இதை ஆமோதித்தார். பெண் புருடர்களுக்குச் சமமாக விவாக ரத்துச் சட்டம் வேண்டுமென்று தீர்மானத்திலிருப்பதை எடுத்துவிட்டு சீவனாம்சத்துடனோ இல்லாமலோ சட்டப்படி பிரிந்திருக்கலாமென்று திருத்தவேண்டுமென்று மிசஸ் அம்புச அம்மாள் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்.

அவர் பேசுகையில், இப்பொழுது விவாக ரத்து வழக்கமிருக்கும் தேசங்களில் கூட இது மிகவும் சிக்கலான பிரச்னையாகவிருக்கிறதென்றும், வாழ்க்கை முழுவதும் ஒரே கணவனைக் கொண்டிருக்க வேண்டுமென்று இந்து சாத்திரங்களிலும் புராணங்களிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறதென்றும், மேனாடுகளிலும் இதே உணர்ச்சி அதிகரித்து வருகிறதென்றும், இத்தேசத்தில் இந்த விவாக ரத்துச் சட்டத்தை அநுமதிப்பதற்கே யில்லையென்றும், இது இந்து மதத்தையே அடியுடன் அழித்துவிடுமென்றும், தங்கள் கணவர்களால் நிராகரிக்கப்பட்ட பெண்கள் பின்னர் பாதி விருத்தியத்துடன் வெகு உபயோகமான வாழ்க்கை நடத்தக்கூடுமென்றும், விவாக ரத்துச் சட்டம் விரும்பத்தக்கதல்ல வென்றும், அனாவசியமுமாகுமென்றும் மிசஸ் அம்புசம்மாள் பேசினார்.





மிசஸ் ஞானம்மாள் திருத்தத்தை ஆமோதிக்கையில் சில்லரை விடயங்களுக்கு கணவர்கள் இச்சட்டத்தின்படி விவாக ரத்து செய்ய நேரிடுமெனக் கூறினார்.

மிசஸ் ருக்மணி லட்சுமிபதி திருத்தத்தை எதிர்த்துப்பேசுகையில் கணவன் பும்சத்துவமில்லாதவனாகவோ, அல்லது பெரிய வியாதிக் குட்பட்டவனாகவோ இருந்தால் பெண்கள் விவாகத்தை ரத்துசெய்து கொள்ளலாமென் மனு திட்டமாகக் கூறியிருக்கிறாரென்றும், தீர்மானம் தங்களுடைய புராதன நாகரீகத்திற்கு விரோதமானதல்ல வென்றும், கல்வி தகுந்தபடி பரவினால் இச்சட்டம் கெட்ட பிரயோகம் செய்யப்படமாட்டாதென்றும் கூறினார்.

மிசஸ் கிருட்ணவேணி அம்மாள் பேசுகையில் சமூக வழக்கங்களில் மிகப் பெருவாரியான மாறுதல்களைச் செய்யக் கூடாதென்றும், தங்கள் கணவர்களால் நிராகரிக்கப்பட்ட பெண்கள் சமூக ஊழியஞ் செய்யலாமென்றும் அறிவித்தார்.

மிசஸ் அலர்மேல்மங்கைத் தாயாரம்மாள் பேசுகையில் விவாக ரத்துச் சட்டம் ஏற்படும் முன்னர் பல பெண்களை ஒரு புருடன் விவாகம் செய்து கொள்வதைச் சட்டப்படி தடுக்க வேண்டுமென்று கூறினார்.

மிசஸ் மாலதி பட்டவர்த்தன் பதிலளிக்கையில், பெண் புருடர்களுக்கு இதனால் எல்லாவித சுதந்திரமுமளிப்பது கருத்தல்லவென்றும், இது நமது லட்சியமேயாகுமென்றும், இரண்டு பாலாருக்கும் வெவ்வேறான சட்ட மிருப்பதற்கில்லை யென்றும் சொன்னார்.

திருத்தம் பிறகு ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப்போயிற்று. சாதகமாக 21-பேர்களும் பாதகமாக 37-பேர்களும் ஓட் செய்தனர்.

பிறகு அசல் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதற்குச் சாதகமாக 44-பேர்களும் பாதகமாக 24-பேர்களும் ஓட் செய்தனர். இத்துடன் மகாநாடு இடைவேளைக்குக் கலைந்தது.

இடைவேளைக்குப் பின் மீண்டும் மகாநாடு கூடியதும் இந்துக் கோவில்களில் தேவதாசி முறையை அநுட்டிப்பதைப் பலமாகக் கண்டிப்பதாகவும், பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்குமாறு கவர்ன்மெண்டார் மதத்தாபன போர்டார், கோவில் கமிட்டியார், தர்ம

கர்த்தாக்கள் ஆகியோரைக் கேட்டுக்கொள்வதாகவும், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டியின் பொட்டுக் கட்டுத் தடை மசோதாவை ஆதரிப்பதாகவும், விபசார விடுதிகள் மசோதாவை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று சென்னை சட்டசபையினரையும் கவர்ன்மெண்டையும் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## அக்ராசனரின் வெளியேற்றம்.

இச்சமயத்தில் அக்ராசனர் மிசஸ் சீனிவாசஅய்யங்கார் சபையை விட்டு வெளியேறினார். அவர் வெளியேறும் முன்னர் பேசுகையில் இம்மகாநாட்டில் தலைமை வகிக்க வேண்டுமென்று தம்மைக் கேட்ட பொழுது விவாக ரத்துத் தீர்மானத்தைத் தாம் ஆட்சேபித்ததாகவும், அத்தீர்மானம் மகாநாட்டின் ஆலோசனைக்கு வராதென்று அப்பொழுது உறுதி கூறப்பட்ட பின்னரே தாம் மகாநாட்டில் தலைமை வகிக்கச் சம்மதித்ததாகவும், இப்பொழுது அத்தீர்மானம் மகாநாட்டில் ஆசர் செய்யப்பட்டு விட்டதால் அதைத் தாம் மீண்டுமொரு முறை கண்டிப்பதுடன் வெளியேறுவதாகவும் அவர் கூறினார். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மிசஸ் சீனிவாசஅய்யங்காருக்கு வந்தனோபசாரம் கூறுகையில், இத்தீர்மானத்தை தாம் தாக்கினின்று எடுத்து விடத் தாம் முயற்சிப்பதாகத் தாம் அக்ராசனரிடம் கூறியதுண்டென்றும், ஆனால் தீர்மானங்களைத் தயாரித்த கமிட்டியார் அதிருக்க வேண்டுமென்று வற்புறுத்தி விட்டனரென்றும், மிசஸ் சீனிவாச அய்யங்கார் மகாநாட்டில் தலைமை வகித்ததினாலேயே எல்லாத் தீர்மானங்களையும் அவர் ஒப்புக்கொண்டதாகாதென்றும் சொன்னார்.

மிசஸ் எம். இ. கசின்ஸ் பிறகு கூட்டத்தில் அக்ராசனம் வகித்தார். சென்னை குழந்தைகள் சட்டத்தைத் திருத்த கவர்ன்மெண்டாரும் சட்ட சபையும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், குழந்தைகள் உதவிச் சங்கம் போன்ற தாபனங்களுக்கு அதிகப் பணவுதவி செய்து குழந்தைகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், வங்காளத்தில் சரோஜ்நளினிதத் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல் இம்மாகாணத்திலும் ஜில்லா கிராமந்தோறும் பெண்கள் சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், வெளியூர்களில் இப்பொழுதிருக்கும் பெண்கள் சங்கங்கள் பெண்கள் நன்மைக்கான கைத்தொழில் கல்வி தாபனங்களை ஏற்படுத்தவேண்டுமென்றும், எல்லா பெண்களும் சமூக ஊழிய வேலைகளில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும், தீண்டத் தகாதவர்களெனப்படுவோர் இந்து சமூகத்தில் இழிவாக நடத்தப்படுவதைக் கண்டிப்பதுடன் அவர்களுக்குப் பொது வாழ்வில் எல்லாவித உரிமை



களையும் அளித்து இந்து சமூகத்தைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

14-வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆலைகளில் வேலை செய்யக் கூடாதென்றும், பெண்கள் அபேட்சகர்களைத் தேர்தல்களுக்கு நிறுத்த வேண்டுமென்றும், இந்தியா சட்ட சபையிலும், சென்னை சட்ட சபையிலும் பெண்களை நியமிப்பதுடன் தலத்தாபனங்களிலும் இவர்களுக்கு தானங்களை ஒதுக்க வேண்டுமென்றும், உலக சமாதானமுண்டுபண்ண இந்தியா கவர்ன்மெண்டு முதல் எல்லா கவர்ன்மெண்டுகளும் உழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதாகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பிறகு மிசஸ் கசின்ஸின் முடிவுரையுடன் ஸ்ரீமதி மாலதிபட்டவர்த்தன் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் கலைந்தது (சு. மி.)

---

## கி. உ-க்களின் குறைகள்.

### விருத்தாசலம் தாலூகா முதலாவது மகாநாடு.

விருத்தாசலத்தில் 17-ந் தேதி பகல் 3-மணிக்கு போர்டு பள்ளிக்கூடத்தில் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் முதலாவது மகாநாடு பென்ஷன் டிப்டி கலெக்டர் ஸ்ரீமான் சி. வி. சீனிவாசாச்சாரியார் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. வந்திருந்தவர்களில் முக்கியமாக ஸ்ரீமான் ரகுநாதசுவாமி அய்யங்கார் சப் மாஜிஸ்ட்ரேட், பி. ஆனந்தராவ் இஞ்சினீயர், M. G. பார்த்தசாரதி முதலியார் தாலூகா போர்டு தலைவர், வக்கீல் சீனிவாச ராவ், ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் நிர்வாக சபையார், இதர தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் ஸ்ரீமான் சப்தரிஷி அய்யர் இன்ன காரணத்திற்காக மகாநாடு கூடியிருக்கிறதென்று கூறி, ஸ்ரீமான் சீனிவாசாச்சாரியாரை அக்கிராசனத்திற்கு பிரேரிக்க, ஸ்ரீமான் கோதண்டராமய்யர் ஆமோதித்தார்.

### வரவேற்புப் பிரசங்கம்.

பிறகு வரவேற்புக் கமிட்டி தலைவர் சுப்பிரமணியம் ஸ்ரீமான் சிவக்கொழுந்து பிள்ளை பிரதிநிதிகளை வரவேற்று ஒரு பிரசங்கம் செய்தார். "நாம் மீண்டும் மீண்டும் நமது குறைகளை விடாது வற்புறுத்திவருவோமாகில் நாம் சித்திபெறுவோம். பத்துவருட காலமாக இந்த தாலூகாவில் சங்கங்களிருந்தும் அநேகர் மேல் அதிகாரிகளுக்குப்

பயந்து சோமலிருக்கிறார்கள். கிராம உத்தியோகத்தர்களின் பூர்வ நிலைமையையும் தற்கால நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் யாருக்கும் பெருந்துயரை விளைவிக்கும். எந்த அரசாட்சிக்கும் கிராம உத்தியோகத்தர்கள் தான் அடிப்படையாக இருக்கின்றார்கள். அவர்கள் இல்லையேல் விளைவு எங்கே, கணக்கு எங்கே, வரவு செலவு எங்கே, எல்லாம் சூன்யந்தான். ஒரு நாடு தானாக அமைந்துவிடுவதில்லை. பல வட்டங்கள் சேர்ந்துதான் ஒரு நாடாகும். நமக்கு இப்பொழுது மதிப்பில்லாமலிருக்கிறது. கிராம வாசிகளுக்கும் நமக்கும் உள்ள அன்பு நாளுக்கு நாள் குறைகிறது. இதற்குக் காரணம் நமது நிலைமை தாழ்த்தப்பட்டதுதான்.

கிராம உத்தியோகத்தர்கள் ரிவின்யூ இலாகா உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வேலை செய்கிறார்களில்லை. பல இலாகாகளுக்கும் வேலை செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் ரிவின்யூவிலிருந்து மாத்திரம் சம்பளம் கொடுப்பது போதாது. நமக்கு ஒன்றின் பின் ஒன்றாக அடுத்தடுத்து ஆபத்துகள் வந்துகொண்டிருக்கின்றன. முதலில் நமது பரம்பரை பாத்தியதையை ஒழித்துவிடத் தீர்மானித்து மசோதா கொண்டுவரலாயினர். அடுத்தபடியாக எல்லா உத்தியோக வர்க்கங்களுக்கும் பொதுவாக சம்பள உயர்வு கொடுத்த போது நம்மைக் கவனிக்கவேயில்லை. பிறகு கிளர்ச்சி செய்ததன் பலனாக நம்மில் கர்ணங்களுக்கும் சிப்பந்திகளுக்கும் சொல்ப உயர்வு தந்தனர். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்றபடி நம் நிலையை நாம் உயர்த்திக்கொள்ள நாம்தான் பாடுபடவேண்டும். ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ள கிராம உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடி அங்கங்கே சங்கம் அமைக்கவேண்டும். அதற்குத் தாய் சங்கமாக ஜில்லா சங்கமிருக்க வேண்டும். நமது குறைகளை அடிக்கடி மேல் அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கவேண்டும். வருடத்திற்கொருமுறை கூடும் மகாநாட்டில் வந்துவிட்டுப் போவதுடனில்லாமல் அடிக்கடி மீட்டிங்குகளை கூட்டவும் சங்கத்தை மாகாணசங்கத்துடன் சேர்க்கவும் வேண்டுமென்று சொல்லிமுடித்தார்.

## அக்கிராசனப் பிரசங்கம்.

ஸ்ரீமான் வி. சீனிவாசாச்சாரியார் தமது பிரசங்கத்தில் முக்கியமாக சொன்னதாவது:—

ராச்சியத்தில் மூலாதாரமாக இருக்கும் கிராமங்களுடைய பரிபாலனத்தில் நீங்கள் முக்கியமானவர்கள். கிராம பரிபாலன விடயமாய் சர்க்காரில் ஏற்பட்டிருக்கும் விதிகளில் அனேக அசௌகரியங்



கள் இருக்கலாம். இந்த அசௌகரியங்களையும் உங்களுக்கு வேலைகளில் ஏற்படும் துன்பங்களையும் நீக்குவதற்காகவும் உங்களுடைய நிலைமையை அபிவிர்த்தி செய்வதற்காகவும், ஒரு சங்கம் ஏற்படுத்துவது அவசியமாகும்.

உங்கள் சங்கத்திற்காக ஏற்படுத்திய மசோதா விதிகளை நான் பார்த்தேன். அவைகள் வெகு அழகாய் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு மாறுதல் செய்தால் நலமென்று எனக்குத் தோன்றுகிறது. சங்கத்தின் அலுவல்கள் 33-மெம்பர்கள் அடங்கிய ஒரு நிர்வாக சபையால் நடத்தப்படும் என்றும் விதிகளில் கண்டிருக்கிறது. 33-மெம்பர்களில் 24-மெம்பர்கள் விருத்தாசலத்திற்கு வெகு தூரத்திலிருக்கும் பிர்க்காக்களிலிருந்து வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டைக் காட்டிலும் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒரு சிறு சங்கம் ஏற்படுத்துவது அனுகூலமாயிருக்கும். இப்படிச் செய்தால் சங்கத்தின் கிளர்ச்சி தாலூகா முழுதும் வியாபித்திருக்கும்.

கிராம பரிபாலன சம்பந்தமான எல்லா சட்டங்களையும் விதிகளையும் எல்லா கிராம உத்தியோகத்தர்களும் நன்றாய் தெரிந்துகொள்ள வேண்டியது. இந்த சட்டங்களுக்கும் விதிகளுக்கும் சம்பந்தப்பட்ட புத்தகங்களை சங்கத்தில் வைக்கவேண்டியது. கிராம உத்தியோகத்தர்களின் வேலை விஷயமாய் ஜில்லா அதிகாரிகள் அப்போதைக்கப்போது பிறப்பிக்கும் உத்திரவுகளை பிரதி வருடமும் புத்தக ரூபமாய்ப் பிரசுரம் செய்து இந்த சங்கங்களுக்கு கொடுக்கும்படி ஜில்லா கலெக்டர் அவர்களைக் கேட்டுக்கொள்ளலாம்.

பழைய சட்டங்களைப் படிப்பதினால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சாவடி யிருந்ததாய் ஏற்படுகிறது. கிராம சம்பந்தமான எல்லா விளம்பரங்களும் சாவடியில் பிரசித்தம் செய்யப்பட்டன. கிராம விவகாரங்கள் அவ்விடத்தில் பரிசீலிக்கப்பட்டன. குற்றவாளிகள் அங்கே காவலில் வைக்கப்பட்டார்கள். கிராமத்தார்கள் கிராம உத்தியோகத்தர்களை சந்தித்து வேண்டிய தகவல்களை தெரிந்துகொள்வதற்கு சாவடிகள் சௌகரியமாய் இருந்தன. இப்போது அநேக கிராமங்களில் சாவடி கட்டிடங்கள் இல்லை. ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு சாவடி கட்டும்படி ஜில்லா அதிகாரிகளை கேட்டுக்கொள்ளலாம்.

கிராம பரிபாலன விதிகளில் ஏற்படும் அசௌகரியங்களை, மேலான அதிகாரிகளுக்கு தெரிவிப்பது சங்கத்தின் கடமையாகும். இந்த விதிகளில் முக்கியமான உத்திரவுகளுக்கு போர்டு நிலையான

உத்திரவுகள் என்று பெயர். இந்த உத்திரவுகள் நிலையானவை என்று பெயரை அடைந்திருந்தாலும் அவைகள் அடிக்கடி மாறுகின்றன. இம்மாறுதல்களை பயாசுகோப்பில் காட்டப்படும் காட்சிகளின் மாறுதல்களுக்கு ஒப்பிடலாம். இந்த மாறுதல்களுக்கு முக்கியமான காரணம் என்னவென்றால், விதிகளை ஏற்படுத்தும் உத்தியோகத்தர்கள் ராசாங்க விடயங்களில் தேர்ந்த நிபுணர்களாயிருந்தாலும் கிராம விவகாரங்களில் பிரத்தியட்ச அனுபவம் அதிகமாக பெறாதவர்கள். கிராமத்தார்களோடு அடிக்கடி பழகி இந்த விதிகளை அனுட்டானத்துக்கு கொண்டுவரும் கிராம உத்தியோகத்தர்களுக்கு இந்த விதிகளால் உண்டாகும் அசௌகரியங்கள் நன்றாய் தெரியும். அப்படிப்பட்ட அசௌகரியங்களை இந்த சங்கம் மேலான அதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டியது. இந்த சங்கம் நன்றாய் வேலை செய்தால் மேலான உத்தியோகத்தர்கள் விதிகளில் ஏதாவது மாறுதல்கள் செய்வதற்கு முன் சங்கத்தினுடைய அபிப்பிராயத்தை கேட்பார்கள்.

சங்கத்தினுடைய மற்றொரு கடமை கிராம உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்குவதற்கு வழிகள் தேடுவதாம். சமாபந்தி, ஆடிட்டு முதலிய காலங்களில் கிராம உத்தியோகத்தர்கள் தாலூகா கச்சேரியில் அனாவசியமாய் நிறுத்தப்படுகிறார்கள் என்று நமோநில்லாத வதந்திகள் ஏற்பட்டு இருக்கின்றன. கிராம உத்தியோகத்தர்கள் ஒழுங்காய் வேலைபாராத காரணத்தினால் அவர்கள் கச்சேரியில் தங்கும்படி நேரிடுமேயல்லாது தாலூகா சிப்பந்திகள் கெட்ட எண்ணத்துடன் அவர்களை நிறுத்திவைக்கலாம். இதனுடைய உண்மையை மேலான உத்தியோகத்தர்கள் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். பிரத்தியட்ச அனுபவமுடைய உங்களுக்கு உண்மை தெரியும். ஒழுங்காய் வேலை செய்யாத கிராம உத்தியோகத்தர்களை சீர்திருத்தி தாலூகா சிப்பந்திகளின் அக்கிரமச் செய்கைகளை மேலதிகாரிகளுக்கு தெரிவித்தோ இந்த துன்பங்களை நிவர்த்திப்பது சங்கத்தின் கடமையாகும். அநேக உத்தியோகத்தர்களடங்கிய இந்த சங்கம் இந்த விடயத்தை கவனிக்கிறார்களென்கிற உணர்ச்சியே துன்பங்கள் நீங்குவதற்கு சிறந்த சாதனமாகும். அநேக தவறுதல்களுக்காக வருடவாரியில் கிராம உத்தியோகத்தர்கள் சஸ்பெண்டு முதலிய தண்டனைகள் அடைகிறார்கள். இந்த தவறுதல்களையும் அவைகளினால் ஏற்படும் துன்பங்களையும் நிவர்த்திக்க இந்த சங்கம் தீவிரமான முயற்சிகள் செய்யவேண்டும்.

சங்கத்தினுடைய எல்லா கடமைகளிலும் அதிக முக்கியமானது [illegible] கிராம உத்தியோகத்தனும் தான் ஒரு பெரிய [illegible] சேர்ந்தவன், தன்னுடைய தவறுதல் [illegible]



பாதிக்கிறதல்லாமல் அந்த பெரிய சங்கத்திற்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும், தான் அப்படிப்பட்ட விபத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்கிற உணர்ச்சி பிறப்பதற்கு இந்த சங்கம் வேண்டிய ஆதாரங்களை உண்டுபண்ணவேண்டும். கிராம உத்தியோகத்தர்கள் தங்கள் தொழில் முறையில் கிராமத்தார்களுக்கும் சர்க்காருக்கும் அனுகூலங்கள் செய்யும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். குடி மராமத்திற்கு ஏற்பட்ட சட்டத்தை நிறைவேற்றுவதினால் கிராம உத்தியோகத்தர்கள் கிராமத்தார்களுக்கு ஆதாயத்தையும் சர்க்காருக்கு லாபத்தையும் உண்டுபண்ணலாம். வீடுகள் இல்லாமல் சிரமப்படுகிறவர்களுக்கு மனைகள் சாரி செய்விப்பது, பட்டா நிலங்களில் அத்துகளை காட்டி சர்க்கார் நில ஆக்கிரமிப்புகளின் துன்பங்களிலிருந்து குடிகளை நிவர்த்திப்பது, யூனியன் பஞ்சாயத்து இல்லாத இடங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி கிராமவாசிகளின் ஆரோக்கியத்தையும் நலத்தையும் விருத்தி செய்வது, தாழ்ந்த வகுப்பினர்களை முன்னுக்குக் கொண்டுவரும்படி சர்க்காரில் செய்யப்பட்ட ஏற்பாடுகளை நல்ல மனதுடனும் உற்சாகத்துடனும் அமலுக்குக் கொண்டுவந்து ஏழை சனங்களுக்கு சுகத்தை உண்டாக்குவது முதலிய அநேக வழிகளில் கிராம உத்தியோகத்தர்கள் நன்மைகளை செய்யலாம். கோர்ட்டு விவகாரங்கள், கள், சாராயம் குடித்தல் இவைகளால் ஏற்படும் கெடுதிகளையும் பொருள் செலவையும் நீக்க முயற்சிகள் செய்யலாம்.

இதர உத்தியோகத்தர்களைப் போல வேறு வேலைகளை செய்யக்கூடாதென்கிற நிர்ப்பந்தம் கிராம உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. அநேக கிராம உத்தியோகத்தர்கள் நிலங்களை வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறார்கள். கவர்ன்மெண்டில் விவசாய அபிவிர்த்திக்காக ஒரு தனியான டிபார்ட்மெண்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த டிபார்ட்மெண்டு பவுனை விதைத்து செப்புத் துண்டுகளை அறுவடை செய்வதாய் நாட்டார் சொல்லுகிறார்கள். கிராம உத்தியோகத்தர்கள் தங்கள் நிலங்களில் சிலவற்றில் விவசாய டிபார்ட்மெண்டார் போதிக்கும் முறைகளை அனுட்டிக்கலாம். அவைகள் லாபகரமாயிருந்தால் இதர குடிகளும் அம்மாதிரி செய்து லாபமடையலாம். இல்லாவிட்டால் கிராம உத்தியோகத்தர்கள் இந்த சங்கத்தின் மூலமாய் தங்கள் நிலங்களில் செய்த சோதனைகளின் விபரங்களையும் பலன்களையும் விவசாய டிபார்ட்மெண்டாருக்கு தெரிவிக்கலாம். அதன்பேரில் அந்த டிபார்ட்மெண்டார் அவசியமான நடவடிக்கை நடத்துவார்கள்.

மணியகார், கர்ணம் ஒற்றுமையாய் வேலை செய்யவேண்டும். அவர்கள் தோட்டி தலையாரிகளை சகோதரர்களாக பாவித்து அவர்களை

அன்பாய் நடத்தவேண்டும். கிராமங்களில் கட்சிகள் உண்டுபண்ணக் கூடாது. ஒரு வகுப்பினருக்கும் மற்றொரு வகுப்பினருக்கும் விரோதங்களை தூண்டக்கூடாது. கிராமத்தில் கலகம் செய்வதனால் தற்காலிக லாபம் உண்டாவதுபோல் தோன்றலாம். ஆனால் அடுத்த வீட்டிற்கு தீவைக்கிறவனுடைய சொந்த வீடு எப்படி நாசமடையுமோ அம்மாதிரி கலகத்தீயை மூட்டுகிறவர்கள் அந்தத் தீயினாலே நாளடைவில் கெடுதி அடைவார்கள்.

நண்பர்களே! இந்த சங்கத்தினுடைய அபிவிர்த்தி உங்களுடைய செய்கைகளைப் பொறுத்திருக்கிறது. நீங்கள் வேலைகளைச் செம்மையாய் செய்தால் சங்கம் விருத்தியடையும். இந்த சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் லோக்கல் போர்டுகளிலும், சட்ட சபைகளிலும் மெம்பராயிருக்கும் உரிமையை நீங்கள் சீக்கிரத்தில் அடையலாம். நீங்கள் செய்யும் ஊழியத்தின் பெருமையினால் நீங்கள் கிராமத் தலைவர்கள் ஆகிறீர்கள். சர்க்கார் சட்டங்களில் மணியகாரர்களை கிராமத் தலைவரென்றும், பெரியதனக்காரரென்றும் சொல்லப்படுகிறது. உங்களுடைய வாழ்க்கை குற்றமற்றதாய் இருக்கவேண்டும்.

## தீர்மானங்கள்.

இந்தத் தாலூகாவிற்கு ஒருசங்கம் ஸ்தாபனமாகவேண்டி அதற்கு சீமான் கீழ் சிறுவாய் கிராமம் மணியம் வைத்தியநாத துரைசாமி பிள்ளையைத் தலைவராகவும். கருபூர் மணியம் சிவக்கொழுந்துப் பிள்ளையை உப தலைவராகவும், சேமங் கர்ணம் துரைசாமி பிள்ளை, சப்தரிஷி அய்யர் இவர்களை காரியதரிசிகளாகவும் மணலூர் மணியம் தங்கவேல் பிள்ளை அவர்களை பொக்கிடதாராகவும் நியமிக்க தீர்மானிக்கப்பட்டது. பிறகு அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

கிராம உத்தியோகத்தர்கள் தங்கள் தங்கள் அலுவல்களை செய்வதற்காக ஒவ்வொரு வட்டத்திற்கும் பொதுவாகச் சாவடி யிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறபடியினாலே இப்பொழுது சாவடியில்லாத வட்டங்களுக்கு தகுதியுள்ள கட்டடங்களை நிர்மாணித்துக் கொடுக்கும்படி கலெக்டரைக் கேட்டுக் கொள்ளும்படி தீர்மானிக்கிறது.

கிராம பரிபாலன விஷயமாக எல்லா சட்ட புத்தகங்களையும் விதிகளையும், ஒவ்வொரு வட்டத்திற்கும் இரண்டுகாபிகள் வீதம் சர்க்கார் செலவில் கொடுக்கவேண்டும்.

சு. மி.

(தொடரும்.)

Printed at the C. L. V. Press, Mannargudi. Edited & published by T. M. Swaminatha Mathavarayar, Mannargudi, Tanjore Dt.

34

Registered] லில்லி ஸோப் [No. M. 2950

இந்த லில்லி ஸோப் இந்தியாவில் முதல்தரமானது.

குளிப்பதற்கும் துணிகளை வெளுப்பதற்கும் பொருத்தமானது. விலை மிகவும் சரசமானது.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

R. கிருஷ்ணசாமி பிள்ளை

லில்லி சோப் பாக்டரி, 25-26 இடைத்தெரு, நாகபட்டினம்.

ஸ்ரீராமஜெயம்

K. GOVINDA CHETTY & SONS,

MANUFACTURING JEWELLERS.

Gold & Silversmiths,

Dealers in Bullion & Precious Stones,

MANNARGUDI.

Telegrams:-'AMBUJA' ——— தந்திவிலாசம்-'அம்புஜா'

கு. கோவிந்த செட்டி ஸீ சன்ஸ்,

பொன், வெள்ளி, ரத்ன நகை வியாபாரிகள்,

மன்னார்குடி.

அநேகவித நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் தயாரில் இருக்கின்றன. தயாரில்இல்லாத எம்மாதிரி வேண்டுமானாலும் ஆர்டரின்பேரில் உத்திரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

### கட்டணம்.

| | |
|---|---|
| உள்நாடு (இந்தியா, பர்மா, இலங்கை) களுக்கு ... | 2—0—0 |
| வெளிநாடு (பினாங்கு, சிங்கப்பூர், ஆபிரிகா) களுக்கு ... | 2—8—0 |
| **பாதுகாப்புக்கட்டணம்.** | |
| உள்நாடுகளுக்கு ... ... ... | 25—0—0 |
| வெளிநாடுகளுக்கு ... ... ... | 30—0—0 |
| **ஆயுள் கட்டணம்.** | |
| [illegible]நாடுகளுக்கு ... ... ... | 50—0—0 |
| [illegible]நாடுகளுக்கு ... ... ... | 60—0—0 |